கல்கி



KALKI 13.5.1962

30 காசு


AEI

ஏ இ ஐ ஸீலிங் மற்றும் டேபிள் விசிறிகள்


குளிர்ந்த அமைதியான ஆனந்தத்திற்கு

குறைந்த மின்சாரத்தில் மிகுந்த சக்தியுடன் இயங்குமாறு உருவாக்கப்பட்ட ஏ. இ. ஐ. ஸீலிங் மற்றும் டேபிள் விசிறிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட மூலப்பொருள்களைக் கொண்டு செய்யப்படுகின்றன. துல்லியமான தேர்ச்சியுடன் ஏ. இ. ஐ. விசிறிகள் தயாரிப்பதில் "இந்தியாவிலேயே மிகப் பெரிய அளவில் மின்சாரக் கருவிகள் அளிக்கும்" ஸ்தாபனத்தின் அனுபவமும், தொழில் நுட்பத்திறனும் உதவுகின்றன.

AEI இது வெறும் பண்டம் வாங்குவதல்ல; முதலீடு செய்வதாகும்



மைத்தான் ஏ.சி.
பக்ரா டி.சி. 900மி.மி., 1200மி.மி., 1400மி.மி., மற்றும் 1500மி.மி.



"டிலக்ஸ்" 400மி.மி
டேபிள் மாடல்

- பிரித்தெடுக்கக்கூடிய பாது காப்பு மூடி.
- இஷ்டப்படி மாற்றிக்கொள்ளக் கூடியது, ஆடி வீசக்கூடியது.
- துல்லியமான வடிவமும், சம அமைப்பும் உள்ள அலுமினிய விசிறித் தகடுகள்.
- மூன்று வேக அளவுகள்.
- எனாமல் மெருகிடப்பட்ட பல மாதிரிகள்.

அஸோஸியேடெட் எலக்டிரிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்

தலைமை காரியாலயம் : க்ரேஸன் ஹவுஸ், 13, ராஜேந்திரநாத் முக்கர்ஜி ரோடு, கல்கத்தா-1.
கிளைகள் : பம்பாய் புது டெல்லி சென்னை பெங்களூர் கோயம்புத்தூர் நாகபுரி.

AEI/11A.TAM

சுபகிருது, சித்திரை 30

கல்கி

மே, 13, 1962

பொருளடக்கம்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



புகையிலையின் உற்பத்தி, உபயோகம், ஏற்றுமதி இவைகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகளும், சீனாவும் இந்தியாவுமே தலைமை வகிக்கின்றன. இன்று உலகிலேயே புகையிலை விளைச்சலில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் அடுத்தபடியாக மூன்றாவது ஸ்தானம் பெற்றிருப்பது இந்தியா தான். பதப்படுத்தப்பட்ட வர்ஜீனியா புகையிலையின் ஏற்றுமதி 1959—ல் பிற நாட்டு நாணயச் செலாவணியாக 16 கோடி ரூபாய்க்குச் சற்று அதிகமாக இந்தியாவுக்குத் தேடித் தந்தது.

புகையிலையின் வரலாறு... 7



GOLDEN TOBACCO COMPANY PRIVATE LTD.

பம்பாய்—57.


பனாமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

பாரதத்தில் இத்தகைய தேசீய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT.707 TM

Greens' Adv'g



மலர் 21

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

இதழ் 41

புதிய ஜனாதிபதி

பாரத புண்ணிய பூமியின் இரண்டாவது ஜனாதிபதியாகும் பெரும் பேற்றினைப் பெற்றுள்ள டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு உளமார்ந்த நல்வாழ்த்துக்களை அளிக்கிறோம். பெரும் பொறுப்பு வாய்ந்ததாக எண்ணப்படும் இந்தப் பதவியைத் திறம்பட வகித்துத் தமக்கும், நாட்டுக்கும், இந்தப் பதவிக்குமே அவர் நிச்சயமாகப் பெருமை தேடித் தருவார் என்ற நம்பிக்கையுடன் வரவேற்கிறோம்.

'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்று சொல்லிக் கொண்டிருந்தாலும் கட்சிச் சார்பும் விருப்பு வெறுப்புமுள்ள மந்திரி சபைதான் இன்று முடியாட்சி மன்னர்களை விட அதிக அதிகாரங்களைக் கைக்கொண்டு ஜனநாயகத்தை வெறும் ஏட்டுச் சுரைக்காயாக்கி வருகிறது. இந்நிலையில் தேசம் முழுவதற்கும் பிரதிநிதித்துவம் தாங்கும் ஜனாதிபதி, அமைச்சரவையை எவ்வாறு நிர்வகிக்க வேண்டுமென்பதற்கு ஸ்ரீ ராதாகிருஷ்ணன் ஒரு நல்ல உதாரணமாக விளங்குவாராக.

"அறிவுடையவர்கள் தனக்குக் கூறுவதைப் பொருட்படுத்தாது அழிப்பதோடு, ஓர் அரசன் தானும் அறிவற்றவனாக இருந்தபோதிலும், உறுதியாக இருந்து அவனுக்கு நீதி புகட்ட வேண்டியதே அமைச்சர் கடன்" என்றார் பொய்யாமொழிப் புலவர்.

அறிகொன்(று) அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்

ஆட்சி அதிகாரத்தை அரசனே கைக் கொண்டிருந்த காலத்தில் வள்ளுவர் அமைச்சருக்குக் கூறிய இந்த நல்லுபதேசமே இன்று ஜனாதிபதிக்கும் பொருந்தும். இயற்கைப் பண்பாலும், சர்வமத சமரஸ உணர்வாலும், ஏற்கெனவே ராஜ்ய சபையின் தலைவராக இருந்த அநுபவத்தாலும் நடுநிலைமைக்குப் பெயரெடுத்துள்ள டாக்டர் ராதாகிருஷ்ணன் குறள் காட்டும் இவ்வழியினைப் பின்பற்றுவார் என நம்புகிறோம்.

'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்ற லோகாயத மனப்பான்மை வலுப்பெற்று வரும் அரசாங்கத்தில் சிறந்த தத்துவப் பேராசிரியராகிய ராதாகிருஷ்ணன் அவர்கள் அங்கம் வகிப்பதனால் அங்கே ஆன்மிக நம்பிக்கையும், அற நாட்டமும் பெருகும் என்று உறுதி கொள்கிறோம். உலக அரங்கில் மெய்ஞ்ஞானத்தின் குரலை ஒலித்துத் தனி இடம் பெற்ற நம் தாய்த் திருநாட்டுக்கு அந்தப் பெருமையை வலுப்படுத்தித் தர டாக்டர் ராதாகிருஷ்ணன் திண்ணமாக உதவுவார்கள் என்றும் எதிர்பார்க்கிறோம்.

இந்திய நாடு ஒன்றே என்ற ஐக்கிய உணர்வுக்கு உருவகமாக உள்ளவர் ஜனாதிபதி. எந்த ஜனாதிபதிக்குமே இது பொருந்துமென்றால் டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கோ விசேஷமாகப் பொருந்தியிருக்கிறது. எதிர்க் கட்சிகள் பலவும் அவரது அபேட்சையை ஆதரித்திருப்பதே இதற்குச் சான்று. இந்நாட்டின் முதல் பிரஜையாகும் அவர் உலகப் பிரஜையாகவே மதிக்கத்தக்கவர். எனினும், அவர் நமக்கு அண்மையிலுள்ள ஆந்திர மாதா அளித்த அருமைப் புதல்வர்; தெய்வத் தமிழகத்தையே தாயகமாகக் கொண்டு நீண்டகாலம் வாழ்ந்தவர் என்பதிலும் நாம் தனிப் பெருமிதம் கொள்ளத்தான் செய்கிறோம். அந்தப் பெருமிதத்தோடு, அவர் நீடு வாழ இறைவனை வேண்டுகிறோம்.

பிரியாவிடை

இந்தியக் குடியரசின் முதல் ஜனாதிபதியாக நற்பணி புரிந்த டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் அவர்கள் பதவியிலிருந்து விலகி ஓய்வு பெறுகிறார்கள்; பிரியா விடை தருகிறோம்.



பிரசாத் அவர்கள் விஷயத்தில் இவ்வாறு விடை அளிப்பதும் கூட ஒருவிதத்தில் பொருத்தமில்லாமல்தான் தோன்றுகிறது. ஏனெனில், அவர் வகித்து வந்த பெரும் பதவியோ, அவருடைய புலமையைக் குறிக்கும் டாக்டர் பட்டமோ அவரை ஒரு நாளும் இந்த நாட்டின் ஏழை எளிய மக்களிடமிருந்து பிரிக்க முடியவில்லை; பிரிக்கவும் முடியாது. அடக்கம், எளிமை, சாந்தம், சாத்துவிகம் ஆகிய குண நலன்களைக் குறைவறப் பெற்றுள்ள அவர், பிரத்தியேக வாழ்வு என்பதாக ஒன்று இல்லாமல் நாட்டின் நல்வாழ்வுக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர். எனவே அவர் ஆட்சி பீடத்தில் இருந்தால் என்ன, இல்லா விட்டால் தான் என்ன? ஜனாதிபதியாக இல்லாவிட்டாலும் இப் பெருமகனார், மக்கள் அன்புடன் பழகி மகிழும் ராஜன்பாபுவாக இருந்து காந்திய நெறிகளைப் பரப்பி நாட்டுக்கு என்றும் நன்மை புரிந்து வருவார். ஜனாதிபதி என்ற முறையில் அவர் உட்பட்டிருந்த சில கட்டுப்பாடுகள் நீங்கி விட்டதால் ஆட்சியாளர்கள் பிழை செய்யும்போது அதனை எடுத்துக் கூறவும் இனி அவர் உதவலாம் என்பதே நம் விருப்பம். ராஜன்பாபு நல்ல ஆரோக்கியம் பெற்று, நாட்டைப் பீடித்துள்ள நோய்களுக்கும் பரிகாரம் காண ஆண்டவன் அருள் புரிவானாக!


அரிய வாய்ப்பை இழக்கலாகுமா?

தர்மத்தின் வலிமை படைபலத்தை விடப் பெரிது என்பதைச் சந்தேகமற நிரூபித்துக் காட்டினார் அண்ணல் காந்தி. ஆனால் அதனைக் கைக்கொள்ள வேண்டிய ஓர் அரிய வாய்ப்பை நமது பிரதமர் கை நழுவ விட்டிருக்கிறார்.


அணுகுண்டுகளைத் தயாரிப்பதில் தான் ருஷ்யாவை விடப் பின்தங்கிவிடவில்லை என்பதை உலகுக்கு எடுத்துக் காட்ட அமெரிக்கா சர்வதேசங்களுக்கும் பொதுவான பஸிபிக் மாகடலில் ஒரு பகுதியை வரம்புகட்டி ஆக்கிரமித்து அணு குண்டுகளை வெடித்து வருகிறது. இந்தச் சோதனைத் தொடர் தடையாறது நிறைவேறினால் வாயுவும் ஜலமும் விஷமயமாகி உலகச் சூழல் எவ்வளவு பாதிக்கப்படும், எத்தனை தலைமுறைகளுக்குக் கருச் சிதைவையும் அங்கவீன முற்ற சிசுக்களையும் நாம் காண நேரிடும் என்பதை விஞ்ஞானிகள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதை எண்ணினாலே உள்ளம் பதறுகிறது.

இந்த அக்கிரமத்தை இதுவரையில் வேறு எவ்வழியாலும் தடுக்க முடியாததால் பேரறிஞர் பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் தற்போது ஒரு புது உபாயத்தைப் பரீட்சை செய்து பார்க்குமாறு தூண்டுகிறார். அதாவது, எந்த ஒரு வல்லரசுக் கோஷ்டியையும் சார்ந்திராத நடுநிலைமை நாடுகள் சோதனை ஸ்தலத்துக்குத் தங்கள் கப்பல்களை அனுப்பி வைக்க வேண்டும்; அமெரிக்காவின் அக்கிரம ஆக்கிரமிப்புக்கு சாத்வீக எதிர்ப்பு செய்ய வேண்டும் என்கிறார். காந்திஜியுடன் சாத்வீக எதிர்ப்பில் பழகிய ஸ்ரீ ஜவாஹர்லால் அவர்களுக்கு ஏனோ இது புரிய மாட்டேன் என்கிறது.

பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் அவர்கள் யோசனையைத் தாம் ஒப்புக் கொள்ளாமல் காந்திஜி நினைவு ஸ்தாபனம் என்ற


ஏக போகம் எல்லாம் அந்த இடத்தில் தானே!
ஏக போகமும் கூடாது
தனியார்
பப்ளிக் ஸெக்டர்
ஸ்டேட் ட்ரேடிங்
Rath

நிழலைச் சுடுகிறார் !


ஹிந்தி வெறி
திராவிட நாடு கோரிக்கை
PK

'அநாதை ஆசிரமத்துக்கு' அதனை அனுப்பி வைத்து விட்டார் நேருஜி. தம் விருப்பப்படி அரசியல் நிர்ணயச் சட்டத்தை மாற்றியும், பறிமுதல் சட்டங்களுக் கெல்லாம் பாராளு மன்றத்தின் அநுமதியைப் பெற்றும் வந்த பிரதமர், சோதனை ஸ்தலத்துக்குக் கப்பல் அனுப்புவதற்கு மட்டும் சட்டமும், மன்றமும் இடம் தராது என்பது போலப் பேசுகிறார். நமக்கு ஒரு தொடர்பு மில்லாத காங்கோவுக்குப் படைகளை அனுப்பி வைத்தவர், இந்தியா உட்பட எல்லா நாடுகளையும் பாதிக்கும் அணு ஆயுத சோதனையை முறியடிக்க சாத்வீக எதிர்ப்புக் கப்பல் அனுப்புவதற்குத் தயங்குகிறார். இது நமக்கு மட்டுமல்ல, உலகுக்கே பெரிய துரதிருஷ்டம்தான்!

இலங்கைத் தமிழர்களுக்கு அநீதி

இலங்கைவாழ் தமிழ் மக்களின் தலைவலி நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறதே தவிர குறைவதாகக் காணோம். சில மாதங்களுக்கு முன்புதான் தேசியக் கல்விக் கமிஷன், பிரஜா உரிமை இல்லாதவர்களின் குழந்தைகளுக்குத் தமிழ் மொழி மூலம் கல்வி கற்பிக்க வேண்டிய பொறுப்பை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியதில்லை என்று சிபாரிசு செய்து ஓர் அதிர்ச்சியை உண்டாக்கிற்று. இப்பொழுது இலங்கைப் பிரஜைகளின் பட்டியல் ஒன்று தயாரிக்க ஒரு மசோதாவை அந்நாட்டு அரசாங்கம் உருவாக்கியுள்ளது. இதன் மூலம் பிரஜைகளை இலங்கைப் பிரஜைகள் என்றும் பிரஜைகள் அல்லாதவர் என்றும் தரவாரியாகப் பிரிக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இந்தப் பட்டியலே இரண்டு பகுதிகளாக இருக்கும். இலங்கைப் பிரஜைகளுக்கு ஒரு பட்டியல். இலங்கைப் பிரஜை அல்லாதார்களுக்கு ஒரு பட்டியல். இந்திய வம்சாவளியினர் சுமார் பத்து லட்சம் பேர்கள் அங்கே வசிக்கின்றனர். தலைமுறை தலைமுறையாக வசிக்கும் இவர்களுக்கு சட்டரீதியாக இலங்கை பிரஜா அந்தஸ்து அளிக்கப்படாமலே இது வரையில் இலங்கை அரசாங்கம் சாக்குப் போக்குகள் சொல்லி வந்திருக்கிறது. பிரஜா உரிமை பெற அவர்களுக்குப் பூரண உரிமை உண்டு. இதை முன்னாள் அரசாங்கமே அங்கீகரித்துள்ளது. அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கவும், வேலை வாய்ப்புகள் கிடைக்கும்படி செய்யவும் உரிய முறையில் சட்டங்கள் இயற்றப்படும் என்று கூட உறுதிமொழிகள் அளிக்கப்பட்டுள்ளன. எனினும் அவர்கள் பிரஜா உரிமை கோரி கொடுக்கும் மனுக்கள் எல்லாம் நிராகரிக்கப்பட்டே வருகின்றன. இப்போது கொண்டு வரப்பட்டுள்ள மசோதாவின்படி அவர்கள் எல்லாரும் 'பிரஜைகள் அல்லாதார்கள்' என்று பிரிக்கப்படுவதுடன், அவர்கள் ஒவ்வொருவருக்கும் அடையாளச் சீட்டுகள் வழங்கப்படும். அவற்றையும், தங்கள் புகைப்படங்களையும் அவர்கள் எப்போதும் உடன் வைத்திருக்க வேண்டும். அவர்கள் அரசாங்கத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். மசோதா சட்டமானதும், இத்தகையோர்கள் 'அயல் நாட்டினர்களாக' ஆகி விடுவர். பிரஜா உரிமை அந்தஸ்து இல்லாமல் வாழும் நிலைமையைவிட 'அந்நியர்கள்' என்று கருதப்படுவது மோசமான நிலை என்பதை எடுத்துச் சொல்லத் தேவையில்லை.

உண்மையில் இவர்கள் எல்லோரும் இலங்கைப் பிரஜைகளே. சட்டப்படி இவர்கள் பிரஜைகளாக அங்கீகரிக்கப் படவில்லை என்றால் தவறு சட்டத்திலும் அதை அமுல் நடத்தும் அதிகாரிகளிடத்திலும்தான் இருக்கிறது. இந்திய வம்சாவளி மக்களிடம் இல்லை. நாடற்ற மக்களின் பிரச்னையைத் தங்களுடைய செய்கைகளினாலேயே தோற்றுவித்த இலங்கை சர்க்கார் விரைவில் அதைத் தீர்த்து வைக்கவேண்டியது அவசியம் என்பதை உணர்ந்தாலும், இப்போது உத்தேசித்துள்ள முறையில் முடிவு காணப் பார்ப்பது ஒருதலைப்பட்சமாகும்; நியாய மற்றதும் ஆகும். ஜூலை மாதத்தில் பாரதப் பிரதமர் நேருஜி அங்கு விஜயம் செய்யவிருக்கிறார். அவர் செல்லும் முன்னரே இந்தச் சிக்கலான பிரச்னையைத் தங்கள் இஷ்டம் போல் தீர்த்துக் கொண்டு, ''விவகாரம் முடிந்து விட்டது'' என்று சொல்லிவிட இலங்கை சர்க்கார் திட்டமிட்டிருப்பதாக எண்ணத் தோன்றுகிறது. இதில் உள்ள அநீதியை இலங்கையில் உள்ள இந்தியப் பிரதிநிதி அரசாங்கத்துக்கு எடுத்துச் சொல்லி, இந்தப் பிரச்னைக்கு நியாயமான முறையிலும் நெடுநாளைய இந்திய — இலங்கைத் தொடர்புகளுக்கு உகந்த முறையிலும் நிலையான தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளுவது அவசியமாகும்.

அநுதாபமும் அன்புமே அத்வைதம்

மக்களின் ஆனம வளர்ச்சியைப்பற்றி இரண்டு சித்தாந்தங்கள் உண்டு. 'வான் கோழி மயிலாகுமா? பிறவிக் குணங்கள் மாறுமா?' என்பது ஒன்று. மற்றது, தீயவர்களாகத் தோன்றுபவர்களையும் நல்வழிப்படுத்த இயலும் என்பது. இரண்டாவது சித்தாந்தத்தின்படி ஒவ்வொருவனும் இயற்கையில் உத்தம குணம் உடையவன். 'பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்றே; எத்தகைய ஜீவனும் முயற்சி செய்தால் பரம நிலையை அடையலாம்' என்று கூறும் அத்வைத சாஸ்திரம் இந்தச் சித்தாந்தத்தின் எல்லை நிலமாகும். உபநிஷதம் கூறும் இந்த உண்மைக்கே சவிஸ்தாரமாக விளக்கம் தந்தார் ஆதி சங்கரர். காந்தி அடிகளும் மனிதனின் இயற்கையான நல்லியல்புகளை நம்பியே வாழ்ந்து உபதேசித்தார்.

ஃ ஃ ஃ

தன்னைப் பிற ஜீவன்களிலும், அதே போல் பிற ஜீவன்கள் எல்லாவற்றையும் தன்னிலும் பார்ப்பதே அத்வைதம்; அதாவது பிரம்மத்தை எல்லாமாகவும், எல்லாவற்றையும் பிரம்மமாகவும் உணர்வதே அது. இதற்கு எவ்வளவோ ஒழுக்கங்களும், இடைவிடாத சாதனையும், பற்றற்ற மனப்பான்மையும், தியாக புத்தியும் தேவை. அப்படி வாழ்ந்த முனிவர்கள் இந்த சத்திய தத்துவத்தை ஓர் ஒப்பற்ற பிதுரார்ஜித செல்வமாக நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள். ஆனால் அது இன்று புதையல் சொத்துப் போல் நம் கண்ணிலிருந்து மறைந்து நிற்கிறது. புதையலைத் தோண்டி எடுத்தால் நமக்கே உரிய அந்தச் செல்வத்தை இன்றும் நாம் அநுபவிக்கலாம்; துயரங்களைக் களைந்து கொள்ளலாம்.

ஃ ஃ ஃ

அத்வைதப் பிதுரார்ஜிதம் பெற்றிராத மற்ற நாடுகளைவிட இன்று நாம் அதிகமாக அஞ்ஞான இருளில் தடுமாறுகிறோம். உலகமெங்கும் ஆனந்தத்தைப் பரப்பும் தத்துவத்தைப் பெற்ற நாம் பரஸ்பரபயத்தாலும் விரோதத்தாலும், கெட்ட எண்ணங்களாலும் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்கிறோம். ஈசோபநிஷத ரிஷி சொன்னது போல் ஒருவன் தன்னைச் சுற்றியுள்ள எல்லா ஜீவன்களிலும் தான் இருப்பதாகவும், தன்னில் அவை எல்லாம் இருப்பதாகவும் கண்டு விட்டால் எதவிடமேனும் அவன் வெறுப்புக் கொள்வானா? எல்லாம் தன்னிலேயே ஒன்றிவிட்டதைக் கண்டவன் எதைக் கண்டு மயங்குவான்? அவனுக்கு எதனால் துக்கம் விளையும்? பயமும், துன்பமும், மாயையும் அவனைத் தொடுமா? இல்லை என்கிறது உபநிஷதம்.

ஃ ஃ ஃ

பிறப்பினால் இந்தியர் எல்லோருமே அத்வைத மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று வைத்துக் கொள்ளலாம். ஆனால் அதன் குறிக்கோளிலிருந்து நாம் வெகு தூரம் பின்தங்கி நிற்கிறோம். குறைபாடுகள் மலிந்த நம்மால் நாமும் பரம்பொருளும் ஒன்று என்ற இலட்சியத்தை அடைவது எளிதல்ல. ஆனால் அறிவு விளக்கத்தைத் தேடிச் செல்லும் போது இந்த மார்க்கத்தில் நம்மால் எவ்வளவு தூரம் செல்ல முடியுமோ அவ்வளவுக்குச் செல்வோமாக. அநுதாபமும் அன்புமே கையிலடங்கும் அத்வைதம். 'பரமாத்மாவே நான்' என்ற நிலையை அடைய முடியா விட்டாலும் நம்மைச் சுற்றியுள்ள எல்லோரையும் நம் உயிர்களாகவே பாவித்து அவர்களுடன் ஒன்றிப் போக முயலுவோம். நம் பயத்துக்கோ, வெறுப்புக்கோ அவர்கள் பொருளல்ல என்ற அறிவு பெறுவோம். மக்களைப் புரிந்து கொள்வதும், அநுதாபத்துடன் நடப்பதும் ஒரு மகத்தான புனிதக்கலை. பிறருடைய தாபத்தை நம்முடையதாகவே உணர்ந்து, அந்தத் தாபத்தை அநுபவிப்பதே உண்மையான அநுதாபமாகும். முயற்சி செய்தால் அதை நாம் ஒவ்வொருவரும் அப்பியசிக்க முடியும். எனவே மக்களோடு பழகும் போது பயமோ, ஐக்கியக் குறைவோ தோன்றினால் அப்போது அவர்களுடைய உடலிலேயே நாமும் வசிப்பதுபோல் ஒன்றிப் போய் அவர்களுடைய கோணத்திலிருந்தே எல்லாப் பிரச்னைகளைப் பார்ப்போம். அன்பினால் அவர்களை நல்வழிப் படுத்துவோம்.

இந்த அநுதாபமும், ஐக்கிய பாவ முயற்சியுமே யோகம். தம்மை யோகிகள், வேதாந்திகள் என்றெல்லாம் சொல்லிக் கொள்ளாத பல உத்தமர்கள் இன்றும் இந்த யோகத்தைப் புரிந்துவருகிறார்கள்.

ராஜாஜி

இந்த உலகம் இன்னும் வனாந்தரமாகவில்லை என்றால் அதற்கு இந்த மகான்களே காரணம்.

ஃ ஃ ஃ

யோஸாவஸௌ புருஷ:
ஸோஹமஸ்மி

'அதோ அங்குள்ளவனும் நானும் ஒருவனே' என்று மகாமந்திரம் உபதேசித்தார்கள் ரிஷிகள். நம் கண்ணுக்குப் புலனாகும் சூரிய மண்டலத்தில் உறைந்து பயிர் பச்சைகளுக்கும் நமக்கும் வாழ்வளித்துக் காத்து வரும் சூரிய நாராயணனைக் குறித்து மட்டும் ரிஷி அவ்விதம் சொல்லவில்லை. உலகில் நம்மைச் சுற்றியுள்ள ஒவ்வொரு பொருளிலும் அவ்விதமே பரமபுருஷனைக் கண்டு அவற்றையும் தாமாகக் கண்டார். நம்மைச் சூழ்ந்துள்ள யாவரும் நம்மை அன்றி வேறில்லை. ஒரே பொருளானது பல கண்ணாடிகளில் பல பிரதி பிம்பங்களைத் தோற்றுவிப்பது போல் ஒன்றேயான பரம்பொருள் பல உடம்புகளிலும் பல உயிர்களாகத் தோன்றுகிறது. இதை உணர்வதற்கு ஹடயோகமும், பாண்டித்தியமும் தேவையில்லை. அன்பையும், அநுதாபத்தையும், அமைதியான மனநிலையையும் தினந்தோறும் பயின்று வந்தாலே இந்த உண்மையை உணர்வோம்; மறைந்து போன புதையலை மீண்டும் பயனுக்குக் கொண்டு வருவோம்.

தத்துவம் புதைந்து போகும் நிலைகளிலெல்லாம் ஆசாரியர்கள் தோன்றி அதைக் காத்து, வலுப்படுத்தித் தந்தார்கள். அந்த அத்வைதத்தைப் புரிந்துகொண்டு, இயன்ற அளவுக்குப் பின்பற்றுவதே ஆசாரியருக்கு உகந்த ஜயந்தி ஆராதனையாகும்.

ஆசாரியர் அவதாரம்

பாபநாசம் சிவன்

பல்லவி

திருக்குமரனாய் அவதரித்தார்
திருக் கயிலையகன்று சிவகுரு ஆர்யாம்பாள் (திருக்)

அனுபல்லவி


இருக்குமுதல் சதுர்மறைகள் தழைக்க—ஸகல
ஜகத்குருவே சங்கர ஜயஜய வென்றழைக்கத் (திருக்)

சரணம்

நாஸ்திகப் பங்கமலைக்குச் சூறாவளியென
நரர்கள்இதய இருளற எழுசுடரென
ஆஸ்திகமதப் பயிர்செழிக்க எழுமுகிலென
ஆதியந்தமில்லாத சிவன் காலடியில் அந்தணத் (திருக்)



ஜய ஜய சங்கரா



ஞாயிற்றைச் சங்கிலியால் அளக்கல் ஆமோ?
ஞானகுரு புகழினை நாம் வகுக்கல் ஆமோ?
ஆயிரம் நூல் எழுதிடினும் முடிவுறாதாம்;
ஐயனவன் பெருமையை நான் சுருக்கிச் சொல்வேன்.

—பாரதி அறுபத்தாறு

1. பேரின்பம் பெற்ற பிறவி

எழில் வளம் கொழிக்கும் மலையாள தேசம். மலையாள மொழியே தோன்றாததால் அந்தப் பகுதியும் தமிழகத்தின் ஒரு பாகமாகவே திகழ்ந்த காலம். தென்மொழியென்ற தேன் மொழியும் வடமொழியாம் வாடா மொழியும் அப்பகுதி மக்களின் நாவில் இணைந்து வளர்கின்றன. தமிழ் மொழியில் ஆலவாய்ப் புழை என்றும் வட மொழியில் சூர்ணா நதி என்றும் அவர்கள் கூறும் இனிய சிற்றாற்றின் கரையில் ஒரு ரம்மியமான கிராமம். பெரியோர்கள் கால் அடிபட்டுப் பட்டுப் புனிதமானதால் காலடி என்றே அதற்குப் பெயர். அங்கே செல்வத்தாலும், கல்வியாலும், சீலத்தாலும் சிறந்து விளங்குகிறார் சிவகுரு என்ற அந்தண உத்தமர். அவருடைய இல்லத்திலுள்ள பூஜாகிருகம் கேரளத்தின் செழிப்பையும், அவரது பக்தியின் செழிப்பையும் ஒருங்கே எடுத்துக் காட்டுகிறது. இறைவனுக்கு நிவேதனம் செய்த கதலியும், தேங்காயும், மலரும் கூடை கூடையாக அங்கே குவிந்துள்ளன.

ஆனால் அவற்றை நோக்கியபடியே அடுக்களையில் உணவு உட்கொள்ளும் அந்த வேத விற்பன்னர் மட்டும் இந்தச் செழிப்பைப் பற்றி எண்ணி மகிழவில்லை. தம் இல்லத்தில் இல்லாத ஏதோ ஒரு பெரும் செல்வத்தைப் பற்றி மட்டுமேதான் அவர் உள்ளம் சிந்திக்கலாயிற்று. துயரம் நெஞ்சைக் குமுறச் செய்தது. அவர் கண் பார்வையிலிருந்து நிவேதனப் பொருட்களை மறைத்தது நீர்த்திரை. அதன் பின் உணவும் அவர் வயிற்றில் இறங்கவில்லை. தமது துயரத்தை மட்டுமே நெஞ்சு வலிக்க விழுங்கிக் கொண்டார் சிவகுரு. அவரது மனத்தை வேதனை பிசைந்தெடுத்தது போலவே கைகளும் இயந்திரமாகி உணவைப் பிசைந்தபடி இருந்தன.

தமக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்த பத்தினி ஆரியாம்பிகையுடன் உள்ளத்தைப் பரிமாறிக் கொள்ள விரும்பினார் அவர். அவரைவிட அதிகமாகவே புண்படக் கூடிய பெண்ணுள்ளமானாலும் பக்தியினால் பண்பட்டுப் பக்குவமான இதயம் அவளுடையது. எனவே தாம் யாருக்கு ஆறுதல் கூறவேண்டுமோ அவளிடமிருந்தே ஆறுதலைத் தேடினார் சிவகுரு. பேசவொண்ணாததால் பூஜை அறையை மௌனமாக அவளுக்குச் சுட்டிக் காட்டினார்.

''நல்ல பழுத்த பழம்; குழந்தைகள் ஆசையாக உண்பார்கள்'' என்று சாந்தமாகக் கூறினாள் அந்த மாதரசி.

'குழந்தைகள் ஆசையாக உண்பார்கள்!' எவ்வளவு பரந்த உள்ளம் அவளுடையது! ஊரில் உள்ள எல்லாச் சிறுவர்களுமே அவளுக்குக் குழந்தைகள்தாம். அவர்கள் யாவருக்கும் பிரசாதத்தை வழங்குவதில் அவளுக்கு அத்தகையதொரு மகிழ்ச்சி. ஏன்? சிவகுருவின் மனத்துக்கும் மிகப் பிடித்தமான காரியம்தான் அது. எனினும் தங்கள் கைகளால் விநியோகிப்பதைவிட அவற்றை இரண்டு இளம்

ரா. கணபதி

கரங்கள் வழிய வழிய எடுத்து, வாரி வாரி வழங்குமானால் எவ்வளவு அழகாக இருக்கும், அந்த அழகை அடையக் கொடுத்துவைக்கவில்லையே என்பதுதான் அவரது குறை.

எங்கே அந்தப் பாலன்? எங்கே தன் பூஜையின் பலன்? இந்தப் பழங்களைப் போல் தனது புண்ணியமும் பழுத்துத் தனக்கு ஒரு புத்திரனை அளிக்கப் போவது எப்போது?

''ஆரியா!'' என்று தம் மனைவியைக் கூப்பிட்டார் சிவகுரு.

''இதே போல எவ்வளவோ தலைமுறைகளாகக் குழந்தைகள் இந்த வீட்டுக்கு வந்து பிரசாதம் பெற்றுச் சென்றிருக்கிறார்கள். அந்த வழக்கம் என்னோடு.....''

சிவகுருவின் நெஞ்சம் பொருமியது.

''ஏன் முடிய வேண்டும்?'' என்றாள் ஆரியா நம்பிக்கையுடன். ''பிறருக்குப் பிரசாதம் வழங்க வேண்டும் என்பதே பிரார்த்தனையாக இருப்பவர்களுக்குப் பகவத் பிரசாதம் கிடைக்காமலும் போகுமா?''

''நீ சொல்கிறாய். ஆனால் எனக்கோ என் பிரார்த்தனையிலேயே நம்பிக்கை குறைந்து விட்டது. ஆசைகளை மனத்தில் வைத்துக் கொண்டிருக்கும் வரை பூஜையில் எப்படி முழு நாட்டமும் செல்லும்? அந்தப் பூஜைக்கேற்ற பலன் தானே கிடைக்கும்?'' என்றார் அவர் விரக்தியுடன்.

''அப்படியானால் நீங்கள் பூஜையே செய்ய வேண்டாமே'' என்றாள் ஆரியை சாவதானமாக.

சிவகுருவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''நீ என்ன சொல்கிறாய்?'' என்றார் கலவரத்துடன்.

''நீங்கள் பூஜை செய்ய வேண்டாம் என்கிறேன். உங்களுக்குத்தானே மனம் ஒருமைப்பட மாட்டேன் என்கிறது? ஆனால் ஒருமைப்பட்ட மனத்தோடு மற்றவர் செய்யும் பூஜையைப் பார்த்து உருகலாமே! வந்து... பல நாட்களாகவே உங்களிடம் சொல்லவேணுமென்று ஓர் ஆசை'' என்று இழுத்தாள் ஆரியா.

''ஊம்'' என்று அவளை ஊக்கினார் அவளது பதி.

''நம் சிவப்பேரூர் கோயிலில் எவ்வளவோ விசேஷமாக ஆராதனையும் அபிஷேகமும் செய்கிறார்களாமே. ஈசுவரனுக்குச் சுத்தமான நெய்யால் அபிஷேகம் செய்யும் போது மனசே நெய்யாக உருகி விடுகிறது என்கிறார்களே. அப்படிப்பட்ட ஒரு கலியுக வரதன் அந்தச் சிவப்பேரூர் அப்பன் என்கிறார்களே. அங்கேதான் போய் ஒரு மண்டலம் பஜனம் இருந்து பார்க்கலாமோ என்று எனக்கு நீண்ட நாட்களாக ஆசை. அகத்துப் பூஜையை நீங்கள் நிறுத்தமாட்டீர்களோ என்றுதான் சொல்லாமலே தயங்கினேன். அதோடு இடம் மாறி இருந்தால்கூட நல்லதென்று....''

''ஆமாம். ஆமாம்'' என்று உடனே ஆமோதித்தார் சிவகுரு.

''அகத்துப் பூஜை ஆலய பூஜை என்றெல்லாம் ஏன் பேதமாகப் பார்க்க வேண்டும்? வழி வழியாக நம் இல்லத்தில் எழுந்தருளி வழிபாடு பெறும் அதே பெருமான்தானே இன்று உன் மூலம் நம்மைச் சிவப்பேரூருக்கு அழைக்கிறான்! அகத்தையும் ஆலயத்தையும்விட மனோலயமும், அகவுணர்வும்தானே முக்கியம்! அப்படி ஒருமைப்பட்ட மனத்தோடு முனிவர்களும் சித்தர்களும் புனிதப்படுத்திய ஒரு க்ஷேத்திரத்துக்கு நான் வர மாட்டேனே என்று உனக்கு ஏன் சந்தேகம்? பூமியின் அடியில் எல்லா இடத்திலும் நீர் ஓடுவது போல் ஆண்டவன் சாந்நித்தியமும்தான் எல்லா இடங்களிலும் இருக்கிறது. ஆனால் அவற்றில் சில இடங்களில் மட்டும் அந்த சாந்நித்தியத்தைத் தங்கள் ஆத்ம சக்தியால் வெளிக் கொண்டு வந்து அருட் கிணறுகள் கட்டிவைத்திருக்கிறார்கள் நம் பெரியவர்கள். சொந்தமாக நீர் வெட்டி எடுத்துக் கொள்ளச் சக்தி இழந்த போது இந்த க்ஷேத்திரக் கிணறுகளைப் பயன்படுத்திக் கொள்ள ஏன் தயங்க வேண்டும்? அதுவும் சிவப்பேரூர் காதத்திலோ, தூரத்திலோ இல்லையே'' என்று மனைவியின் விருப்பத்துக்கு மிகவும் அநுகூலமாகப் பேசினார் சிவகுரு.

பஜனம் இருப்பது என்று முடிவாயிற்று. புண்ணிய ஸ்தலங்களுக்குச் சதிபதியாகச் செல்வது; ஒரு மண்டலம், இரண்டு மண்டலம் என்று அங்கேயே தங்குவது, திருக் குளத்தில் ஸ்நானம் செய்வது; கட்டுப்பாட்டுடன் தியானமும் தோத்திரமுமாகவே பொழுதைச் செலவிடுவது — இதுவே பஜனம். இவ்வாறு வழிபட்டால் கோரிய வரம் கிட்டும் என்பது நம்பிக்கை. அன்று போல் இன்றும் திருச் சிவப்பேரூரில் இது போலப் பஜனம் இருப்பவர்கள் உண்டு. அன்று திருச் சிவப் பேரூராக இருந்த ஸ்தலம் தான் இன்றைய திருச்சூர்.

ஃ ஃ ஃ

விருஷாசல க்ஷேத்திரம் என்று அதை வடமொழியில் சொல்வார்கள். விருஷராஜனை நந்திகேசுவரனின் உருவமாகப்

போற்றப்படும் அழகான மலையில் ஈசுவரன் கோயில் கொண்டிருந்தான்.

அந்தப் பெருமானுக்கு நடைபெறும் ஆராதனையிலேயே தோய்ந்து, துன்பம் தேய்ந்து வந்தார்கள் சிவகுரு தம்பதியர். இறைவன் நினைவாகவே காலத்தைச் செலவிட்டார்கள். பேச்சு மூச்சு எல்லாம் — கனவு நனவு எல்லாம்—சிவமாகவே இருந்தார்கள்.

ஃ ஃ ஃ

ஆம்! கனவிலும் சிவன்தான்! சிவகுருவின் கனவில் விருஷபாரூடனாகத் தரிசனம் அளித்தான் விருஷாசலேசன். அவருடைய புண்ணியம் பழுத்தே விட்டது. அந்தத் தரிசனத்துக்குப் பின் அவர் விரும்பிக் கேட்க வேண்டிய பொருள் வேறென்ன இருந்தது?

ஆனால் விருஷாசலேசன் சிவகுருவின் புண்ணியம் பலிதமாவதோடு மட்டும் திருப்தி கொள்ளவில்லை. பாரத பூமியைப் புண்ணிய பூமி என்று பெயர் பெறச் செய்த எல்லாத் தவ முனிவர்களும் ஆன்மஞானியர்களும் அடியார்களும் செய்திருந்த புண்ணியமும் பழுக்கத் தருணம் வந்துவிட்டது என்று கருணை கொண்டான் ஈசன். தேவர்கள் தன்னிடம் செய்த முறையீட்டுக்குச் செவிசாய்க்கச் சமயம் வந்து விட்டது என்று அருள் கூர்ந்தான். எனவே சிவகுருவின் முந்தைய விருப்பத்தை ஈடேற்றுவதாக அவனாகவே திருவாய் மலர்ந்தான். அவருக்குப் பிள்ளை வரம் அளித்து விட்டதாக மங்கள வாக்கைக் கூறினான் மங்களரூபன்.

ஆனால் மங்களவாக்கை ஒட்டியே ஒரு விநோதமான நிபந்தனையும் விதித்தான். ''அறிவும், அருளும் நிரம்பிய—ஆனால் ஆயுள் குறைவான—ஒரு மகனை உனக்கு அளிப்பேன்; அல்லது நீண்ட ஆயுளும் குறைந்த அறிவும் உள்ள பல புத்திரர்களைத் தருவேன். இவற்றில் எதைத் தேர்ந்தெடுப்பது என்று தீர்மானம் செய்து கொள்'' என்றான்.

இந்த விசித்திரமான நிபந்தனைக்கு என்ன விடை அளிப்பது என்று தெரியாமல் குழம்பினார் சிவகுரு.


அவர் என்ன விடை கூறினாலும் அதைக் கேட்க அந்த விடையேறும் வித்தகன் அங்கில்லை. சிவகுருவுக்கு நித்திரை கலைந்து விட்டது. ஆனால் கனவில் பெற்ற குழப்பம் மட்டும் நனவிலும் தொடர்ந்தது. மனைவியை எழுப்பி அவளிடம் எல்லாவற்றையும் சொல்லி யோசனை கேட்க எண்ணினார் சிவகுரு.



அந்தச் சமயத்தில் ஆரியாம்பிகையே அவரைத் தொட்டு எழுப்பியதும் அவருக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. அவள் கூறியதைக் கேட்டதும் அந்த ஆச்சரியம் அதிகமாயிற்று.

அவளும் அதே போலக் கனவு கண்டிருக்கிறாள். இறைவன் நல்ல வேடிக்கைதான் செய்திருக்கிறான்! தங்களுடைய மன முதிர்ச்சியையும், அந்நியோந்நியத்தையும் சோதிக்க விரும்பித்தான் தனித் தனியாக இருவர் கனவிலும் தோன்றி இப்படி நிபந்தனை போட்டிருக்கிறான். ஆனால் உடனேயே தங்களுடைய பரஸ்பர அன்பைச் சந்தேகித்தது அவனுக்கே பொறாததால் தங்கள் உத்தரத்தைக் கேளாமலே மறைந்தும் விட்டிருக்கிறான்.

''இந்திர ஜாலமெல்லாம் செய்கிறான் ஈசுவரன். அவனுடைய தரிசனம் இலேசில் கிடைக்கக் கூடியதா? அந்தப் பாக்கியத்தை அளித்து விட்டு, அதே சமயத்தில் அதன் பெருமையை எண்ணி வியக்கக் கூட முடியாதபடி ஒரு வரத்தையும் கொடுத்து விட்டான். வரத்திலும் ஒரு விளையாட்டுச் செய்து விட்டான். அவனுக்கு விளையாட்டானாலும் அதில் தவறினால், நமக்கு விபரீதம்தான் சம்பவிக்கும். பெறமாட்டாத ஓர் அருமைக் குழந்தையை அற்பாயுளில் இழக்க வேண்டுமாம்! இல்லாவிடில் ஓர் அசத்துக் கூட்டத்தை நமக்குப் பிரதிநிதிகளாக விட்டுச் செல்ல வேண்டுமாம்! எப்படி முடிவு செய்வது என்றே தெரிய



வில்லையே. உனக்கு என்ன தோன்றுகிறது?'' என்று கேட்டார் சிவகுரு.

''நீங்கள் எண்ணுவதுபோலவே எனக்குத் தோன்றவில்லை'' என்று ஆழ்ந்த, அமைதியான குரலில் கூறினாள் ஆரியை. தொடர்ந்து, ''முடிவு செய்ய நாம் யார்? உண்மையான பக்தி உள்ளவர்களிடம் சுவாமி நிபந்தனையே விதிக்க மாட்டார். நாமும் பக்தி உள்ளவர்கள் என்பதை நிரூபித்து அந்த நிபந்தனையையே இல்லாமல் செய்து விட வேண்டும்....புரியவில்லையா? இது வேண்டுமா அது வேண்டுமா என்று கேட்பதுதானே ஆண்டவனுடைய நிபந்தனை? வேண்டும், வேண்டாம் என்று தேர்ந்தெடுக்க நாங்கள் யார்? நீ எதை நினைக்கிறாயோ, உசிதமென்று கருதுகிறாயோ அதையே செய்' என்று அவனுக்கே நிபந்தனையைத் திருப்பிவிட்டால் பொறுப்பு அவனைச் சேர்ந்து விடுகிறது. நாம் விச்ராந்தியாக இருந்து விட்டுப் போகிறோம்'' என்றாள்.

அவளுடைய அமைதியைக் கண்டு சிவகுருவும் குழப்பம் தீர்ந்து அமைதி பெற்றார். அச்சமயத்தில் அவ்விருவரையும் விட அதிகமான அமைதியைப் பெற்றார் வேறொருவர். குழப்பங்களையெல்லாம் தீர்த்துப் பேரமைதி அருளும் கைலாசபதியே தான் அவர்.

சிவகுரு தமது தவத்துக்கு மட்டுமே பலனை எதிர்பார்த்தார். தமது இல்லத்து ஆராதனை தன்னோடு முறிவு படாது பின்னரும் தொடர வேண்டுமென்று மட்டிலுமே ஆசைப்பட்டார். ஆனால் சிவபெருமானோ இந்தத் திருநாட்டின் தவத்துக்கெல்லாம் பலனளிக்க ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தான். சந்திர மௌளீசுவர ஆராதனை மூலம் இந்த நாடு முழுவதையும் ஒரு குடும்பமாக்கி, அந்த வழிபாட்டை நிரந்தரமாகத் தொடருவதற்கு ஒரு ஞான பரம்பரையைத் தோற்றுவிக்க அவன் திருவுள்ளம் கொண்டிருந்தான்.

அந்தப் பரம்பரையின் முதல்வனாகப் பரம்பொருளான தானே பிறப்பதென முடிவு செய்திருந்தான். பிறவா யாக்கைப் பெம்மானாகிய தான் பிறந்து, அம்மா என்றும் அப்பா என்றும் அழைக்கத் தகுதி பெற்றவர்கள் யாரேனும் இந்தக் கலியில் உண்டா என்றுதான் தேடிக் கொண்டிருந்தான். கடைசியில் சிவகுரு — ஆரியாம்பிகையிடம் அத்தகைய உத்தமத் தம்பதியைக் கண்டும் விட்டான்! எனவே அவர்களைச் சோதிப்பதற்காக ஒரு சிக்கலை ஏற்படுத்தியபோது அது அவனுக்கே பிரச்னையாயிற்று.

“வேண்டத் தக்கது அறிவோய் நீ! வேண்ட முழுதும் அருள்வோய் நீ! உன் சித்தமே எங்கள் பாக்கியம்'' என்று விருஷாசலேசனின் முன் நின்று மனத்தினால் சொல்லிக் கொண்டு, சரணாகதி அடைந்தனர் அந்தச் சதிபதி.

''குணவானான ஒரே மகனை அடைவீர்கள்'' என்று அவர்கள் சித்தத்திலுள்ள சிவலிங்கம் பேசிற்று.

காலடி திரும்பிய தம்பதியர் பஜனம் நிறைவு பெற்றதை ஒட்டி சமாராதனை நடத்தினார்கள். எல்லோரும் உண்டபின் ஆரியாம்பிகை பிரசாதத்தை உட்கொண்டாள். மனம் நிறைய இறைவனை நினைத்தபடி உட்கொண்டாள். அக்கணமே அந்தப் பேரொளி அவள் வயிற்றிலும் நிறைந்தது.

எதிலும் கட்டுப்படாத அகண்ட ஆனந்தன் பக்தர்களின் மனத்தில் மட்டுமல்ல, இதோ, ஆரியாம்பிகையின் மேனியிலும் கட்டுப்பட்டுப் பத்து மாதம் குடியிருந்தான். பவ நோயைத் தீர்த்து ஞான பலத்தை அளிக்கும் பவனாயிற்றே அவன்! எனவே ஆரியை சிறிது கூட நோயின்றி, பலவீனமுமின்றி அந்தத் தேஜஸைக் காத்து வந்தாள். பத்துத் திங்களும் கழிந்தன.

நந்தன ஆண்டு. பரமானந்தம் பிறவி எடுக்க உற்ற ஆண்டுதான். ஜீவராசிகளுக்கு வளத்தை அளிக்க வேண்டும் என்ற அன்பின் சக்தியால் இயற்கை அன்னையானவள் கடும் வெப்பத்திலும் வாடாது எழில் கோலம் பூணும் வசந்த காலம். மக்களின் சம்சார வெப்பத்தைத் தீர்த்துப் பரம நிலை அளிப்பதற்காக,

தான் அந்தப் பரம நிலையிலிருந்து இறங்கி வந்து இந்த வெப்பத்தில் மலர வேண்டும் எனச் சங்கற்பம் செய்து கொண்டு விட்டான் மகாதேவன். ''வஸந்தம் போலப் பிரதிபலன் எதிர்பாராது மக்களுக்கு இதம் அளிப்பவர்கள் ஜீவன் முக்தர்கள்'' என்று பாடப் போகும் ஒரு ஜீவன் முக்தராகப் பிறக்க எண்ணம் கொண்டு விட்டான். ஞான பண்டித சுவாமிக்கு உகந்த வைசாக மாதம். அதற்கு மாதவி மாதம் என்றும் பெயர். மாதவி என்றால் மல்லிகை. வஸந்தமும் மல்லிகையைக் குறிப்பதே. ஞான மணம் பரப்பும் வெண்மையான, வெண்ணெயான உள்ளம் பெற்ற சத்துவ மூர்த்திக்கு ஏற்ற சுக்கில பட்சம். ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் ஆகிய ஐந்தொழில் புரியும் ஐந்து முகனுக்கு—ஐந்தட்சரத்தானுக்கு-பொருத்தமான பஞ்சமி. புற இருளை மட்டுமின்றி, அக இருளையும் போக்கும் சூரிய நாராயணன் உச்சியில் சஞ்சரிக்கும் நண்பகல்.

அன்று ஆதிரை நட்சத்திரம்*. 'நனைக்கப்பட்டது' என்ற பொருள் கொண்ட 'ஆர்த்ரா' என்பதன் திரிபல்லவா ஆதிரை? அதற்கிசைய, தயையால் நனைந்த பிரானை உண்மையாகவே நீராலும் நனைத்து அபிஷேகம் செய்து கொண்டிருந்தார் சிவகுரு. அண்டபிண்டம் யாவும் ஈசுவரனாகக் காணும் ஸ்ரீ ருத்ரத்தை ஜபித்தபடி திருமுழுக்காட்டிக் கொண்டிருந்தார்.

அன்று ஏனோ அவரது உள்ளமும் கண்களும் வழக்கத்தைவிட அதிகமாகவே நனைந்திருந்தன. ''சம் — அதாவது இன்பம்—எனக்கு சித்திக்கட்டும்'' என்ற மந்திரத்துடன் அபிஷேகத்தைத் தொடங்கும்போதே அவரது இதயம் கரைய ஆரம்பித்தது. 'தமக்கு வேண்டிய இன்பம் பிள்ளைப்பேறுதானே? அந்த 'சம்'மைச் செய்யும் சம்-கரன் இன்றே பிறப்பானோ?' என்று குழைந்தபடியே திருமுழுக்கைத் தொடர்ந்தார் சிவகுரு. 'இகபர இன்பங்கள் யாவும் நீயே. அந்த இன்பங்களைச் செய்யும் சங்கரனும் நீயே!'' என்று'தம்மை மறந்து அவர் மந்திரங்களைக் கூறி வரும் போது.......

ஆகா! அவருக்கு இன்பம் பிறப்பிக்கும் மைந்தன் மட்டுமல்ல; பக்தர்கள் தங்கள் பக்தியின் முதிர்ச்சியிலும், ஞானியர்கள் தங்கள் தியானத்தின் உச்ச நிலையிலும் அநுபவிக்கிறார்களே பேரின்பம் பேரின்பம் என்ற நிலையான நித்திய சுகம், அந்தப் பரமநிலையே ஒரு பாலகனாகப் பிறப்பெடுத்தது.

பிறந்து பிறந்து அழியும் மனிதக் குலத்துக்கு அந்தப் பேரின்ப நிலையினை உணர்த்தி மக்களுக்கு அமரத்துவம் அளிப்பதற்காக, அன்றும் இன்றும் என்றும் உள்ள அமர நிலையே ஓர் உருவினை அடைந்தது.

வெளி உணர்வு ஏதுமின்றித் தன்னில் தானே ஒடுங்கி ஆனந்த நிலையமாக விளங்கிய பரம்பொருள் தனது கருணையின் பெருமையினால் அந்த அநுபவத்திலிருந்து விலகி, மாந்தருக்கெல்லாம் இன்பம் அளிப்பதற்காக மனித வடிவு தாங்கியது. அந்தப் புண்ணிய முகூர்த்தத்தில்தான் அருள்



*புனர்வசு என்றும் சில சங்கர விஜயங்கள் கூறும்.

என்ற அமுதத் தத்துவமே தனது பொருளின் நிறைவைப் பெற்றது.

அருமை செய்வதற்கு ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்து விட்டாள் ஆரியாம்பிகை.

கொடுத்து வைத்தவர்களான அந்தக் கணவனும் மனைவியும் ஆனந்த பரவசம் ஆனார்கள்.

குழந்தையைக் காண வந்தவர்களில் சில சாதுக்களோ அவர்களைவிட மகிழ்ச்சி வசப்பட்டுப் போனார்கள். அவர்கள் ஒரு சாமானியமான ஆண் குழவியை மட்டும் காணவில்லை. ஆண், பெண் என்ற பேதமற்ற மூலப் பொருளே ஆண்மையின் ஆற்றலுக்கும், பெண்மையின் பரிவுக்கும் பூரணத்துவம் அளிப்பதற்காக அவதரித்திருக்கிறது என்று அவர்கள் உணர்ந்தார்கள். அந்தச் சவுந்தரியப் பெட்டகத்தின் பளிங்கு வண்ண மேனியில் உலகுக்கெல்லாம் இன்பம் பயக்கும் சங்கரனின் உருவமே பிரதிபலிக்கக் கண்டார்கள். அதன் வெண்மையைத் தூக்கிக் காட்டும் கருங்குழலின் தன்மையைப் பருகிப் பருகி ரசித்தார்கள். சீதமதியும், தண் புனலும் சூடிச் சூடிப் பழகியதால் பெற்ற குளுமை அது என்று உணர்ந்து மகிழ்ந்தார்கள். ஆத்ம தத்துவத்தைக் கைப்பிடிக்குள் வைத்திருப்பதே போல மூடியிருக்கும் குஞ்சு விரல்களை நீக்கிக் கரதலத்திலுள்ள சுவடி ஜபமாலை ரேகைகளைக் கண்டு களித்தார்கள். கண்டத்திலுள்ள கரு மச்சத்தில் விஷமுண்ட அமுத நெஞ்சனின் நினைவு பெற்று இன்புற்றார்கள். காலில் உள்ள சிறு தழும்பு காலனை உதைத்த போது உண்டான அடையாளம் என்பதையும் புரிந்து கொண்டு ஆனந்தித்தார்கள். அங்கம் அங்கமாக, அணு அணுவாக நோக்கினாலும் மேனியெங்கும் ஆனந்த ரசம் கொப்புளிக்கும் இந்தக் குழந்தைக்கு - காண்பவர்க்கும் அதேபோன்ற இன்பத்தைச் செய்யும் குழந்தைக்கு- சங்கரன் என்றே பெயரிட வேண்டும் என்று சிவகுருவிடம் கூறினார்கள்.

'நம: சங்கராய' என்று ருத்திர பாராயணத்தில் அவர் போற்றியபோது மகவு ஜனித்ததால் அவரும் அவ்விதம் தானே எண்ணியிருந்தார்!



இன்னொரு விதத்திலும் அந்தப் பெயர் குழந்தைக்குப் பொருந்தியிருந்தது. பிறந்த தினத்தை யொட்டி நாமகரணம் செய்யும் ஒரு சம்பிரதாயம் கேரளத்தில் உண்டு. அட்சரங்களைக் கொண்டு எண்களைக் கணக்கிடும் முறையில் ச(ம்)-க-ர என்ற அட்சரங்கள் முறையே குழந்தை பிறந்த ஐந்தாம் திதி, முதல் பட்சம், இரண்டாம் மாதம் இவற்றைக் குறிப்பனவாகும். ஆகவே உருவம் இல்லாத வஸ்து ஓர் உருவம் தரித்து வந்த உடனேயே, பெயரில்லாத அதற்கென்று ஒரு பெயரும் நிலைபெற்று விட்டது.

சங்கரன் பிறந்த சுப முகூர்த்தத்தில் காலடியின் சூழல் எங்கும் சுபம் சூழ்ந்தது; சாந்தி பூத்தது. ஆலவாய்ப்புழைக்கரையில் பூத்திருந்த பலப்பல மலர்களும் பலபல வென்று பிரவாகத்தில் உதிர்ந்தன. அந்த மென்மலர்கள் வாட்டமுறக் கூடாதென அலை அடங்கி ஓடியது நீரோட்டம். நீர் நிலையைத் தேடிவந்த புலியும் மானும் ஒன்றோடொன்று உரசித் தினவு தீர்த்துக் கொண்டன. வேழம் வேங்கையின் முதுகை நக்கிக் கொடுத்தது.

ஹோம குண்டங்களில் அக்கினி பிரதட்சிணமாகச் சுழன்று எரிந்தது. ஞானியரின் இதய கமலங்கள் மடலவிழ்ந்து மலர்ந்தன. பக்தர்களின் உள்ளங்கள் இனம் தெரியாத இனிமையைச் சுவைத்தன.

ஆனால் அதே ஆனந்தப் பொழுதில் சிலர் இதயத்தில் திகில் கவிந்து கொண்டது. அவர்களுடைய அறிவு ஏனோ தடுமாறியது. அவர்கள் கைகளிலிருந்த சுவடிகள் தாமாகவே கீழே விழுந்தன. இவர்கள்தாம் சங்கர ஜயந்திக்கே காரணமானவர்கள். அந்தக் காரணத்தை அறிய வேண்டுமானால் நாம் கால வெள்ளத்தில் இன்னும் சிறிதுபின் செல்ல வேண்டும். அதோடு காலடியிலிருந்து கயிலாயத்துக்குச் சென்று அங்குள்ள ஆலடியை அடைய வேண்டும். (தொடரும்)

பிரெஞ்சு காபியில் தலை சிறந்தது





ருசிக்கச் சிறந்த வகை
யில் கலவை செய்த
ப்ரூக் பாண்ட் கபே
பிராண்டு பிரெஞ்சு
காபி இப்பொழுது எங்கும்
கிடைக்கும். நறுமணத்
தையும் சுவையையும்
காக்க இவை ஸெலபோன்
பைகளில் விற்பனை
செய்யப்படுகின்றன.
பிரெஞ்சு காபியில் நல்ல
மணம், சுவை இவற்றைப்
பெற ப்ரூக் பாண்ட் காபி
யையே விரும்பிக்
கேளுங்கள். இதுவே
நீங்கள் கொடுக்கும்
பணத்திற்குச்
சிறந்தது.

ப்ரூக் பாண்ட்

கபே பிராண்டு பிரெஞ்சு காபி

JWTBB 404

நம்பிக்கையின் மறுபுறம்

பீஷ்மன்

குங்குமம் நெற்றியில் ஒட்டவில்லை. வனஜாவுக்கு ஏனோ நெஞ்சம் துணுக்குற்றது. புதிதாக முந்திய தினம் சாயங்காலம் ஆபீஸ் விட்டு வருகையில் வாங்கி வந்த குங்குமம். கொஞ்சம் பரபரவென்றிருந்தது. 'அதனால் தான் ஒட்டவில்லை' என்று அவளே அவளுக்குச் சொல்லிக் கொண்டாலும் மனத்தின் மூலையில் இலேசாக ஒரு நெருடல் ஏற்படத் தான் செய்தது. ஏன் இப்படி.....?

தன் மனமே தனக்கு இன்னும் சரியாகத் தெரிந்தபாடாக இல்லை என்றுதான் அவளுக்குத் தோன்றியது.

சிவப்புச் சாந்துப் புட்டி, மூடி திறக்கப் படாமல் அலமாரியில் இருக்கிறது. அதை எடுத்து இட்டுக் கொள்ளலாம். ஆனால் சில காலமாகவே அவளுக்கு இந்தக் குங்குமத்திலும் மஞ்சளிலும் ஒரு மோகம். அவளுடன் அதே ஆபீசில் வேலைபார்க்கும் பெண்கள்கூட அவளுடைய இந்தக் கர்நாடக மோகத்தைக் கேலி செய்து பார்த்து விட்டார்கள். தன் நினைப்புக்குத் தானே உரமூட்ட அவள் பிடிவாதமாக இந்த மோகத்தைப் பற்றிக் கொண்டிருந்தாள்.

துண்டினால் நெற்றியை அழுத்தித் துடைத்துக் கொண்டாள். அதே குங்குமத்தை இலேசாகத் தண்ணீர் விட்டுக் குழைத்து அவரை விதைத் திலகமாக நெற்றியில் இட்டுக் கொண்டாள். அவ்வளவு நன்றாக இல்லை. கண்ணாடியில் பார்த்துக் கொண்ட போது அவளுக்கே திருப்தியாக இல்லை. சிவப்புச் சாந்தை எடுத்து இட்டுக் கொண்டால் என்ன? கூடாது. அவர் வந்து சேர்ந்த பிறகு அவர் இஷ்டப்பட்டால் வேண்டுமானால் இட்டுக் கொள்ளலாம்.

ஆமாம். அவர் வருவாரா?

நினைப்பிலே விளைந்த கேள்வி நெஞ்சிலேயே கொக்கி மாட்டிக் கொண்டு நின்றது.

அவள் கேள்விக்குப் பதில் கூறும் அசரீரி போல, அடுத்த அறையில் கீதாஞ்சலி படிக்கும் அண்ணா விஜியின் குரல் கேட்டது.

''ஹி கம்ஸ், கம்ஸ், எவர்கம்ஸ்!''

அவளுக்கு மெய் சிலிர்த்தது.

'வருவார், கட்டாயம் வருவார்' என்று மெல்ல முனகிக் கொண்டாள்.

நாக்கு முனகியதா? மனசு முனகியதா? இப்படி ஓர் அனாவசியமான சந்தேகம். அதற்கு விடை காணும் முயற்சியில் உள்ளத்திலே உணர்ச்சிப் பரபரப்பு. இதுபோல் எத்தனை எத்தனையோ சந்தேகங்கள். எத்தனை எத்தனையோ சமாதானங்கள்.

ஆயினும் அவள் பிடிவாதமாக அவர் வருவார் என்றுதான் நம்பிக் கொண்டிருந்தாள். அந்தப் பிடிவாதம் அளித்த தெம்பிலேதான், மேசை மீது வாழை இலையில் கருட்டி வைத்திருக்கும் மல்லிகைச் சரத்தை எடுத்துத் தலையில் சூட்டிக் கொள்கிறாள்.

'பிச்சோடா'வுக்கு மேல் வளைவாகப் பூவை வைத்துக் கொண்டு கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கையில் கண்ணில் ஊசி குத்தினாற்போல் இருந்தது. பக்கத்து வீட்டு விசாலம் மாமி வாசல் நிலையில் நின்று கொண்டு அவள் பூ வைத்துக் கொள்வதை ஏளனப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் முகமும் அந்தப் பார்வையின் குதர்க்கமும் வனஜாவை எரித்தன.

''வாங்கோ மாமி!'' என்று வலிந்து புன்னகையை வரவழைத்துக் கொண்டு திரும்பினாள்.

''எங்கே? சினிமாவுக்கா?''

அந்தக் கேள்வியின் உள்ளே தொனித்த கேலி அவளுக்குப் புரிந்தது. அவள் அதைப் பொருட்படுத்தவில்லை.

''இல்லை, மாமி! இன்றைக்கு வெள்ளிக் கிழமையில்லையா? கோவிலுக்குத்தான்.''

''ஓஹோ!....''

''உள்ளே வாங்களேன்.''

''இல்லை. சும்மாத்தான் வந்தேன். நீதான் கோவிலுக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறாயே!......''

வந்தவள் சொல்லிக் கொண்டே போய் விட்டாள். எதையோ வேவு பார்ப்பதைப் போல இவர்களெல்லாம் ஏன் அவளைப் பார்க்கிறார்கள்?

'இந்தப் பூவும் மஞ்சளும் குங்குமமும் நான் தீண்டத் தகாத பொருள்கள்தானோ? ஐயோ! கடவுளே !'

எந்த ஏளனத்தையும் அவளால் தாங்கிக் கொள்ள முடிந்தது. தனக்குள்ளிருந்தே கிளம்பும் இத்தகைய கேள்விகளையும் அவை தரும் வேதனையையும்தான் அவளால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. எவ்வளவுதான் உறுதியோடிருந்தாலும் இம்மாதிரி நினைப்புக்களுக்குத் தடை போட முடியவில்லையே. என்ன செய்வது....?

''அண்ணா! இங்கே வந்து உட்கார்ந்து படியேன். வீடு திறந்து கிடக்கிறது. நான் கோவிலுக்குப் போய் விட்டு வருகிறேன்.''

அண்ணாவிடம் சொல்லிக் கொண்டு கையில் பையுடன் கிளம்பி விட்டாள் அவள்.


''சீக்கிரம் திரும்பி விடு, வனஜா!''

அவளுக்குப் பின்னாடியே வந்து வாசல் கதவைத் தாழ் போட்டுக் கொண்டு சென்ற அண்ணாவை ஆதூரத்துடன் பார்த்தாள் அவள்.

அவளுடைய நம்பிக்கையை நம்புகிறவன் அவன் ஒருவன்தான் இந்த உலகத்திலேயே. எத்தனையோ கவலைகள் இருந்த போதிலும், எத்தனையோ துன்பங்கள் சூழ்ந்த போதிலும் இத்தகைய அன்பின் வடிவமான அண்ணனைப் பெற்ற வரையில் தன்னைப் பாக்கியசாலியாக நினைத்துக் கொண்டாள் அவள்.

கோவிலில் கூட்டம் நெரிந்தது. இன்னும் சற்றுச் சீக்கிரமாகவே கிளம்பியிருந்தால் நல்லது என்று நினைத்துக் கொண்டாள். எப்படியோ ஒரு வழியாக அர்ச்சனையை முடித்துக் கொண்டு புறப்பட்டாள். கோவிலுக்குள் நுழைந்தது முதல் ஓயாமல் அவள் மனம் 'அவரைக் கொண்டு வந்து சேர்த்து விடு,

அம்பிகே!'' என்றுதான் வேண்டிக் கொண்டிருந்தது. அம்மன் சந்நிதியில் நிற்கும்போது அவளையறியாமலே அவள் கண்கள் கலங்கி விட்டன. 'என்னை ஏமாற்றி விடாதே, தாயே!' என்று மனமுருகி வேண்டிக் கொண்டாள்.



கோவிலுக்குப் போவதிலெல்லாம் அவளுடைய அவருக்கு அவ்வளவு ஈடுபாடு கிடையாது. ஆயினும் அவளுக்காக அவரும் அவளோடு கோவிலுக்கு வந்திருக்கிறார். அவளும் அவருமாய் பிராகாரத்தைச் சுற்றி வருகையில் எத்தனை கண்கள் அவர்களை வட்டமிடும்! யாருக்கும் கிடைக்காத பாக்கியம் தனக்குக் கிட்டியது போன்றதொரு பெருமிதத்துடன் அந்தப் பார்வைகளை அலட்சியம் செய்து அவள் உல்லாச நடை போடுவாள். அப்படி இனியதாக இந்தக் கோவிலை வலம் வரும் நாள் மறுபடியும் வருமா....?

எத்தனை வெள்ளிக்கிழமைகள் ஓடி விட்டன! அவள் அர்ச்சித்திருக்கும் குங்குமத்தையெல்லாம் சேர்த்துக் குவித்தால் அந்தக் கோவிலில் குடியிருக்கும் அம்பிகையின் மூர்த்தியையே மூடிவிடலாம். ஆயினும், இன்னும் 'அவர் வருவாரா?' என்ற கேள்வியைத் தானே மனசு கேட்டுக் கொண்டிருக்கிறது!

அவள் கையில் பிரித்துக் கிடந்த பொட்டலத்திலிருந்து குங்குமத்தை எடுத்து நெற்றியில் இட்டுக் கொள்கையில் விஜி கேட்டான்.

''அம்பிகை என்ன சொல்கிறாள், வனஜா?''

இதுவரையில் அவன் கேட்காத கேள்வி இது. இப்போது இதைக் கேட்க அவனைத் தூண்டியது எது?

கலங்கிய கண்களுடன் வனஜா அவனைப் பார்த்தாள். 'நான் என்ன பதில் சொல்வது, அண்ணா?' என்று அந்தப் பார்வை பேசியது.

அவனுக்குத் தங்கை மேல் உயிர். அவள் கலக்கத்தை அவன் பொறுக்க முடியாது.

''விஷயம் தெரியுமா, வனஜா! அடுத்த வாரம் எங்கள் ஆபீஸிலிருந்து ஒரு பத்துப் பேர்கள் திருவனந்தபுரம் போகிறார்கள். என்னை மிகவும் வற்புறுத்திக் கூப்பிட்டார்கள். நான் வரவில்லை என்று சொல்லி விட்டேன்.''





பேச்சை வெகு எளிதில் மாற்றுவதற்கு அவனால்தான் முடியும்.

"ஏன் அண்ணா?"

"நீயில்லாமல் நான் மட்டும் எங்காவது போவேனா, வனஜா?"

"அண்ணா....!" — நெஞ்சத்து அன்பையெல்லாம் கொட்டி எப்படி அழைப்பது என்று தெரியாமல் அவள் திணறினாள்.

அப்புறம் என்ன தோன்றியதோ, "வேண்டாம், அண்ணா. நீ போகாததே நல்லதாகப் போயிற்று" என்று சொல்லி விட்டு உள்ளே போய் விட்டாள்.

சற்று நேரம் கழித்துத் தான் அவள் ஏன் அப்படிச் சொல்லி விட்டுப் போகிறாள் என்பது விஜிக்குப் புரிந்தது.

வனஜாவின் கணவன் ஸ்ரீதரனும் ஒரு சுற்றுலாக் கோஷ்டியுடன் புறப்பட்டுச் சென்றவன் தானே! — எந்த நினைப்பிலிருந்து அவளை மீட்கப் பேச்சை மாற்றினானோ, அந்த நினைப்புக்குள் தான் மறுபடியும் அவளை அவன் பேச்சு தள்ளி விட்டது!

'அவர் வருவாரா அண்ணா?' என்று அவள் இதயத்தின் வாய் முனகும் ஒலி அவன் இதயத்தின் காதுக்குக் கேட்டது. சுருள் சுருளாகப் புரண்டலையும் கிராப்பும் குறுகுறுவென்று சுழலும் கண்களும் கூரிய மூக்கும் சதா புன்னகை சிந்தும் வாயுமாய்ச் செந்தாமரை நிறத்தில் நெடிதுயர்ந்து நிற்கும் ஸ்ரீதர் அவன் மனக்கண் முன் தோன்றினான்.

அவன் என்னதான் ஆனான்...? — நிகழ்ச்சி நடந்த நாளிலிருந்து இன்றுவரை வனஜாவுக்கும் அவனுக்கும் இது விளங்காத புதிராகத்தான் இருக்கிறது. காரண காரியங்களை ஆராயும் அவசியமேயில்லாமல் எதற்கும் தீர்ப்புக் கூறும் உலகத்துக்கு இது புதிராக இல்லை; 'எங்கே செத்துத் தொலைந்தானோ?' என்று வெகு எளிதாக முடிவு கட்டி விட்டது அது. இந்தக் கூற்றைத்தான் அவனும் வனஜாவும் நம்ப மறுத்தனர்.

ஆயினும் ஒரு நாளா இரண்டு நாளா? ஐந்து ஆண்டுகள் அல்லவா ஓடிவிட்டன!

தங்கள் நம்பிக்கைக்கு ஆதாரமேயில்லையோ என்ற மருட்சியில் இப்போதெல்லாம் விஜி கலங்கத் தொடங்கி விட்டான். வனஜா தான் இன்னும் நம்பினாள்.

அந்த நம்பிக்கையின் பலம் தான் அவனைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்று நினைத்தான் விஜி.

நடந்தவற்றை நினைத்தால் வேடிக்கையாகவும் வேதனையாகவும் இருக்கிறது.

தாயும் தந்தையும் தானேயாக நின்ற வனஜாவை வளர்த்துப்பெரியவளாக்கி அவளை ஸ்ரீதரன் கைப்பிடிக்க வைத்த பெருமை விஜியைத்தான் சேரும். நினைவு தெரியாத பருவத்தில் தந்தையை இழந்து விட்டு அன்னையின் அரவணைப்பில் வளர்ந்தவர்கள் அவர்கள். விஜி படிப்பு முடிந்து வேலைக்குச் செல்வதற்காகவே காத்திருந்தாற் போல் அந்த அன்னையும் கண் மூடி விட்டாள். அப்போது வனஜாவுக்குப் பன்னிரண்டு வயதிருக்கும். அதன் பின் அவளுக்கு ஆதரவு அவன்தான்.

தங்கையின் அழகுக்கேற்ற மாப்பிள்ளை கிடைத்து விட்டதில் அவனுக்கு அளவிறந்த பெருமை. ஸ்ரீதரனும் வனஜாவும் சேர்ந்து நடந்து வரும்போது தன் கண்ணே பட்டு

விடுமோ என்று அவனுக்குத் தோன்றும். அவன் கண் தான் பட்டு விட்டதோ..?

கலியாணம் ஆகி ஓராண்டு கழிந்திருக்கும்.

''விஜி! ஒரு 'எக்ஸ்கர்ஷன் பார்ட்டி' காஷ்மீர் வரை போகிறது. என் சிநேகிதன் என்னையும் கூப்பிடுகிறான். போய் வரலாமான்னு ஒரு சபலம். நீ என்ன நினைக்கிறாய்?'' என்று ஒரு நாள் விஜியிடம் ஸ்ரீதர் கேட்டான்.

''கிடைக்கிற வாய்ப்பை விணுக்காதே ஸ்ரீதர். வனஜாவையும் கூட்டிக் கொண்டு போய் விட்டு வாயேன்.''

''பெண்கள் யாரும் வரவில்லை. ஆகவே வனஜாவை அழைத்துப் போவது அவ்வளவு உசிதம் என்று எனக்குத் தோன்றவில்லை. அதனால் தான் யோசிக்கிறேன். அந்தச் சிநேகிதன் ரொம்பவும் வற்புறுத்துகிறான். செலவைப்பற்றிக் கவலையில்லை. அவன் ஒரு கோமகவரன் வீட்டுப் பிள்ளை. இருந்தாலும்...''

இவர்கள் பேச்சை அரைகுறையாக கேட்டுக் கொண்டே வந்த வனஜா ''கிடைக்கிற சந்தர்ப்பத்தை விடுவானேன்! போய் வந்தால் போகிறது!'' என்றாள் மிகுந்த மகிழ்ச்சியோடு.

''நீ வர முடியாதே....!'' — அவள் இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை.

''அப்போ நீங்களும் போக வேண்டாம்'' என்று பட்டென்று சொல்லி விட்டாள்.

''சேச்சே! அப்படியெல்லாம் சொல்லாதே. ஒரு மாதம் ஆகும். அவ்வளவு தானே? நீ போய் வா, ஸ்ரீதர்!''

அண்ணுவுக்காக வனஜாவும் அவனைப் போக அனுமதித்தாள். உண்மையில் அவளுக்கு விருப்பமில்லைதான். எப்படியோ, ஸ்ரீதர் புறப்பட்டு விட்டான்.

''ஒரு மாதம் இதோ ஓடி விடும். கவலைப் படாதே'' என்று போகும்போது வனஜாவிடம் சொல்லி விட்டுப் போனான் ஸ்ரீதர்.

ஒரு மாதம் மட்டுமா ஓடியது? ஐந்தாண்டுகள் ஓடி விட்டன. ஸ்ரீதரன் என்ன ஆனான்?

சுற்றுலாக் கோஷ்டி திரும்பிய நாளில் இருந்து கேட்கப்படும் கேள்வி இது. பதில் தான் தெரியவில்லை.

பிரயாணம் தொடங்கிய இருபது நாட்கள் வரை ஸ்ரீதரிடமிருந்து வனஜாவுக்குத் தொடர்ந்து கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. அப்புறம் ஒரு பத்து நாட்களாகக் கடிதமேயில்லை. 'திரும்பி வந்துவிடப் போகிறானே இன்னும் பத்து நாட்களில்!' என்று நினைத்து அவர்கள் அதைப் பாராட்டவில்லை.

சுற்றுலாக் கோஷ்டி திரும்ப வேண்டிய நாள். பாங்கிலிருந்து மாலை வீடு திரும்புகையில் வழியில் ஸ்ரீதரின் நண்பனைச் சந்தித்தான் விஜி. அந்த நண்பன்தான் ஸ்ரீதரை வற்புறுத்தி அழைத்துச் சென்றவன்.

''மாப்பிள்ளை வந்து விட்டாரா? பிரயாணம் எல்லாம் எப்படி?'' என்று அவனை விசாரித்தான் விஜி.

''ஸ்ரீதரன் இன்னும் வந்து சேரவில்லையா? பத்து நாட்களுக்கு முன்னாலேயே அவன் திரும்பி விட்டானே!''

''ஸ்ரீதரா...? பத்து நாட்களுக்கு முன்னாலா...? அப்போ எங்கே போயிருப்பார்...?''

''ஊருக்குப் போவதாகத் தானே சொன்னான்? நாங்கள் கூட எவ்வளவோ சொன்னேனும். கேட்காமல் அவன் பிடிவாதமாகப் புறப்பட்டு விட்டானே!''

''அப்படியானால்....!''

விஜிக்கு மேலே சிந்தனை ஓடவில்லை. ஸ்ரீதரன் எங்கு போயிருப்பான்...? வீட்டுக்குப் போய் வனஜாவிடம் இந்தச் செய்தியை எப்படிச் சொல்வது...?

''நீங்கள் சொல்வது நிஜம்தானா மிஸ்டர்?''

''பொய்யா சொல்கிறேன்? நான் எவ்வளவு சொல்லியும் கேட்காமல், பாதிப் பிரயாணத்தில் எங்களை விட்டு விட்டுத் திரும்பி விட்டானய்யா....!''

விஜிக்கு அப்போதுதான் திடீரென்று நினைவுக்கு வந்தது. பத்து நாட்களுக்கு முன்னால் வடக்கே ஒரு ரயில் விபத்து நிகழ்ந்த செய்தி.


''உங்களை விட்டு அவர் எங்கே பிரிந்தார் மிஸ்டர்?''

''ஆக்ராவில். தாஜ்மகாலைப் பார்த்து விட்டு வரும்போது ஊர் நினைவு வந்து விட்டது அவனுக்கு. இப்போ நீங்கள் சொல்வதைப் பார்த்தால்....''

''என்ன... என்ன ....?'' என்று பறந்தான் விஜி.

''தப்பாக நினைக்காதீர்கள். இப்போ ஒரு ரயில் விபத்து நடந்ததே. அதனாலே பிரயாணத்தில் ஏதும் தடங்கல் ஏற்பட்டிருக்குமோ என்னவோ....?'' — நினைத்தது வேறாயிருந்தாலும் சொல்வதை நாசூக்காகச் சொல்லி வைத்தான் அவன்.

விஜிக்குத் தலை சுற்றியது.



அந்த நண்பனையும் கூட அழைத்துக் கொண்டு தான் வீட்டுக்கு வந்தான்.

வனஜா பூசை மாடத்தில் குத்து விளக்கை ஏற்றி வைத்து நமஸ்கரித்துக் கொண்டிருந்தாள். இந்த வேளையில் அவளிடம் எப்படி இதைச் சொல்வது?

ஆயினும் ....

''என்ன அண்ணா....? — அவர் வந்து விட்டாரா....?''

''இல்லை, வனஜா பத்து நாட்களுக்கு முன்னாலேயே அவர் இவர்களிடமிருந்து பிரிந்து ஊர் திரும்பி விட்டாராம்!''

''அப்போ எங்கே போயிருப்பார்...?''

அந்தக் கேள்விக்கு இன்னும் விடை தெரியவில்லை. ரயில்வே அதிகாரிகளுக்கு எழுதிப் பார்த்தார்கள். விபத்தில் காயமடைந்தவர்கள், இறந்தவர்கள் என்று அவர்கள் சேர்த்துக் கொடுத்த பட்டியலில் ஸ்ரீதரன் என்ற பெயரையே காணோம். வனஜாவுக்கு அவன் இறந்திருப்பான் என்று எண்ணவே இயலவில்லை. அவளையறியாமல் அவளுக்குள் ஒரு நம்பிக்கை சுடர் விட்டுக் கொண்டிருந்தது. அவன் இன்னும் உயிருடன் எங்கோ தான் இருக்கிறான். அப்படியானால் அவன் ஏன் இன்னும் வரவில்லை?

கலியாணமான புதிதில் வேடிக்கையாக, ஸ்ரீதர் அவளிடம் சொல்வான்: ''மேல் நாட்டுக்குப் போய் ஓர் இரண்டு வருடங்களாவது வாழ்ந்து வர வேண்டும். வனஜா போய் வரட்டுமா?'' என்று.

''நம்ம நாட்டிலில்லாத விசேஷம் அங்கென்ன வாழ்கிறதோ?'' என்று அவனுக்கு அவள் பதில் சொல்லியிருக்கிறாள்.

''இருக்கிறதே! நீயும் நானும் கைகோத்துக் கொண்டு இங்கு நடனமாட முடியுமா..?'' என்று சொல்லி விட்டுச் சிரிப்பான் அவன்.

ஒரு வேளை அப்படி ஏதாவது ஆசை பிறந்திருக்குமோ...? அவர் இறக்கவில்லை. ஆனால் ஏதோ ஓர் ஆபத்தில் மாட்டிக் கொண்டு தவிக்கிறார் என்று தான் தோன்றியது வனஜாவுக்கு.

அவளுடைய இந்த நம்பிக்கையை ஊர் நகைத்தது. அவள் கவலைப்பட வில்லை. அவளுக்கு விஜி என்ற அண்ணன் இருக்கும்வரை அவள் எதற்கும் கவலைப்படப் போவதில்லை.

''அண்ணா! வீட்டிலேயே இருந்தால் மனசு என்னென்னவோ நினைத்துக் குழம்புகிறது. எனக்கும் ஒரு வேலை வாங்கிக் கொடேன்', என்று அவள் விஜியிடம் ஒரு நாள் கேட்டாள்;

''அதற்கென்ன வாங்கித் தருகிறேன்!''

சொன்னதை நிறைவேற்றுவதில் அவன் மகா சூரன்.

வனஜாவுக்கு இப்போது பகல் பொழுது சோப்புக் கம்பெனியில் கழிகிறது.

ஸ்ரீதரன் அவர்களை விட்டுப் பிரிந்து ஐந்து வருடங்கள் ஆகின்றன. இன்னும் அவளுக்கு நம்பிக்கை தைந்து விடவில்லை.

மணி எட்டடித்து விட்டது.

அண்ணனைச் சாப்பிடக் கூப்பிட வந்தாள் வனஜா.

விஜி இரைந்து காலையில் படித்த அதே பகுதியைப் படித்துக் கொண்டிருந்தான்.

''ஹி கம்ஸ் ..... கம்ஸ் .... எவர் கம்ஸ்!''

''அண்ணா......!''

''என்ன வனஜா....?'' என்றான் அவன் படிப்பை நிறுத்தி விட்டு.

''சாப்பிட வரயா....?''

''ஓ....!'' — அவன் எழுந்து விட்டான்.

''காலையிலும் இதையே படித்தாய்! மனப் பாடம் பண்ணுகிறயா,.... என்ன?'' என்றாள் அவள் நடந்து கொண்டே.

''என்னவோ அதைப் படிப்பதற்குப் பிடிக்கிறது!'' என்றான் விஜி.

''எனக்கும் அதைக் கேட்கப் பிடிக்கிறது.''

''எதை....?''

''ஹி கம்ஸ், கம்ஸ் ..... எவர் கம்ஸ்....!''

விளக்கு சுடர் தெறித்தது. அவள் கண்கள் பிரகாசமுற்றன.

''அண்ணா......!'' என்று சொல்லிக் கொண்டே விளக்குக்குக் கைகூப்பினாள் அவள்.

அவள் நெஞ்சிலும் இலேசாக ஒரு சுடர் தலை நீட்டியது.

★

அன்றிரவு முழுக்க வனஜாவுக்குக் கனவுகள்தாம். மூடிய இமைகளை மெல்ல ஸ்ரீதரன் வந்து திறப்பது போலத் தோன்றும்: படபடப்பில் கண்களை விழித்து இருட்டைப் பார்த்து மருளுவாள்.

கனவுகளுடன் உறவாடிய இரவும் கழிந்தது.

'அவர் வருகிறார். வருகிறார்....' என்று மனசுக்குள் முனகிக் கொண்டே தான் அவள் துயில் கலைந்தாள்.

காலைக் காரியங்கள் பழக்க வேகத்தில் மளமளவென்று நடந்தேறின. மணி ஒன்பதாகிவிட்டது. ''சாப்பிட வா அண்ணா....!'' என்று சமையற் கட்டிலிருந்தே குரல் கொடுத்தாள் வனஜா.

''வனஜா....!''

விஜி ஏன் இப்படி அலறி அழைக்கிறான்?

அவள் ஓடோடி வந்தாள்.

கலங்கிய கண்களுடனும் கையில் பிரித்த கடிதத்துடனும் விஜி நின்றான்.

அவள் அவனைப் பார்த்துப் பதறிவிட்டாள்.

''என்ன அண்ணா...''?

''ஸ்ரீதரன் உயிரோடிருக்கிறான் வனஜா!''

''ஹா..ங்!'' — அவள் கண்களும் பனித்தன. அவன் கையிலிருந்த கடிதத்தைப் பறித்தாள். முத்து முத்தாக அவர் கையெழுத்து!

''வனஜாவுக்கு.....

ஓடும் ரயிலில் உட்கார்ந்துகொண்டு இதை எழுதுகிறேன். நான் உயிருடன் தான் இருக்

கிறேன் என்பது உனக்கு ஆச்சரியமாகத் தான் இருக்கும். எனக்கே ஆச்சரியமான செய்தி அது. ஆக்ராவில் தாஜ்மகாலைப் பார்த்ததுமே எனக்கு உன்னருகே இருக்க வேண்டும் போல ஒரு வெறியே ஏற்பட்டு விட்டது. நண்பர்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் கேளாமல் அவர்களை விட்டுப் பிரிந்து ரயிலேறி விட்டேன். திடீரென உன் முன் வந்து நின்று உன்னை ஆச்சரியத்தில் மூழ்கடிக்க வேண்டும் என்று நினைத்தேன். அதனால் தான் உனக்கு அதைக் குறித்து எழுதவில்லை. ஆனால்...நான் வந்த ரயில் விபத்துக்குள்ளாகியது. நான் இருந்த பெட்டியில் ஒரு செல்வந்தர் உடன் வந்தார். ரயில் கவிழ்ந்தது மட்டும் தான் எனக்கு நினைவிருக்கிறது. அப்புறம் நடந்த தெல்லாம் அவர் சொல்லித் தான் தெரியும். எங்கள் பெட்டியில் யாருக்கும் காயமோ, சேதமோ ஏற்படவில்லையாம். விழுந்த அதிர்ச்சியில் மண்டை நிலையில் மோதி எனக்குத் தான் பிரக்ஞை தப்பி விட்டது. என் கைப் பெட்டி எங்கோ தவறி விட்டது. அந்த மனிதர் காருண்யத்துடன் என்னைத் தன்னுடன் காரில் ஏற்றிக் கொண்டு சென்றிருக்கிறார், அதிர்ச்சி நீங்கியதும் பிரக்ஞை தெளியும் என்ற நம்பிக்கையில். அவருக்கு நான் யார் என்ற விவரம் தெரியாது. எனக்கோ தன் நினைவே வரவில்லை. ஆகவே என்னை ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்த்து விட்டார். மூளைக் கோளாறு என்று முடிவுகட்டி அவர்கள் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விட்டார்கள்.

பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போயும் தெளியாத கோளாறுகள் இல்லையா...? என் கதை ஏனோ தெளிகிற கதையாகி என்னைத் திண்டாட வைத்து விட்டது. சுயப் பிரக்ஞை வந்ததும் நான் அங்கு வந்தது சேர்ந்த வரலாற்றைத் தெரிந்து கொண்டேன். ஆயினும் எனக்குப் பழைய நினைவுகள் சரிவர வரவில்லை. என்னைக் காப்பாற்றிய அந்த மனிதர் ஒருநாள் என்னைப் பார்க்க வந்தார். அவர் கூறிய விவரங்கள் எனக்கு ஓரளவு தெளிவு பெற உதவியது. நான் சொல்லும் இந்த நிலையெல்லாம் கடந்த ஒரு மாத காலமாகத் தான்.

சுற்றுலாக் கோஷ்டி திரும்ப வந்து நான் முன்னால் புறப்பட்டதை உங்களுக்குத் தெரிவித்திருக்கும். ரயில் விபத்தில் நான் இறந்ததாக எண்ணி நீ கைம்மைக் கோலம் பூண்டிருப்பாய் என்று நினைத்த போது என்னால் தாங்கவே முடியவில்லை. என் வேதனையை உனக்குச் சொல்லி முடியாது.

உன்னைப் பார்த்து உனக்குப் புனர்வாழ்வு தர ஓடோடி வந்தேன்.

ரயிலடியிலேயே எனக்கு அதிர்ச்சி காத்திருந்தது. தலை நிறையப் பூவும், நெற்றியில் குங்குமப் பொட்டுமாய் நீ சாரதா சோப்புக் கம்பெனி வாசலில் நின்றுகொண்டிருப்பதை ரயிலடியிலிருந்து வெளியே வந்து ஜட்காவைக் கூப்பிட வாய் திறந்தவன் பார்த்து விட்டேன்.

உன்னைக் கூப்பிடத்தான் நினைத்தேன். ஏனோ முடியவில்லை. 'நீதானா அது?' என்று ஒரு சந்தேகம். மெள்ள நடந்து வந்தேன். என்னைக் கவனிக்கவேயில்லை.

''வனஜாவுக்குக் குங்குமப் பொட்டுத்தான் ரொம்பப் பிடிக்கிறது. இல்லையா வனஜா...!'' என்று யாரோ ஒரு பெண் கேட்டாள் உன்னிடம்.

''சுமங்கலிக்கு அதுதான் அழகு!'' என்று சொல்லி விட்டு நீ சிரித்தாய்.

என் கண்களை நம்ப முடியவில்லை. நான் கற்பனை பண்ணி வைத்திருந்த வனஜாவாக நீயில்லை. என் மறைவு உன்னை எவ்வகையிலும் பாதிக்கவில்லை என்பதை உன் தோற்றமே எனக்கு உணர்த்திவிட்டது. அப்படி உணர்ந்த போது எனக்கு வேதனையா யிருந்தது.

நீ எப்படி வாழ்கிறாய் என்று நான் நினைக்க விரும்பவில்லை. 'சுமங்கலி' என்ற புனிதமான பதத்தை நீ எந்த நினைப்பில் உச்சரித்தாயோ; நான் உயிருடன் தான் இருக்கிறேன். ஆகவே நீ சுமங்கலிதான்.

என்னைத் தேட முயலவேண்டாம். நான் எங்கோ எப்படியோ வாழ்ந்து கொள்வேன். என் மறைவு உன்னை எப்படிப் பாதிக்கவில்லையோ, அப்படியே இந்தக் கடிதமும் உன்னை ஏதும் பாதிக்காது என்று தான் தோன்றுகிறது.

–ஸ்ரீதரன்

''அ...ன்...ணா...!'' என்று கதறிக் கொண்டு கீழே விழுந்தாள் வனஜா. விஜி அவளைத் தேற்ற முனையவில்லை. முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு குழந்தை போல் விம்மிக் கொண்டு நின்றான். தான் நம்பிக் கொண்டிருந்த நம்பிக்கையின் மறுபுறம் இப்படியிருக்கவேண்டுமென்று நினைக்கவே இல்லை.

வேத வித்தகரின் பிரிவு



தமிழகத்தின் பெருமையைப் பற்றிக் கூறவந்த மகாகவி பாரதியார் ''வேதம் நிறைந்த தமிழ் நாடு'' என்று கூறிப் பூரிப்பெய்துகிறார். பாரத நாடு பழம் பெரும் நாடு என்பதற்குச் சான்று பகர்வன வேதங்களே. அத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த வேத மந்திரங்களை மீண்டும் பரப்பிப் பழமை மணம் மறைந்து விடாமல் இருக்கச் சென்னை, எழும்பூர், வேத சபா கடந்த பதினொரு ஆண்டுகளாக அரும் பெரும் தொண்டாற்றி வந்திருக்கிறது. மேற்படி வேத சபையைத் தோற்றுவித்து, மெய் வருத்தம் பாராது, சதா வேத சபையின் நினைவாகவேயிருந்து அயராது உழைத்த பிரம்மஸ்ரீ எம். ஆர். விசுவநாத சாஸ்திரியார் சமீபத்தில் இறைவன் திருவடி நீழலை எய்தினார்கள் என்பதையறிந்து வருந்துகிறோம்.

நெருப்புக்கனிகள்

பொன்முடி



அந்தக் கண்களும் இதழ்களும் பேராசையைப் படைக்கும் சக்தி வாய்ந்தவை. அவற்றை நான் முதல் முதலாகச் சந்தித்தபோது என்னைச் சுற்றிலும் மல்லிகைப் பூக்கள் மணந்து கொண்டிருந்தன.

சந்திப்பு 1

இந்துமதியை நான் சந்தித்த முதல் விநாடியை எப்படித் தொடங்கி எப்படிச் சொல்லி எப்படி முடிப்பதென்று எனக்குத் தெரியவில்லை. சித்திரை மாதத்து நடுப்பகலில் முன்னும் பின்னும் கடுமையான வெப்பத்துக்கு நடுவே அந்தரமாகத் தனித்த ஏதோ ஒரு கணத்தில்—ஒரே ஒரு கணம் மட்டும்தான் – பக்கத்து மரம் ஆடி அசைந்ததன் காரணமாகச் சில்லென்று வீசிக் குளிர வைத்த காற்றைப் போல் அவள் என் விரைந்த வாழ்க்கையில் எங்கிருந்தோ நேர்ந்தாள் என்பதா?

நீண்ட நாட்களாகப் பூவாமலிருந்த செடியில் பூத்த முதல் பூவைப் போல் தன்னுடைய தோற்றத்தையே தனக்கு அதிசயமாகக் கொண்டு வந்து தோன்றினாள் என்பதா? மலைச் சாரலின் உருண்டைக் கற்களிடையே அருவி இறங்கும்போது தப தபவென்று மிருதங்கம் வாசிப்பது போல் நோக்கமில்லாமல் தான் தோன்றித்தனமாகப் பிறக்கும் இசையென நேர்ந்தாள் என்பதா? நிச்சயமாய் ஒரே விதத்தில் மட்டும் கூறி முடிக்க முடியாததை எப்படி வேண்டுமானாலும் கூறலாம் தானே? எப்படிக் கூறினாலும் திருப்தி அடைய முடியாததை எத்துணைமுறைசொன்னால்தான்என்ன? பேராசைக்காரனுக்கு ஓர் ஆசையும் நிறைவேறாமல் தட்டிப் போய் விடுவதுபோல் இந்துமதியைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று நான் தேடித் தேடி இணைக்கிற சொற்களெல்லாம் என் கருத்தை விளக்கத் துணை செய்யாமல் தட்டிப் போய்க்கொண்டே இருக்கின்றன.

இவளைச் சந்திப்பதற்கு முன் வேறோர் இந்துமதியையும் எனக்குத் தெரியும். அவளைக் காளிதாசனுடைய இரகு வம்சத்தில் சந்தித்திருந்தேன் நான். அந்த இந்துமதி தனக்குரிய நாயகனைத் தேர்ந்தெடுப்பதற்காகச் சுயம்வர மண்டபத்தில் புகுந்து அங்கே வரிசையாக வீற்றிருந்த அரச குமாரர்களைப் பார்த்துக் கொண்டே சென்றபோது அவள் பார்த்துக் கழித்து விட்டுக் கடந்தவர்களின் முகங்கள் எல்லாம் ஏமாற்றத்தால் இருண்டதையும் இனிமேல் பார்ப்பதற்கு இருந்தவர்கள் முகங்கள் எல்லாம் நம்பிக்கையால் மலர்ந்திருந்ததையும் பற்றிக் காளிதாசன் புனைந்து கூறியிருக்கும் நயத்தை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது.

'இரவு நேரத்தில் அரச வீதியின் வழியே கையில் தீபத்தோடு நடந்து செல்கிற பெண் ஒருத்தி தன் வழியில் பின்னால் கழிந்து போகிற ஒவ்வொரு மாடமும், வீடும், இருளடையும்படி செய்து விட்டு எதிர் வருகிற வீடும் மாடமும்ஒவ்வொன்றாக ஒளிரச் செய்து கொண்டு கடந்ததைப் இருள எதிர்பவை ஒளிர நடப்பதுபோல் இந்துமதியும் சுயம்வர மண்டபத்தில் நடந்தாள்' என்கிறான் காளிதாசன்.

அந்த இந்துமதியின் அழகைக் கவிதையில்தான்பார்த்திருந்தேன். ஆனால் என்னுடைய வாழ்க்கையில் நான் சந்தித்த இந்த இரண்டாவது இந்துமதியின் அழகு என் கண்களுக்குள்ளேயே நிறைந்திருக்கிறது. இவளுடைய அழகின் நயங்களை நான் இன்னும் முழுமையாகக் கண்டோ, உணர்ந்தோ தீர்மானமாக முடித்து விடவில்லை. இவள்





முகத்தை மனக்கண்களுக்குமுன் நிறுத்தி நினைத்துப் பார்க்கும் போது அல்லது பார்த்து நினைக்கும் போது புதுப் புது நயங்கள் எனக்குத் தெரிகின்றன. இவளைப் புறக்கண்களால் பார்க்கிற சந்தர்ப்பங்களைவிட 'இது இந்துமதியின் கண், இது வாய், இது மூக்கு, இது முகம்' என்று ஒவ்வொன்றாக என் நினைப்பில் இணைத்து மனக் கண்களால் பார்க்கிற போதுதான் எனக்குச் சிந்தனை பிறக்கும். அந்தச் சிந்தனையிலிருந்து சுகம் பிறக்கும். அந்தச் சுகத்திலிருந்து பல புதிய சிந்தனைகளும் பிறக்கும். அது ஒரு முடிவில்லாத அனுபவம்.

இந்துமதியின் கண்கள் அற்புதமானவை. பார்க்கலாமா என்ற பயத்தையும், பார்க்க வேண்டும் என்ற ஆசையையும் சேர்த்தே உண்டாக்கும் கண்கள் அவை. அந்தக்கண்கள் பேராசையைப் படைக்கும் சக்திவாய்ந்தவை.

இந்துமதியின் கண்களை நான் முதன் முதலாகச் சந்தித்த போது என்னைச் சுற்றிலும் மல்லிகைப் பூக்கள் மணந்து கொண்டிருந்தன. அதன் காரணமாக மல்லிகைப் பூவின் மணத்தை நான் உணர்கிற வேளைகளில் எல்லாம் இந்துமதியின் கண்களை நினைக்கிறேன்.

'சார்ந்த இடமெல்லாம் சவ்வாது மணக்குமடி.' என்று பழைய பாடல் வரி ஒன்று உண்டு. அதைப் போலவே இந்துமதியைப் பற்றிய நினைப்புக்குக் கூட மல்லிகைப் பூவின் மணம் உண்டு. எப்போதோ என்னுடைய சகோதரிக்குப் பூச்சூட்டு நடந்த தினத்தன்று எங்கள் வீட்டுக் கூடம் நிறைய மல்லிகையும் வெட்டிவேரும் மணந்து கொண்டிருந்த சாயங்கால வேளை ஒன்றில் துவண்ட நடையும், கொடி அசைவதுபோல் சாயலும், தோகை விரித்துக் கொண்டு வருகிற மயில் போன்ற தோற்றமுமாக இந்துமதி என் கண்களில் நேர்ந்தாள். சாய்ந்தாற் போல் மண்டியிட்டு அமர்ந்து கொண்டு பூச்சூட்டுக்கு வந்திருந்த மற்றப் பெண்களின் நச்சரிப்புப் பொறுக்க முடியாமல் இரண்டு பாட்டும் பாடினாள் அவள். கண்ணுக்குப் புரிந்திருந்த அழகை என்னுடைய செவிக்கும் புரிய வைப்பதாக இருந்தது அந்தக் குரல்.



அவள் பாடிய போது நான் பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்தேனா, அல்லது நெருப்புக் கனிகள் போல் மலர்ந்தும், குவிந்தும் அசைந்த அவள் உதடுகளைப் பார்த்துக் கொண்டிருந்தேனா; — எதைச் செய்தேன் என்று எனக்குச் சரியாக ஞாபகம் இல்லை. ஞாபக மறதிகூட வேறு ஒரு விதத்தில் வலுவான ஞாபகம்தான். ஏதாவது ஒன்றைமட்டும் நன்றாக ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும் என்று முயலும்போதுதான் வேறு பலவற்றையும் மறந்து போகிறோம். அப்படியானால் மாடிப்படியின் மேற்பகுதியில் நின்று கொண்டு கீழே கூடத்தில் நிகழ்ந்து கொண்டிருந்த பூச்சூட்டு வைபவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோதும் நான் ஏதோ ஒன்றை ஞாபகம் வைத்துக் கொள்வதற்கு முயன்று தான் வேறு பலவற்றை ஞாபகம் வைத்துக் கொள்ளத் தவறியிருக்க வேண்டும்.

நான் அப்படி நன்றாக ஞாபகம் வைத்துக் கொள்ள முயன்றவை என்ன தெரியுமா? அவை இந்துமதியின் இதழ்கள். 'நான் நன்றாகக் கனிந்து விட்டேன்' என்று உலகத்துக்குச் சொல்வது போல் அவளுடைய உதடுகள் முழுமையாகச் சிவந்து பளப்பேறி மின்னிக்கொண்டிருந்தன. இதைப் பற்றி இதற்கு மேல் சொல்ல முயலும் போது என் சொற்களின் ஏழைமை எனக்கே புரிகிறது.

ஐஸ்கிரீமுக்கு மேல் செக்கச் செவேல் என்று ஒரு பழம் வைத்துக் கொடுப்பார்களே;— செர்ரிப் பழமோ, என்னவோ, பேர் சொல்லுவார்கள். அதைப் போல் ஒளிரும் செம்மை நிறம் இயல்பாகவே அந்த இதழ்களுக்கு வாய்த்திருந்தது. பவழத்தையும், செம்முருக்கம் பூவையும், ரோஜாவையும், மாதுளை மொட்டுக்களையும், — கவிகள் பெண்ணின் இதழ்களுக்கு உவமை சொல்லும் போது அந்த உவமைகள்தான் அழகாயிருப்பதாகத் தெரிகின்றனவே ஒழிய அவற்றைப் போல அழகாயிருக்கும் இதழ்களைக் காண முடிவது அருமையாயிருக்கும். பெண்ணின் உதடுகள் சிவப்பாயிருப்பதைப் புதுமையாகவும், அழகாகவும் வருணிக்க ஆசைபட்ட கவி ஒருவர்,

வெந்து வடிவிழந்த காமன் விழிச்சிவப்பு
வந்து திரண்டனைய வாயினள்-

என்றுகூடப் பாடி வைத்திருக்கிறார். அந்த உவமைகளும், இந்த வருணனையும் இந்துமதியின் இதழ்களைச் சந்தித்த பின்புதான் எனக்கு ஓரளவுக்காவது அர்த்தமுள்ளவையாகத் தோன்றின.

அவள் உட்கார்ந்து பாடிக் கொண்டிருந்த வரை எங்கள் வீட்டின் அந்தக் கூடமே பிரகாசமாக இருந்தது போலவும், வெற்றிலை பாக்குப் பழம் வாங்கிக் கொண்டு அவள் தன் தோழிகளோடு எழுந்து போன பின்பு சுற்றிலும் இருண்டுபோய் விட்டாற் போலவும் எனக்கு ஒரு பிரமை ஏற்பட்டது.

பூச்சூட்டு விழாவின் பரபரப்பெல்லாம் முடிந்து வீடு அமைதியடைந்த பின் எங்கள் வீட்டுக் கடைக்குட்டி — என் தங்கை மீனுவிடம் விசாரித்ததில் எனக்கு அந்தப் பெண்ணைப் பற்றிய முழு விவரமும் தெரிந்தது. எங்கள் தகப்பனார் நிர்வாகியாக இருந்து நடத்திக் கொண்டு வருகிற உயர்நிலைப் பள்ளிக்குப் புதிதாக வந்திருக்கிற தலைமை ஆசிரியரின் பெண்ணாம் அவள். காளிதாசனுடைய கவிதைகளில் அவருக்கிருக்கும் ஈடுபாட்டின் காரணமாகத் தம் மூத்த பெண்ணுக்கு 'இந்துமதி' என்று பேர் வைத்திருப்பதாக அறிந்தேன். எல்லாரும் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது இரவு என் பெரிய அக்கா எனக்கு இந்துமதியைப் பற்றி மேலும் சில விவரங்கள் சொன்னாள்.

"ஏன்டா, ரகு! லீவுக்காக ஊருக்கு வந்தால் சாயங்கால வேளைகளில் ஆற்றங்கரை தோப்பு துரவு என்று எங்கேயாவது வெளியே போய் உலவி விட்டு வருவார்களா? அல்லது இப்படி வீட்டில் பெண்டு செட்டியாய் அடைந்து கொண்டு பூச்சூட்டுக்கு வருகிற பெண்களையெல்லாம் யார் என்று விசாரித்துக் கொண்டிருப்பார்களோ?" என்று அதே பெரிய அக்கா உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த எல்லாரும் கேட்கும்படி என்னைக் கேலி செய்த போது எனக்கு வெட்கமாகி விட்டது. இதுதான் நான் இந்துமதியை என் வாழ்வில் முதல் முதலாகச் சந்தித்த சந்திப்பு. இந்தச் சந்திப்புக்கு 'நான் அவளைச் சந்தித்தேன்' என்பதைத் தவிர விசேடமான அர்த்தம் எதுவும் இல்லை.

சந்திப்பு 2

எத்தனையோ காரியங்கள் தொடங்கியபின் அவற்றுக்கு முடிவு என்று எதுவும் நேராமல் அப்படியே அரைகுறையாக நிற்பது உண்டல்லவா? அந்தக் காரியத்திலேயிருந்து தொடர்கிற அடுத்த நிகழ்ச்சி பிறக்கிற வரை அப்படி அரைகுறையாக நிற்கிற நிலைதான் அதற்கு முடிவு என்றுகூட வைத்துக் கொள்ளலாம் போலும்! ஆனால் ஒன்றை மட்டும் நான் மறுக்க முடியாது. இந்துமதியின் முகத்தையும், கண்களையும், இதழ்களையும் ஞாபகம் வைத்துக் கொண்டே வேறு பல சாதனைகளை நான் சாதித்திருக்கிறேன். அந்த வருடம் கோடை விடுமுறை முடிந்து கல்லூரி திறந்த பின் ஏதோ ஒரு தமிழ் மாதப் பத்திரிகை நடத்திய கவிதைப் போட்டியில் நான் கலந்து கொண்டேன். என் கவிதைக்குப் பரிசு கிடைக்கவில்லை. அது இலக்கண சுத்தமாக அழகிய உருவில் எனக்கு வாய்த்திருந்ததா இல்லையா என்பதைப் பற்றியும் நானே தீர்மானம் செய்ய முடியாது. ஆனால் மிக அழகிய ஞாபகம் ஒன்றிலிருந்துதான் அந்தக் கவிதையாகிய காரியம் பிறந்தது என்பதை நான் உணர்வேன். மனோரம்மியமான சாயங்கால வேளை ஒன்றில் மேற்குப் பார்த்த வீட்டின் பக்கத்துப் பலகணியில் அந்தி நேரத்து வானத்தின் பொன் மேகங்களைப் பார்த்துக் கொண்டே நான் மாடிப் படியில் இறங்கிக் கொண்டிருந்த போது மல்லிகைப் பூவும் வெட்டி வேரும் மணக்கிற சூழ்நிலையில் எவளுடைய கண்களையும், இதழ்களையும், கண்டு மனம் கிறங்கினேனோ அவளுடைய ஞாபகத்திலிருந்துதான் என்னுடைய கவிதை பிறந்தது அந்தக் கவிதையைவிட அது பிறக்கக் காரணமாக இருந்த ஞாபகம் அதிக அழகு வாய்ந்தது என்பது முக்கியம். அந்த ஞாபகத்துக்குக் காரியமான என் கவிதை ஒரு பைத்தியக்காரத்தனமான விளைவாகவும் இருக்கலாம். அதைப் பற்றிக் கவலை இல்லை.

ஜீவ நதி பாயும் ஒரு வளமான கிராமத்தில் நூற்றுக்கணக்கான குடும்பங்களைக் காப்பாற்றுகிறவரும் சொந்த நிர்வாகத்தில் ஒரு பள்ளிக்கூடமே வைத்து நடத்துகிறவருமான பிரபல லட்சாதிபதிக்குப் பிள்ளையாக இருக்கிறேன் நான். லட்சாதிபதியின் பிள்ளையாக இருந்தால் இப்படிப் பைத்தியம் பிடிக்கக் கூடாது என்பது சட்டமா? சொல்லப் போனால் சரித்திரங்களிலும் காவியங்களிலும் என்னைப் போன்ற லட்சாதிபதிகளின் பிள்ளைகள்தான் இத்தகைய அநுராகப் பைத்தியத்துக்கு ஆளானதாக நிறையச் சான்றுகள் இருக்கின்றன. போகட்டும்.

நான் ஏதோ கவிதை பாடிக் கிழித்தேன் என்று சொன்னேனே. இப்போது அதைச் சொல்லுகிறேன், கேளுங்கள். நான் ஒன்றும் பிறவிக் கவி இல்லை. சர்வகலாசாலைப் படிப்புப் படிக்கிற பணக்காரக் குடும்பத்து இளைஞர்களிடம் என்னென்ன அசட்டுத்தனங்களும், பலவீனங்களும் இருக்க முடியுமோ அவை என்னிடமும் இருக்கலாம். என்னுடைய கவிதையில் பிறவிக் கவிஞர்கள் இதய பூர்வமாகப் பேசும் குரலை நீங்கள் கேட்க முடியாது. ஆனால் அதைப் பாட நேர்ந்த ஞாபகத்தைப் புரிந்து கொள்வதற்கு முடியும். 'இந்துமதியின் கண்களும் இதழ்களும் பேராசையைப் படைக்கும் சக்தி வாய்ந்தவை' என்று முன்பு சொன்னேனே, அந்தப் பேராசை என் சொற்களில் படைக்கப்பட்டிருப்பதை நீங்கள் உணரலாம்.

உண்ணக் கனிந்த விரு—சின்னக்
கனிகள் என

எண்ணத் திருப்பதனை—மிக
எடுத்துர் சொல்வனவாய்க்

கண்ணில் தெரியா—நாணத்தைக்
காட்டிவிளக்கும் செங்கனியாய்

வண்ணக் கனியிதழ்தாம்—இங்கு
வடிந்து சிவந்தனவோ ?

இந்தக் கவிதை ஒன்று மட்டுமன்று. இதைத் தவிர இந்துமதியின் கண்களை நினைத்து அந்த ஞாபகத்தினாலும் நான் ஏதோ பாட முயன்றேன். அது பாட்டாக வரவில்லை. ஆனால் பாட முயன்ற குறிப்புக்கள் எனக்கு நினைவிருக்கின்றன. அவை இதோ:

''அவளுடைய கண்கள் பேசுவதுண்டு. ஆனால் அவற்றுக்கு விதம் விதமான உணர்வுகளைப் பேசத் தெரியாது. ஒரே வார்த்தையைத் தான் பேசத் தெரியும். அந்த வார்த்தைக்கு அர்த்தமும் ஒன்றாகவேதான் இருக்கும். அந்த வார்த்தை என்ன தெரியுமா?

''குறும்பு.''

இந்துமதியின் இதழ்களோடும், கண்களோடும் சேர்த்து நினைத்துப் பார்க்கும் போது இந்த ஒற்றைச் சொல்லுக்கு அர்த்தம் பெருகுகிறது.

இரண்டாவது முறையாக நான் இந்துமதியைச் சந்திக்க முடிந்த சமயம் அவளைப் பற்றி நானோ என்னைப் பற்றி அவளோ ஒன்றும் நினைக்க முடியாத சமயம். அந்தச் சமயத்தில் நான் அவளைச் சந்திக்கப் போயிருக்கக் கூடாது. ஆனால் நான்தான் போகும்படி நேர்ந்தது.

நவராத்திரி விடுமுறைக்கோ எதற்கோ கிராமத்துக்குப் போயிருந்தேன். என் தகப்பனார் வேறு உடல் நலமின்றிப் படுத்த படுக்கையாக இருந்தார். ஏதோ ஒரு நாள் அதிகாலை நான்கு மணி சுமாருக்கு நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த என்னைப் பெரிய அக்கா வந்து அவசரமாக எழுப்பினாள்.

''எழுந்திருந்து உடனே அப்பாவைப் போய்ப் பார். உன்னை ஏதோ முக்கியமான காரியத்துக்கு அனுப்பணுமாம். அப்பா உன்னைக் கையோடு எழுப்பிக் கொண்டு வரச் சொன்னார்'' என்று பரபரப்போடு கூறினாள் அக்கா. தூக்கக் கிறக்கத்தில் அக்கா கூறியதைப் புரிந்து கொள்ளவே சிறிது நேரமாயிற்று எனக்கு.

அந்த இருட்டில் விடியற்காலம் நான்கு மணிக்கு அத்தனை அவசரமாக என்ன காரியம் இருக்கும் என்று எண்ணிக்கொண்டே எழுந்து போய்ப் பல் விளக்கி விட்டு வேறு உடை மாற்றிக் கொண்டு அப்பாவைப் பார்த்தேன்.

''இதென்னது? வெளேரென்று மல்லிகைப் பூ மாதிரி வெளுத்த சட்டையும் வேட்டியுமாக வந்து நிற்கிறே? போய் வேறே ஏதாவது பழசாக மாற்றிக் கொண்டு வந்து சேர். சாவு வீட்டுக்கு இந்தக் கோலத்தில் போய் நின்றால் ரொம்ப லட்சணமாகத்தான் இருக்கும்.....'' என்றார் அப்பா.

நான் ஒன்றும் தெளிவாகப் புரியாமல் மருண்டு போய் அவரைப் பார்த்தேன்.

''நம்ம பள்ளிக்கூடத்து ஹெட்மாஸ்டர் திடீர்னு போயிட்டார். ராத்திரி ரெண்டரை மணி சுமாருக்கு ஆள் வந்து சொன்னான். 'ஹார்ட் அட்டாக்'காம். பாவம்! தங்கமான மனிதர். மூத்த பெண்ணைத் தவிர அந்த வீட்டில் எல்லாம் சிறிசுகள். அதோ அந்தக் கவர்லே சில்லறையும் நோட்டுமா ஐந்நூறு ரூபாய் வரை எடுத்து வைச்சிருக்கேன். அதை எடுத்துக் கொண்டு போய்க் கூட இருந்து கடைசி வரை எல்லாம் செய்து விட்டு வா. அஸிஸ்டெண்டு ஹெட்மாஸ்டரை விட்டுப் பள்ளிக்கூடம் இன்னிக்கு லீவுன்னு சர்க்குலர் அனுப்பச் சொல்லு. அந்தப் பொண் நானே வரலையேன்னு ஏதாவது தப்பாக நினைச்சுக்கப் போறது. நான் நடமாட முடியாதபடி படுத்த படுக்கையா இருக்கேன்னு நிலைமையைச் சொல்லு..... என்ன கஷ்டம் பாரேன்?... பள்ளிக்கூடத்துக்கு நல்ல ஹெட்மாஸ்டராகக் கிடைச்சிருக்கார்னு திருப்திப்பட்டுக் கொண்டிருந்தேன். என் திருப்தி இப்படியா ஆகணும்?... சரி, நீ போ... நாழிகையாகிறது'' என்றார் அப்பா.

எனக்கு மிகவும் வருத்தமாயிருந்தது. 'இந்துமதியை நான் சந்திக்க நேரும் இரண்டாவது சந்திப்பு இப்படியா இருக்க வேண்டும்?' என்ற வருத்தத்தோடு உடை மாற்றிக் கொண்டு புறப்பட்டேன். ஹெட்மாஸ்டர் வீட்டிலிருந்து ஒரு பர்லாங் தூரம் மாணவர்கள் கூட்டம் கூடியிருந்தது. ஆசிரியர்களும் கூடியிருந்தார்கள். வீட்டில் இந்துமதியைப் போலவே அவளுடைய தம்பி தங்கைகளாகிய தாயில்லாக் குழந்தைகளும் கதறி அழுது கொண்டிருந்தார்கள்.

''உங்கள் தந்தையைப் போன்ற தங்கமான மனிதரை இனிமேல் எங்கள் பள்ளிக்கூடம் காணப் போவதில்லை. உங்கள் துக்கத்துக்கு

ஆறுதல் கூற முடியாமல் நான் தவிக்கிறேன்.' உங்களுக்கு இப்படி நேர்ந்திருக்க வேண்டாம் என்று நான் ஏதேதோ சொன்னேன். அவள் குனிந்த தலை நிமிராமல் அழுது கொண்டிருந்தாள். இன்னும் சில பிஞ்சுக் குரல்களும் அழுது கொண்டிருந்தன.

இன்று அவளுடைய இதழ்களைவிட அதிகமாகக் கண்கள் சிவந்திருந்தன. விடிய விடிய அழுதிருந்தாள் போலிருக்கிறது. முதுகு தெரியாமல் அவிழ்ந்த கூந்தல் கருமை மின்னை அலை அலையாகச் சரிந்து கிடந்தது.

வயதும் அனுபவமும் இல்லாத இளைஞன் இந்த மாதிரித் துக்க வீட்டில் எப்படி நடந்து கொள்வதென்று தெரியாமல் தவிக்கும் நிலையில் எப்படி இருக்குமோ அப்படித்தான் அன்றைய அநுபவங்கள் எனக்கும் இருந்தன.

காரியங்கள் எல்லாம் நடந்து முடிந்தபின் பிற்பகலில் எங்கள் வீட்டிலிருந்து சாப்பாடு கொண்டு வரச் செய்து அந்தப் பெண்ணையும் அவள் தம்பி தங்கைகளையும் சமாதானம் செய்து சாப்பிட வைத்தபின்புதான் நான் வீடு திரும்பினேன்.

அன்றிரவு என் தந்தை என்னைக் கூப்பிட்டு ஒரு யோசனை கேட்டார்.

''அந்தப் பெண் இந்துமதி எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்திருக்கிறாளாம். நம்மை நம்பி வந்த குடும்பம். டைப்ரைட்டிங் தெரியுமாம். உபகாரமாக ஒரு காரியம் செய்யலாம்னு பார்க்கிறேன். பள்ளிக்கூடத்திலேயே ஒரு கிளார்க்காகப் போட்டுக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது. நீ என்ன நினைக்கிறாய்?''

''உங்கள் விருப்பம் போல் செய்யுங்கள்'' என்றேன். நாலைந்து நாட்களுக்குப் பிறகு இந்துமதியை வேலைக்கு நியமித்து என் தந்தை கொடுத்த ஆர்டரை அவளிடம் கொண்டு போய்ச் சேர்க்கும்போதும் நான் அவளைச் சந்தித்தேன். இந்தச் சந்திப்பின்போதும் நான் அவளைச் சந்தித்தேன் என்பதைவிடச் சந்தித்ததைச் சிறப்பிக்கும் தனி அர்த்தம் ஏதும் இல்லை.

சந்திப்பு 3

முடங்கி அரைகுறையாக நிற்கிற காரியங்கள் மேலே நகர்கிற வரை அப்படி அரைகுறையாய் நிற்பதே அவற்றுக்கு முடிவு என்று சொன்னேனல்லவா? அவ்வாறு சொன்னதில் நிறைய அர்த்தம் உண்டு.

இந்துமதியின் ஞாபகம் அப்படி ஒரு முடியாத ஒரு முடிவாய் என்னுள் இருந்தது. நான் அவளுடைய தகப்பனாரின் மரணத்துக்குத் துக்கம் கேட்கப் போன போதோ அவளை எங்கள் பள்ளிக்கூடத்தில் வேலைக்கு நியமித்து அந்த ஆர்டரைக் கொடுக்கப் போன போதோ அவளுடைய நெருப்புக்கனி போன்ற இதழ்களில் ஏதாவது சொல் பிறந்து என் செவிகளில் ஒலிக்கும் என்று எனக்குள் எதிர்பார்த்தது உண்டு. ஆனால் ஒரு சொல்லும் பிறக்கவில்லை. அப்படிச் சொல் பிறக்க வில்லையே என்பதற்காக நான் அதிகமாக வருந்தவில்லையானாலும் 'அந்த இதழ்கள் பேசினால் எப்படி இருக்கும்' என்று எனக்குள் அந்தரங்கமாக நினைத்துப் பார்த்ததை மட்டும் ஒளிக்க முடியாது.

இதற்கு அடுத்த வருடம் என்னுடைய வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது. 'முக்கியம் என்ன முக்கியம்? வண்டிச் சக்கரம்போல் சுற்றிக் கொண்டிருக்கிற வாழ்க்கையில் சுற்றுகிற வழி மாறினால் அந்த மாறுதலே ஒரு முக்கியம்தான். மாறிய வழியிலேயே பல முறை சுற்றிவிட்டால் அதுவும் முக்கியமற்றுப் போகலாம். பண வளத்தையும் அதன் காரணமாக உலகத்துக்குக் காண்பித்துத் தீர வேண்டிய ஸ்டேட்டஸையும் நிருபிப்பதற்காக என் தகப்பனார் என்னை வெளிநாட்டுப் பல்கலைக் கழகம் ஒன்றிற்கு மேல் படிப்புப் படிக்க அனுப்பினார். இன்னும் இரண்டு ஆண்டுகள் கோடை விடுமுறைக்காகக் கூட ஊருக்கு வர முடியாது. விடுமுறைக் காலத்திலகூட வெளிநாட்டு வாசம்தான். மிகவும் கலபமாக அதே சமயத்தில் மிகவும் விரைவாக நான் அந்நியநாட்டு வாசியானேன்.

எங்கோ தூர தேசத்தில் வாழ்ந்தாலும் சொந்த தேசத்து ஞாபகங்களை விட முடியாது தான். என்னுடைய ஞாபகத்துக்குக் காரணமான பொருளின் அழகு என் நினைவில் என்னுடன்கூட இருக்கும் என்ற நம்பிக்கையோடு புறப்பட்டேன் நான். தகப்பனருக்கு நான் அவர் சொற்படி கேட்டதில் பெரு மகிழ்ச்சி.

நாலைந்து மாதங்களுக்குப் பின்பு என்னுடைய பெரிய அக்கா எனக்கு எழுதியிருந்த கடிதமொன்றில், ''உன்னுடைய இந்துமதி முந்தா நாள் இங்கே நம் வீட்டுக்கு வந்திருந்த போது, 'போன இடத்தில் ரகு சௌக்கியமாக இருக்கிறாரா?' என்று என்னிடம் பேச்சுக்கு நடுவே இரண்டு வார்த்தை உன்னைப் பற்றியும் விசாரித்தாளடா அப்பா. இந்த விஷயத்தை எழுதினால் நீ இரண்டு சுற்றுப் பருத்தாலும் பருத்து விடுவாய் என்று நம்பி எழுதியிருக்கிறேன்'' என்று என்னைக் கேலிசெய்து வேடிக்கையாக எழுதியிருந்தாள் அக்கா.

அக்காவின் இந்தக் கடிதம் என் கையில் கிடைத்த தினத்தின் சாயங்கால வேளையைக் கொண்டாடினேன் நான். இந்தக் கடிதத்தைப் படித்து முடித்தபின் என்னுடைய மனக் கண்ணில் நெருப்புக் கனிகளாய் மின்னும் இந்துமதியின் இதழ்கள் தோன்றி மேலும் கீழுமாய் மெல்ல அசைந்து என் தமக்கையை நோக்கி, 'போன இடத்தில் ரகு சௌக்கியமாயிருக்கிறாரா?' என்று கேட்கும் காட்சி தெரிந்தது. அந்த உதடுகளின் வழியாக என்னைப் பற்றிய சௌக்கியம் விசாரிக்கப்பட்டதன் காரணமாகவே நான் இன்னும் அதிக சௌக்கியத்தைப் பெற்றேன். அன்று அந்தச் சாயங்கால வேளையில் முன்பு கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது சுயமாக இயற்றிப் பாடினாற் போல் ஏதாவது கவி பாட வேண்டுமென்று எனக்கு ஆசையாக இருந்தது. ஆனால் நான் ஒரு பிறவிக் கவிஞன் இல்லையே. என்னிடம் எப்போதோ தப்பித் தவறிப் பிறந்த அந்தக் கவிதையும் என் முயற்சியால் அழகுற அமைந்ததென்று சொல்ல முடியாது. என் ஞாபகத்தில் உறுத்திக் கொண்டிருந்த அழகுதான் அந்தச் சொற்களிலும் போய்ப் படிந்திருக்க வேண்டும். வேறு காரணம் இருக்க முடியாது.

அந்தக் கடிதம் எனக்குக் கிடைத்த சாயங்கால வேளையில் கடல் கடந்த அந்நிய தேசத்தின் முக்கிய நகரமான அந்தப் பட்டணத்தின் தெருவெல்லாம் வாய் விரும்பியவாறு பாடிக் கொண்டு கால்கள் போனவாறு உலாவ வேண்டும் போலத் தவிப்பாக இருந்தது எனக்கு. இதற்கு மேல் இதைச் சொல்லவும் என்னிடம் சொற்கள் இல்லை.

இதுவரை நான் சொல்லிக் கொண்டு வந்ததெல்லாம் மிகவும் பைத்தியக்காரத்தனமாக இருந்தது என்று நினைக்கிறீர்கள் அல்லவா? எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. ஆனால் இந்தக் பைத்தியக்காரத்தனத்தைத் தான் நூறு தலைமுறைகளுக்கும் மேலாகக் கவிகள் உருகி உருகிப் பாடி வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள். உண்டா? இல்லையா?

கவிகளை நீங்கள் மன்னித்து விடத் தயாராக இருப்பீர்கள். ஏனென்றால் அவர்கள் சமுதாயத்தின் இனிமையை எதிரொலிக்கும் மானிடக் குயில்கள். நான் பிறவிக் கவியில்லை என்பதைத்தான் முன்பே சொல்லி விட்டேனே. ஆனால் என்னைப் போன்ற செல்வக் குடும்பத்து இளைஞர்கள் எங்கள் செல்வங்களைப் பற்றிய ஞாபகங்களை யெல்லாம் மறந்து விட்டுக் கண்களில் என்றோ ஒரு நாள் தற்செயலாக நேர்ந்த ஏதோ ஓர் அழகை மட்டும் தனி ஞாபகமாக்கிக் கொள்வதாகிய தியாகத்தைச் செய்வதற்காகவாவது பிறரிடமிருந்து தகுந்த அநுதாபத்தைப் பெற வேண்டும்.

இந்துமதியை நான் சந்தித்த முதல் சந்திப்பிலிருந்து அந்த அநுதாபத்தை அடைய வேண்டிய தகுதி எனக்கும் வந்து விட்டது. பிறருடைய நினைப்பிலிருந்து மற்றெல்லாவற்றையும் அடித்துத் துரத்தி விட்டு ஒரே ஒரு நினைப்பாகத் தான் மட்டுமேயாகிப் புகுந்து நின்றுகொள்கிற அழகு யாருடையதாக இருந்தாலும் அவர்கள் அற்புதமானவர்கள். அவர்களுடைய அழகின் முன்னால் பல பேருடைய நினைவுகள் தோற்று வீழ்கின்றன. பலபேருடைய ஆற்றல்கள் பணிகின்றன.

என் தகப்பனாரின் லட்சங்களுக்கும், புகழுக்கும், எங்கள் குடும்பப் பெருமைக்குமாக என்னை நினைத்துக் கொண்டிருப்பவர்கள் பலர் இருக்கலாம். அது புதுமையில்லை. இயல்பு தான். நான் நினைத்துக் கொண்டிருப்பது தான் பெரிது. நான் பலரால் நினைக்கப்படுவது என் பெருமிதம். நானே ஒன்றை நினைத்துத் தவிப்பது என் தோல்வி. ஆனால் அது மிகவும் சுகமான தோல்வி.

என் முகத்தை நிமிர்ந்து பார்த்து என்னிடம் ஒரு வார்த்தைகூடப் பேசாத ஒருத்திக்கு நான் அந்தரங்கமாகத் தோற்றுக் கொண்டிருப்பது கேவலமில்லையா ?

கேவலம்தான். ஆனால் உலகத்தில் எல்லா உணர்வுகளையும் தன்மானத்தை அளவுகோலாக வைத்து அளந்து பார்க்கக் கூடாது. தனிமையான சில உணர்வுகளை அளந்து பார்க்கத் தோற்றுப் போகவும் வேண்டியதுதான். நான் இந்துமதியின் ஞாபகத்தைச் சொல்ல முயலும் போது அரைகுறையான அந்த அநுபவம் முடிந்தது போல் இருந்து கொண்டே முடிவதற்குத் தேவையான எதையோ அடுத்த சந்திப்பின் போது எதிர்பார்க்கிறது. இப்போது இதைக் கூறவும் என்னிடம் இதற்கு மேல் சொற்கள் இல்லை.

(அடுத்த இதழில் முடியும்)

மூன்று ரொட்டிகள்

பெரிய விருந்து. பெரும் புள்ளிகளுக்கு மட்டுமே அழைப்பு. மேலை நாட்டு முறையிலே விருந்து. ஆனால் கிழை நாட்டுப் பிரமுகர்களும் கலந்து கொண்ட விருந்து. ஆம், மணி மணியாகப் பொறுக்கி யெடுக்கப்பட்டவர்கள் மட்டுமே அவ்விருந்துக்கு வந்திருந்தனர்.

விருந்துக்குப் பின் பேச்சு. இதுவும் மேலை நாட்டுச் சம்பிரதாயம்! நம் நாட்டிலும் விருந்துண்டு. விருந்துக்குப் பாயசம், பட்சணம், சர்க்கரைப் பொங்கல் என்று ஏதாவது இன் சுவைப் பொருள் உண்டு. இதைச் சாப்பிடும் பொழுது திகட்டாமல் இருக்க வேண்டும், வேண்டிய அளவு அவரவர்கள் சாப்பிட வேண்டும் என்பதற்காகவோ அல்லது 'செவிக்குணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்' என்ற மூதுரைப் படியோ, நல்ல சுஸ்வரமுள்ள பாகவதர்கள் இனிய இசை எழுப்பிச் சுலோகம் பாடுவார்கள்: பகவானைப் பரவிப் பாடுவார்கள். எந்த நேரத்திலும் — அது சாப்பாட்டு நேரமாயிருந்தாலும் சரி, பூஜை நேரமாயிருந்தாலும் சரி,— ஆண்டவனின் நினைவு அகலாமல் இருக்க வேண்டும் என்னும் குறிக்கோள் கொண்டதாயிருக்கும். இது நம் நாட்டு வாழ்க்கை; நம் நாட்டுப் பண்பாடு.

அங்கோ பேச்சு; பாராட்டுப் பேச்சு. விருந்து கொடுத்தவர்களையோ, விருந்துக்கு விசேஷமாக அழைக்கப்பட்டவர்களையோ பற்றிப் புகழ்ச்சியுரை. சிற்சில சமயம் இகழ்ச்சியையும் சுவையான பொங்கலில் கல்லெனக் கலந்து விடுவது உண்டு.

ஆங்கிலேயர் ஒருவர் எழுந்தார். அவருக்குத் தம் இனத்தினிடம் அபாரப் பற்று. தங்களைக் காட்டிலும் உயர்ந்த இனத்தினர் உலகிலேயே இல்லையென்ற அபிப்பிராயம். தமது பேச்சில் இவ்வெண்ணம் தொனிக்கப் பேசினார்: ''ஆண்டவனுக்கு எங்கள் இனத்திடம் தான் அபாரப் பற்று. அதனால் தான் எங்களை அன்போடு, மிகப் பிரயாசைப் பட்டு இத்தகைய நல்ல வெள்ளை நிறத்தில் படைத்திருக்கிறார்'' என்றார்.

நம் தென்னாட்டைச் சேர்ந்த ஒருவரும் அவ்விருந்துக்கு வந்திருந்தார். ஆங்கிலேயரின் அந்தப் பேச்சு அவருக்குப் பிடிக்கவில்லை. 'எல்லோரும் ஓரினம். ஆண்டவனுக்கு இம்மி கூட வேற்றுமை உணர்வு கிடையாது' என்ற சீரிய கொள்கை உடையவர் தான் அவர். ஆயினும் ஆங்கிலேயரின் பேச்சு மற்ற இனத்தவர்களைத் தாழ்த்துவதாய்ப் படவே எழுந்தார்.

''அன்பர்களே! நண்பர்களே! எனக்கு முன் பேசியவரின் பேச்சை முற்றிலும் நான் ஆமோதிக்கிறேன். ஆனால் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். ஆண்டவனுக்குத் திடீரென்று ரொட்டி சுட வேண்டும் என்ற ஆசை தோன்றிற்று. ஆண்டவனுக்கு ஆசை தோன்றலாமா என்று கேட்காதீர்கள். ஆசையும் ஆசையின்மையும் அவனைப் பொறுத்த வரை ஒன்று தான். கோதுமை மாவைப் பிசைந்து வைத்துக் கொண்டு, அடுப்பைப் பற்ற வைத்து இருப்புச் சட்டியை ஏற்றி ரொட்டி சுட்டான். இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் எடுத்தான். ஒரே வெளுப்பாயிருந்தது ரொட்டி. நன்றாக வேகவும் இல்லை. அதை இந்த ஆங்கிலேயர்களுக்குக் கொடுத்து விட்டான். இவர்கள் நல்ல வெள்ளை நிறமாக இருப்பதற்கு இதுவே காரணம். அடுத்த ரொட்டியைச் சுடும்பொழுது அவசரத்தைக் கைவிட்டு நிதானத்தை மேற்கொண்டான். அதிக நேரம் இருந்தால் தான் ரொட்டி நன்றாக வேகும் என்று தோன்றியது. அளவுக்கு அதிக நேரம் அடுப்பில் வைத்து விடவே, ரொட்டி காந்திக் கருகி விட்டது. அதை நீக்ரோக்களுக்குக் கொடுத்தான். அதன் பலனாக அவர்களுடைய நிறம் மிகவும் கறுத்து விட்டது.

'அட, நமக்கு ரொட்டி கூடவா சுட வரவில்லை?' என்று ஆண்டவனுக்கே வெட்கமாய்ப் போய் விட்டது. ஆனால் இரண்டு ரொட்டிகள் சுட்ட அனுபவம், 'சீக்கிரமாகவும் எடுக்கக் கூடாது. அதிக நேரம் அடுப்பிலேயும் வைத்திருக்கவும் கூடாது' என்னும் பேருண்மையைக் கற்றுக் கொடுத்திருந்தது. எனவே, ஜாக்கிரதையாக மூன்றாவது ரொட்டியை எடுத்தான். அது அரை வேக்காடாகவும் இல்லை. அதிகமாகக் கருகியும் விடவில்லை. இன்னவும் மிக ருசியாக இருந்தது. அதை இந்தியர்களுக்குக் கொடுத்தான். பாரத மக்களின் பிறப்பு அநுபவத்தின் வாயிலாக ஏற்பட்டது. எனவே, ஆண்டவனையும் அறிந்து உலகினரையும் சமமாகப் பாவிக்கும் அறிவு பெற்றிருக்கிறார்கள்'' என்றார். விருந்தினரிடையே பெருத்த கரகோஷம் எழுந்தது. இப்படி நம் பாரதத்தின் பெருமைக்குப் பெருமை சேர்த்தவர் யார், தெரியுமா? நமது இன்றைய புதிய ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள்தான்.

— அக்ஷயம்


பளுவான
போக்குவரத்து
சாதனங்களுக்கு
சியெட் டயர்கள்
டிரக் ஓட்டிகள் சியெட் டயர்களை நம்புகிறார்கள்.... ஏனெனில், அவை தொடர்ந்த கடுமையான ஓட்டத்திலும் தேய்மானம் மற்றும் பழுதாகாதபடி அதிக உறுதியானவை. வழுக்குதலில்லாத அமைப்புடைய, தனிப்பட்ட ஆழ்ந்த டிரெட் கொண்டவை.சியெட் டயர்களே—அதிக வேகம் மற்றும் மிகக் குறைந்த செயலாக்கச் செலவுகளுக்கென்றே பிரத்தியேகமாய் உருவாக்கப்பட்டிருக்கின்றன.
சியெட்
நெடுஞ் சாலைகளில்
உங்கள் உறுதுணைவன்.
CT.G.28.AH

நந்தவனம்

19. முல்லை மலர்

செண்பக சுந்தரியின் வீட்டுக்குச் சென்று திரும்பிய வில்வநாதன், ஆற்றுெணுத துயரத்தில் ஆழ்ந்து தவித்தான்! தன்னுடைய வீட்டுக்கு வரவேண்டாம் என்று தடுத்தாளே அவள்? அந்த ஆட்சேபத்தையும் மீறித்தானே அங்கே போனுன்! அதன் விளைவு இத்தனை பெருந் துயரமாக இருக்கும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை!

'சேற்றில் தாமரையும், சிப்பியிலே முத்தும், வண்டின் வாயிலே தேனும் இல்லையா! அப்படி அந்த அம்மாளுடைய வயிற்றிலே வந்து பிறந்திருக்கிருள் இந்தப் பெண்!' என்று கம்பரையா சொன்னுரல்லவா! அது எவ்வளவு உண்மையான வார்த்தை என்பதை நினைத்துப் பார்த்தான் வில்வநாதன்.

முள்ளுக்கு மத்தியிலே ரோஜாப் பூ மலர்வது போல, இந்தத் துன்ப வேதனைக்கு மத்தியிலே செண்பக சுந்தரி மலர்ந்து நிற்கிருள் என்று எண்ணினுன் அந்த



ஓவிய இளைஞன். அவனுடைய இதயத்தில் அந்த வேதனையின் முள் குத்தியது!

வில்வநாதனுக்கு இப்பொழுது நன்றாகத் தெரிந்தது. தன்னையும் மீறி ஏதோ ஒரு பாசம் தன்னைச் செண்பக சுந்தரியிடம் இழுக்கிறது என்று! அவனால் அந்தப் பாச வேகத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அந்த நந்தவனத்திலே நின்ற சுவர் ஓவியங்கள் எல்லாம் அரை குறையாக நின்று அவனைப் பரிகசித்தன!

எந்த மகத்தான நோக்கத்தோடு அந்த வன தேவதையின் கோவிலுக்கு வந்தான் அவன்! ஜமீந்தாருடைய இலட்சியம், ஓவியத் தந்தையின் கனவு, தான் அவற்றை நிறைவேற்றுவதற்காக மேற்கொண்ட புண்ணியப் பணி—அத்தனையும் காற்றிலே பறந்து விட்டன! காற்றோடு காற்றாக வந்த பாடல், அந்தப் பாடலிலே நெளிந்த சித்திரக் கற்பனை ஆகிய அனைத்தும் மறைந்து, இப்பொழுது செண்பகசுந்தரியும் அவளுடைய துன்பச் சூழ்நிலையும் சேர்ந்து வில்வநாதனுடைய இதயத்தை வேதனை செய்தன.

பட்டரும் கம்பரும் வந்தார்கள். மலையடிவாரத்துக்குப் போய் வந்த செய்தியை விசாரித்தார்கள். பட்டர் சொன்னார்: ''தம்பி, சித்திரக் கற்பனைகளுக்குச் சில புத்தகங்கள் கொண்டு வந்தேன். ஆனால், புத்தகங்களையும் விட உங்களுக்கு நன்கு பயன்படக்கூடிய இடத்துக்கே போய்வந்து விட்டீர்கள்! அதுவும் நன்மைக்கே!''

பட்டர் இப்படிச் சொன்னதும் கம்பர் அந்த வார்த்தைகளை ஆமோதித்துக் கொண்டே வில்வநாதனின் முகத்தையே பார்த்தார். அதில் துயரம் படர்ந்ததைக் கவனித்தார்.

''ஐயா! நீங்கள் இருவரும் உலக அனுபவமும் சாஸ்திர அறிவும் நிரம்பிய பெரியவர்கள். உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். என்னைத் தப்பாக நினைத்துக் கொள்ளக் கூடாது!''

இவ்வாறு தொடங்கினான் வில்வநாதன். கம்பர் சொன்னார்:

''தம்பி, உங்களுடைய முகம் வாடியிருக்கிறது. கண்களிலே ஏதோ ஒரு குழப்பம் தெரிகிறது. நீங்கள் வெளிப்படையாகச் சொல்லா விட்டாலும் ஓரளவு உங்கள் மன நிலை எங்கள் இருவருக்கும் புரிகிறது!''

கம்பருடைய இந்த வார்த்தைகளுக்கு வில்வநாதன் மறுமொழி கூறினான்:

''ஐயா! இன்று செண்பக சுந்தரியின் வீட்டுக்குப் போய் வந்ததிலிருந்து என் மனம் ஒரு நிலையில் இல்லை. என்னையும் மீறி அந்தப் பெண்ணிடம் ஒரு அனுதாபம் ஏற்படுகிறது. அளவு கடந்த இரக்கம், அவளுடைய நிலைமையைப் பார்த்த பிறகு ஏற்பட்ட எல்லையற்ற ஒரு—அதை எப்படிச் சொல்லுவது. இரக்கம் என்பதா? கருணை என்பதா? அனுதாபம் என்பதா? எனக்குச் சொல்லத் தெரியவில்லை!''

இப்படிக் கூறினான் வில்வநாதன்.

கம்பர் சொன்னார்:

''தம்பி, அந்தப் பெண் பாடிய பாடலைக் கேட்டதிலிருந்து உங்களுக்கு அந்தக் குரலிலும் அந்தப் பாடலின் கற்பனையிலும் ஒரு ஈடுபாடு ஏற்பட்டது. பிறகு அந்தப் பெண்ணைப் பார்த்ததிலிருந்து அவளுடைய பண்பாடுகளில் ஒரு வியப்பு உண்டாயிற்று. பின்னர், அவளுடைய வீட்டுக்குச் சென்ற பிறகோ அவளுடைய துயரங்களைக் கண்டதிலிருந்து அவளிடம் ஒரு — அதை எப்படிச் சொல்வதென்று எனக்குமே புரியவில்லை!''

கம்பர் இப்படிச் சொல்லிக் கொண்டே இருக்கும் போது பட்டர் குறுக்கிட்டார்.



''இசையிலே ஆரம்பித்த ஈடுபாடு, பிறகு அந்த இசைக்கு உரிய பெண்ணிடம் அன்பாக மலர்ந்தது. பிறகு அந்த அன்பு அவளுடைய துயரங்களைக் கண்டு அனுதாபமாகவும், மன வேதனையாகவும், மனம் ஒன்றிய சொந்தத் துயரமாகவுமே, படிப்படியாக வளர்ந்து விட்டது. இதயத்தின் உணர்ச்சி தத்துவத்தில் இதெல்லாம் ஒரு வரிசைக் கிரமம். நம்முடைய சாஸ்திரங்களில் இந்தப் பரிணாம தத்துவத்தை மிகவும் விரிவாக ஆராய்ந்திருக்கிறார்கள் நம்முடைய பெரியோர்கள்! ஆனால் இதனுடைய முடிவு எங்கே போய் நிற்கும் என்பதில் அவர்களுக்கெல்லாம் மிக மிகக் கவலை. அதனால்தான் ஒரு வாலிபனும் ஒரு இளம் பெண்ணும் தனியாகச் சந்திப்பதைப் பற்றி, ஏதேதோ கட்டுப்பாடுகளை நம்முடைய நூல்கள் வகுத்துக் கூறியிருக்கின்றன! இனிமேல் அதையெல்லாம் உங்களிடம் எடுத்துச் சொல்லி என்ன பயன்! சித்திரப் பணி அரைகுறையாக நின்று விடாமல் அது தொடர்ந்து நடைபெற வேண்டும். ஜமீந்தார் அவர்களுடைய நோக்கம் நிறைவேற வேண்டும். அதற்குரிய காரியங்களையெல்லாம் முதலில் கவனியுங்கள். அந்தப் பணியை முடித்துவிட்டால், பிறகு இந்த மனத் தத்துவ ஆராய்ச்சிகளையெல்லாம் சாவதானமாகச் செய்து கொள்ளுவோம்!''

இப்படிச் சொன்னார் பட்டர். கம்பர் வில்வநாதனுடைய முகத்தில் தோன்றிய கலவரங்களைப் பார்த்து மனம் நொந்தவராய் ஒன்றுமே பேசாமல் துக்கத்தோடு உட்கார்ந்திருந்தார்!

''என்ன கம்பரையா! எனக்கு எதையும் மனசில் வைத்திருக்கத் தெரியாது! நினைத்ததை அப்படியே சொல்லி விட்டேன். ஆனால் என்ன! எதுவும் நன்மைக்கே! இப்பொழுது என்ன குடிமுழுகிப் போய் விட்டது! சித்திர வேலையெல்லாம் சரியாக நடந்து முடிந்துவிட்டால், ஜமீந்தாரே ஒன்றாய் இருந்து எல்லாக் காரியங்களையும் மங்களகரமாக முடித்து வைப்பார்! தம்பி, கவலையையெல்லாம் உதறித் தள்ளிவிட்டுச் சித்திரத்திலே கொஞ்சம் மனசைச் செலுத்து!''

இவ்வாறு சொல்லிவிட்டுப் பூஜைக்கு நேரமாகி விட்டதால் கோவிலுக்குள்ளே சென்றார் பட்டர். சற்று நேரத்தில் கம்பரும் அவரைப் பின்தொடர்ந்தார்.

அன்று செண்பக சுந்தரி நந்தவனத்துக்கு வந்த போது வில்வநாதனைத் தனியாகச் சந்தித்துப் பேச வேண்டும் என்ற அளவு கடந்த ஆசையோடு வந்தாள். ஆனால் அன்று நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் எதிர்பாராத விதமாக இருந்தன.

பட்டரும் கம்பரும் கோவிலிலேயே இருந்தார்கள். அது மட்டுமில்லை.— யாரும் சற்றுமே எண்ணிப் பாராத விதத்தில் திவான் பகதூர் செந்தில் நாயகம் செண்பக வனத்துக்கு வந்து சேர்ந்து விட்டார்!

என்ன நோக்கத்தோடு அந்த நேரத்தில் வக்கீல் அங்கே வந்தார் என்பதை யாராலும் ஊகிக்க முடியவில்லை. இந்த நான்கு பேரையும் ஒன்றாகப் பார்த்த போது திவான்பகதூருக்கு ஒரு திகைப்பு ஏற்பட்ட போதிலும் அந்தத் திகைப்பை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை! வழக்கமான புன்னகையோடு யோக க்ஷேமங்களை விசாரிக்க ஆரம்பித்தார்.

''பட்டர்வாள்! எங்களுக்கெல்லாம் ஆண்டுதோறும் ஒரு வயது கூடுகிறது. உங்களுக்கு ஒவ்வொரு வருஷமும் இரண்டு வயது குறைகிறதே!''

வக்கீலின் இந்த வார்த்தையைக் கேட்டதும் பட்டருக்கு உச்சி குளிர்ந்தது. அடுத்தாற் போல் கம்பரிடம் சென்று ''என்ன கவிச்சக்கரவர்த்தி! சௌக்கியந்தானே!'' என்று கேட்டார்! பிறகு செண்பக சுந்தரியைப் பார்த்து, ''அம்மா சௌக்கியமாக இருக்கிறார்களா? ஜடை நாய்க்குட்டி சௌக்கியமா?'' என்று விசாரித்தார்.

இந்த விசாரணைகளால் அங்கே ஒரு கலகலப்பு உண்டாயிற்று. அப்படியே பேச்சைத் தொடர்ந்தார் வக்கீல்.

''நம்முடைய ஓவிய இளைஞரிடம் சில முக்கியமான ஏற்பாடுகளைப் பற்றிப் பேச வேண்டியிருக்கிறது. சென்னையில் அவருடைய கலைக் கல்லூரி விஷயமாகச் சில பத்திரங்களில் கையெழுத்து வாங்க வேண்டியதிருக்கிறது. அதையெல்லாம் முடித்துப் போகலாம் என்று வந்தேன்!''

இவ்வாறு மெதுவாக வார்த்தைகளை இழுத்தார் வக்கீல். செண்பகசுந்தரியும், பட்டரும், கம்பரும் நிலைமையைப் புரிந்து கொண்டவர்களாக அங்கிருந்து விடை பெற்றார்கள். வக்கீல் வில்வநாதனைத் தனியாக அழைத்துக்கொண்டு சத்திரத்துக்குள் வந்து ஏதோ இரகசியங்கள் பேச ஆரம்பித்தார்.

அன்று தமது வீட்டுக்குச் செல்லும் போதே பட்டர் யோசிக்கலானார்: 'எத்தனை அவசரமான காகிதக் கட்டுக்களானாலும், வக்கீலே புறப்பட்டு வர வேண்டுமா? குமாஸ்தாவை அனுப்பினால் போதாதா? கையெழுத்து வாங்குவதற்காகத் திவான் பகதூரே வர


HAZELINE
TALCUM
POWDER
BURROUGHS WELLCOME & CO. (INDIA) PRIVATE LTD

நீங்கள்
அதிக பலன் அடைய
சிறந்த திட்டம்

எங்கள் ரெக்கரிங் டிபாசிட் திட்டம்

பிரதிமாதம் தொடர்ந்து செய்யும் டிபாஸிட் தொகையான	ரூ. 10	ரூ. 100	ரூ. 500
கீழ்க்கண்டபடி பெருகும்:			
46 மாதங்களில்	ரூ. 500	ரூ. 5000	ரூ. 25000
86 மாதங்களில்	ரூ. 1000	ரூ. 10000	ரூ. 50000

தி

யுனைடெட் கமர்ஷியல்


பாங்க் லிட்.

தலைமை ஆபீஸ்—கல்கத்தா


ஜி. டி. பிர்லா
சேர்மன்


எஸ். டி. சதாசிவன்
ஜெனரல் மானேஜர்

UCO. 1/62 TM



சுத்தமான
வைரங்கள்





பாபாலால் அண்டு கோ

பொன் வெள்ளி நகை வியாபாரிகள்

ரட்டன் பஜார் சென்னை. 3

வேண்டுமா இந்த நந்தவனத்துக்கு? இதில் ஏதோ இரகசியம் இருக்கிறது!''

இவ்வாறு எண்ணமிட்டுக்கொண்டே வீடு திரும்பினார் பட்டர்.

மறுநாட் காலையிலே செண்பகசுந்தரி நந்தவனத்துக்கே வந்து விட்டாள்! அவளுக்கு வீட்டிலே இருப்புக் கொள்ளவில்லை!

''சுந்தரி! என்ன ஆச்சரியம் இது! இப்பொழுது நீ இங்கே வந்திரா விட்டால் நானே உங்கள் வீட்டுக்கு வந்திருப்பேன்!'' என்றான் வில்வநாதன்.



கல்கத்தா ரவீந்திர ஸரோவர் ஸ்டேடியத்தில் ஏப்ரல் பத்தாம் தேதி குமாரி சித்திராவின் பரத நாட்டிய அரங்கேற்றம் விமரிசையாகநடைபெற்றது. இவர் ரயில்வே மின்சார பிரதம இன்ஜினியர் திரு என். பத்மநாபன் அவர்களின் புதல்வி.

''மெய்யாகவா! அப்படி நீங்கள் வந்திருந்தால் உங்கள் மனம் இன்னும் அதிகமாகத்தானே வேதனைப்படும்!! அதனால்தான் நானே இங்கு வந்து விட்டேன் போலிருக்கிறது! எனக்கே தெரியாது இந்த நேரத்தில் எதற்காகஇங்கே வந்தேன் என்று! நேற்று வக்கீல் வந்தார் அல்லவா? எதிர்பாராமல் அவர் வந்து விட்டதால் அப்படியே பிரிந்து சென்றுவிட்டோம்! சரியாகக் கூடப் பேச முடியவில்லை. அது எப்படியோ இருந்தது எனக்கு! வீட்டில் இருக்கவே முடியவில்லை. வந்து விட்டேன்!''

''உன்னுடைய அம்மாவுக்குத் தெரியுமா? நீ இங்கே இந்த நேரத்தில் வந்ததைப் பற்றி. அவள் உன்னைக் கோபித்தால்?''

''நிச்சயம் கோபிப்பாள். ஆனாலும் எப்படியோ ஒரு தைரியம் வந்து விட்டது! அந்தத் தைரியத்தில் இங்கே வந்து விட்டேன். இப்போது நீங்கள் அம்மாவை ஞாபகப்படுத்தியதும் மறுபடியும் பயம் வந்து விட்டது! நான் போகிறேன். என்னைத் தேடுவதற்குள் போய் விடுகிறேன்!''

செண்பக சுந்தரியின் உடம்பெல்லாம் நடுங்கியது.

''சுந்தரி! இத்தனை பயத்துக்குளும் ஏன் இப்பொழுது இங்கே வந்தாய்?'' என்று கேட்டான் வில்வநாதன்.

''உங்களைப் பார்க்க வேண்டும்போல் இருந்தது. அத்தனை ஆவலோடு எங்கள் வீட்டுக்கு வந்தீர்கள்! பிறகு அத்தனை துயரத்தோடு திரும்பினீர்களே என்று எண்ணி எண்ணி இரவெல்லாம் அழுதேன்! உங்களைப் பார்த்து உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். நேற்று முடியவில்லை. இன்று, இப்பொழுது, உங்களைப் பார்த்ததும் மனசில் ஒரு நிம்மதி உண்டாய் விட்டது. நான் போய் வருகிறேன்!''

''சுந்தரி, நீ இந்த நேரத்தில் இங்கே வந்தது ஒரு கனவு போல் இருக்கிறது. ஆம். நீ வந்தது ஒரு கனவு. பிறகு நீ பேசியது ஒரு கனவு. இப்பொழுது நீ இங்கிருந்து போக வேண்டும் என்று சொல்வதும் ஒரு கனவாகவே இருக்கக் கூடாதா! அது நனவாக வேண்டுமா?''

வில்வநாதனுக்கு வார்த்தைகள் தடுமாறின. செண்பகசுந்தரி அவனுடைய முகத்தையே பார்த்துக் கொண்டு ஒரு விநாடி நின்றாள். அடுத்த கணம் ஏக்கப் பெருமூச்சுடன் அங்கிருந்து நகர்ந்தாள் அவள்!

அன்று முழுதும் வில்வநாதன் சத்திரத்தில் மிகுந்த ஏக்கத்தோடு உட்கார்ந்தவாறு மாலை நேரத்தின் வரவுக்காகத் தவமிருந்தான்!

மாலை நேரம்! ஆம். ஒன்றன்பின் ஒன்றாகப் பல மாலை நேரங்கள் வந்தன! ஒவ்வொரு நாளும் சுந்தரியும் வந்தாள்! அடுக்கடுக்காக வந்த மாலை நேரங்களில் எட்டி நின்ற இதயங்கள் படிப்படியாக அருகிலே வந்தன! பயமும், தயக்கமும் படிப்படியாக மறைந்து, துணிவும் நம்பிக்கையும் படிப்படியாக அதிகரித்தன! பட்டர், கம்பர், அந்த நந்தவனத்திலேயுள்ள நிற்பன, நடப்பன ஆகிய சகல ஜீவராசிகளும் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தும் கூட, இளம் உள்ளங்கள் இரண்டும் அகில உலகத்தையும் மறந்தன!

செண்பகசுந்தரி பேகடா ராகத்தில் பாடினாள்:

"யாருக்காகிலும் பயமா — சும்மா
சொல்லட்டும் இதிலென்ன
இரகசிய மா!''



பம்பாய் ரேடியோ லாபரெட்டரீஸ் ஆதரவில் நடைபெற்ற 'மர்பி' கர்நாடக சங்கீதப் போட்டியிலே வெற்றி பெற்றவர்களுக்கு ஸ்ரீமதி லக்கன்பால் பரிசுகள் வழங்கினர். லக்கன் பால் கம்பெனி மானேஜிங் டைரக்டர் திரு லக்கன்பாலும் இவ்விழாவில் கலந்து கொண்டார்.

அந்த நந்தவனத்திலிருந்த மரங்களும் செடிகளும் பூங்கொடிகளும் எதிரொலி செய்தன, ''யாருக்காகிலும் பயமா'' என்று! அந்த மலைகளும் நதிகளும் சிற்றோடைகளும் ''இதிலென்ன இரகசியமா?'' என்றன !

செண்பகநாயகி கோவிலிலே இருந்த சுவர்கள் எல்லாம் வெண் பற்களைக் காட்டிச் சிரித்துக் கொண்டு நின்றன! சித்திரப் பணி அப்படியே நின்று விட்டது! குகையிலே இருந்த ஓவியங்களைப் புதுப்பித்த பிறகு, மேற்கொண்டு எவ்வித வேலையும் நடக்கவில்லை! வில்வநாதன் எந்த முக்கியமான கலைப் பணிக்காக எண்ணங்களைத் தேடினானோ, அந்தக் கலைப் பணிக்கான எண்ணங்கள் இப்பொழுது வழிமாறிச் சென்றன!

''சுந்தரி! உனக்கு இப்பொழுதெல்லாம் உன் அம்மாவைப் பற்றிய பயமே இல்லையா?'' என்று கேட்டான் ஒரு நாள் வில்வநாதன்.

''பயம் இருக்கிறது. ஆனால் உங்களைப் பார்க்கும் போது அந்தப் பயமெல்லாம் பறந்தோடி விடுகிறது!'' என்றாள் செண்பக சுந்தரி!

''அப்படியானால் வீட்டுக்குப் போனதும் மறுபடியும் புயலும் இடியும் இருக்கிறதா?...''

''இருக்கிறது. ஆனால் முன்பெல்லாம் அந்தப் புயலையும் இடியையும் கண்டு நடுநடுங்கினேன். இப்பொழுது அப்படியில்லை!'' என்றாள் சுந்தரி.

''அப்படியென்றால்!''

''எந்தப் புயலும் எந்த இடியும் என் இதயத்தை அசைப்பதில்லை. தன்னந் தனியாக இருந்து கண்ணீர் வடிக்கும் போது முன்பெல்லாம், நானே தனியாக இருந்து கண்ணீர் வடிப்பது போலத் தோன்றும். இப்பொழுது அப்படியில்லை. என்னோடு என் அருகில் இன்னொரு இதயமும் சேர்ந்து கண்ணீர் வடிப்பது போலத் தோன்றுகிறது. என்னுடைய துயரத்தை முன்பெல்லாம் நான் மட்டுமே சுமந்து கொண்டிருந்தேன். இப்பொழுது அந்தச் சுமையை நீங்களும் பகிர்ந்து கொள்ளுகிறீர்கள், என்னுடைய மன உலகிலே!''

''சுந்தரி! மன உலகிலே பகிர்ந்து கொள்கிற அந்தச் சுமையை, நிலவுலகிலேயே நின்று பகிர்ந்து கொள்ளத் துடிக்கிறேன் நான்! உண்மையில் நீ என்னோடு இங்கே இருக்கும் போது என் உள்ளத்தில் எத்தனை எத்தனையோ கற்பனைகள் பொங்குகின்றன. நீ சென்ற பிறகோ உள்ளம் சூனியமாகிவிடுகிறது!''

இவ்வாறு சொன்னான் வில்வநாதன். செண்பகசுந்தரிக்குக் கண்கள் கலங்கின.

''சுந்தரி! ஏன் உன் கண் கலங்குகிறது? எதற்காகத் திடீரென்று உன் மனம் வேதனை அடைகிறது? சொல்லேன்!'' என்று கேட்டான் அவன்.

''அன்பின் உருவமே! உங்களிடம் ஒன்று சொல்ல நினைக்கிறேன். ஆனால் சொல்ல முடியாமல் தவிக்கிறேன்!''

உங்கள் கூந்தலின் உண்மை அழகை வெளிப்படுத்த

கால்கேட்

பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் உபயோகியுங்கள்



உங்களுக்குப் பிடித்தமான கூந்தல் அலங்கரிப்பு எதுவாயினும், கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலைத் தவறாமல் தேய்த்து வருவது கூந்தல் அடர்த்தியாக அழகுடன் வளர்வதற்கு இன்றியமையாதது!

தினந்தோறும் கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலை மயிர்க்காலிலும், கேசத்திலும் தேய்த்துக் கொள்வது லக்ஷக்கணக்கான குடும்பங்களில் இப்பொழுது குளிக்குமுன் செய்யும் அவசியமான பழக்கமாகிவிட்டது. இவ்வெளிய பழக்கத்தினால் உங்கள் கூந்தல் அடர்த்தியாக நீண்டு பளபளப்புடன் வளருவதுடன், இளமைத் துடிப்பின் காந்தியோடும் அற்புத ஜ்வலிப்போடும் விளங்குவதைக்கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள்.

எல்லோரும் அதிசயிக்கும் வண்ணம் உங்கள் கூந்தலின் உண்மையழகை வெளிப்படுத்த கால்கேட் உதவுகிறது.





மகிழ்ச்சிதரும் நறுமணம்
உங்கள் குடும்பம் முழுவதும் அதை விரும்பும்!

கால்கேட்

பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்

ECHO.9.4.TAM

ஆனந்தமான வாழ்க்கைக்கு



காட்பரீஸ்
சாக்கலேட்...

மிட்டாய்
மட்டுமல்ல-
ஒரு
உணவும்கூட



செண்பகசுந்தரியின் கண்களிலிருந்து கண்ணீர் 'பொல பொல' என்று கொட்டியது. வில்வநாதன் சரேல் என்று எழுந்து அக் கண்ணீரைத் துடைத்தான்.

''வில்வநாதா! நீங்கள் எனக்கு வழங்க நினைக்கும் வாழ்க்கை முறை வேறு. என் அன்னை எனக்காகத் திட்டம் செய்கிற வாழ்க்கை முறை வேறு. என் துயரங்களுக்குக் காரணம் இதுஒன்றுதான்! மற்றப்படி என்னிடமோ என் குணங்களிடமோ அம்மாவுக்கு எவ்வித வெறுப்பும் இல்லை. வாழ்க்கையின் அடிப்படையான திட்டத்தில் எங்களுக்குள் மன வேற்றுமை இருக்கிறது. இந்த வேற்றுமையினால்தான் என்னை இவ்வளவு துன்பப்படுத்துகிறாள் அவள்! அவளுடைய நோக்கத்துக்கு இசைகிறேன் என்று மட்டும் நான் சொல்லி விட்டால் போதும்! அந்த வினாடியிலிருந்து என்னைத் தலையிலே தூக்கி வைத்துக் கொண்டாட ஆரம்பித்து விடுவார்கள்! இதுதான் உண்மையான நடப்பு!''


செண்பக சுந்தரியின் விழிகளிலிருந்து மீண்டும் பொங்கிப் பெருகியது துன்பக் கண்ணீர். அந்தக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே வில்வநாதன் அந்த அகன்ற விழிகளையே பார்த்தான்.

''சுந்தரி! நீ சொல்லாமலேயே நான் புரிந்து கொண்டு விட்டேன் அதை! உண்மையில் அதைப் புரிந்து கொண்ட பிறகு என்னுடைய நேசம் பன்மடங்காயிற்று! உன்னுடைய எழிலும், உனது அற்புதமான இசையும், உன்னுடைய பண்பாடும் எத்தனையோ கண்காணிப்போடு பாதுகாக்க வேண்டிய அருஞ் செல்வங்கள். உன் அன்னைக்கு அவற்றின் அருமை தெரியாது!''


''இல்லை! அவளும் அந்த அருமையைத் தெரிந்து கொண்டிருக்கிறாள். ஆனால் அவள் தெரிந்து கொண்டுள்ள விதம் வேறு. நீங்கள் தெரிந்து கொண்டுள்ள விதம் வேறு. அவள் அவற்றைப் பயன்படுத்த நினைக்கும் முறை வேறு. நீங்கள் நினைப்பது வேறு—''

''சுந்தரி! உண்மையில் உன்னுடைய இசையும், உனது எழிலும் என்னுடைய இறகும் எனது கற்பனையும் ஒன்று சேருமானால், இந்த வனத்தில் உள்ள கோவிற் சுவர்கள் மட்டுமில்லை, இந்தக் காட்டிலேயுள்ள பாறைகள், குகைகள், குன்றுகள் எல்லாம் கலை நகரமாக உருவெடுத்து விடும்! சந்தேகமில்லை. அந்த ஒரு மகத்தான கலைக் கனவை இந்த நந்தவனத்திலே நிர்மாணிப்பதற்காகத்தான், இயற்கையன்னை நம் இருவரையும் சந்திக்கும்படி செய்திருக்கிறாள்!''

இவ்வாறு வில்வநாதன் சொன்னதும் சுந்தரி சிரித்தாள்.



அன்னிமங்கலம் திரு ஆர். வேங்கடராம அய்யர் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி பால சுப்ரமணியனுக்கும் சௌபாக்கியவதி பர்வத வர்த்தினிக்கும் சென்னையில் 'திருமணம் சிறப்பாக நடந்தது.



கல்லிடைக்குறிச்சி ஸ்ரீ ராமகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களின் புதல்வி சௌ. பிரேமாவதிக்கும் சிரஞ்சீவி ராமச்சந்திரனுக்கும் சென்னையில்விவாகம் விமரிசையாக நடந்தது.



ஓய்வு பெற்ற தென்னிந்திய ரயில்வே ஆபீஸ் சூப்பிரண்டெண்ட் திரு வைத்தியநாதன் அவர்களின் புதல்வி சௌ. சரோஜாவுக்கும் திரு விசுவநாதனுக்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.



பம்பாய் ஸ்ரீ ஷண்முகானந்தா சபையினர், முதன் மந்திரியாக மறுமுறையும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஸ்ரீ சாவன் அவர்களைப் பாராட்டி ஒரு வரவேற்பளித்தனர். மகாராஷ்டிர முதன் மந்திரி ஸ்ரீ சாவன் அவர்கள் வரவேற்புக்குப் பதிலளிக்கையில், தென்னிந்தியர்களின் கலைத்திறனையும் பரந்த மனப்பான்மையையும் வியந்து பேசினார். தென்னிந்தியர்கள் தங்கள் விடா முயற்சியால் பம்பாய் ஸ்ரீ ஷண்முகானந்த சபைக்காகச் சுமார் மூவாயிரம் பேர்கள் அமர்ந்து ரசிக்கும்படியான ஒரு கட்டடத்தை இருபது லக்ஷம் ரூபாய் செலவில் கட்டுவதையும் பாராட்டினார். அநேகமாக இன்னும் மூன்று மாதங்களில் முடியப்போகும் இந்தப் புதுக் கட்டிடத்தில் இனி கச்சேரிகள் நடக்கும்.

''ஏன் சிரிக்கிறாய் சுந்தரி! நான் சொல்வது வேடிக்கையா யிருக்கிறதா?''

''இல்லை! நாம் இருவரும் சேர்ந்து கலை நகரையே நிர்மாணிக்கலாம் என்கிறீர்களே. நாம் இருவரும் சந்தித்த பிறகுதானே உங்களுடைய சித்திரவேலை தடைப்பட்டு நின்று விட்டது என்பதை நினைத்தேன். சிரிப்பு வந்தது!''

இவ்வாறு கூறினாள் செண்பக சுந்தரி. இருவரும் மெதுவாக நடந்து கோவிலுக்குச் சற்றுத் தொலைவிலுள்ள ஒரு முல்லைப் புதருக்கு அருகிலே வந்தார்கள்.

''சுந்தரி! அதெல்லாம் இதுவரை சரி! இனி நான் சோம்பேறியாக இருக்கப்போவதில்லை. ஒருவர் உள்ளத்தை ஒருவர் நன்றாகப் புரிந்து கொண்டு விட்டோம். ஆகையினால் இனிமேல் சித்திர வேலையைத் தொடங்க வேண்டியது தான். என்னுடைய சித்திரங்களுக்கு எண்ணம் வழங்க வேண்டியவள் நீ! என் அருகிலிருந்து இனி மேல் நீ பாடிக் கொண்டே இருக்க வேண்டும். நான் அந்தப் பாடல்களை அப்படியே வர்ணத்திலே மொழி பெயர்ப்பேன்! சரிதானா?''

''சரி! அப்படியே செய்வோம்' ஆனால் சித்திரத்திலே என் பாடலுக்குப் பதிலாக என்னையே மொழிபெயர்த்து விடாதீர்கள்!''

''உன்னையும் சித்திரத்திலே வரைவேன். ஆனால் இந்தச் சுவரிலே இல்லை. மனம் என்று ஒரு சுவர் இருக்கிறதல்லவா, அந்தச் சுவரில் வரைந்து வைத்துக் கொள்வேன்!'' இப்படிச் சொல்லிக் கொண்டே, முல்லையின் பாங்கரிலே சென்றான் வில்வநாதன்.

''என்ன வாசனை! என்ன வாசனை!'' என்றாள் செண்பக சுந்தரி!

''மலருக்கா? கூந்தலுக்கா? பழைய கதை தெரியுமா சுந்தரி? நக்கீரர் கதை?''

இவ்வாறு கேட்டுக் கொண்டே முல்லைப் புதரிலே எட்டிப் பாய்ந்து ஒரு கொத்து மலரைப் பற்றி எடுத்தான் வில்வநாதன். பின்புறமாக வந்து செண்பகசுந்தரியின் கூந்தலிலே செருகினான்!

நந்தவனத்தின் மற்றொரு கோடியிலே சலசலப்பு கேட்டது. ஜமீந்தார் அனவரத புவனபதி இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே நந்தவனத்துக்குள் நுழைந்தார்! (தொடரும்)

நீகோ

ஜெர்மிஸைடல் சோப்

ஒரு பார்க்-டேவிஸ் தயாரிப்பு

உங்கள் சருமத்தைச் சுத்தமாகவும் ஆரோக்கியத்துடனும் வைத்துக் கொள்ளவும், பருக்கள், கருநிறப் படைகள், வேர்க்குரு மற்றும் இதர சாதாரண சரும நோய்களின்றி இருக்கவும் உதவுகிறது. தவறாமல் தலைமயிரைச் சுத்தம் செய்ய உபயோகித்து வரின், நெக்கோவின் கிருமிநாசக நுரை வழுக்கை ஏற்படாமலிருக்க ஒரு நல்ல பாதுகாப்பாக இருக்கும். நிரூபணமான மதிப்பையுடைய கிருமிநாசக சோப்பான நீகோ உங்களுக்கு மும்மடங்கு நன்மையளிக்கிறது— சுத்தமாக்க, நோய்கிருமி பரவாமல் தடுக்க, பாதுகாக்க, உதவுகிறது. தினமும் உங்கள் சருமத்திற்குத் தேவையான கவனத்தை செலுத்துங்கள்.



NATIONAL PD 9262

தினசரி உபயோகத்திற்கான ஆதி கிருமிநாசக சோப்

காஷ்மீர் பொக்கே டால்க் உபயோகித்து மணிக்கணக்காக சுகந்தத்துடனும் புதுமையுடனும் இருங்கள்




உன்னதமான காஷ்மீர் பொக்கே யின் தரம், ஒரு அழகுசாதன டால்க்... ஒரு குழந்தைக்கான பவுடர் இவ்விரண்டையும் அளிக்கிறது.

காஷ்மீர் பொக்கே டால்க்கின் குளுமையான, பூவிதழ்போன்ற மென்மையான ஸ்பரிசத்தை நீங்கள் உணரும்பொழுது ஒரு பூச்செண்டிற்குள் இருப்பது போலவே தோன்றும். உடல் முழுவதும் தடவிக் கொண்டு அதன் ஊற்றுப்பெருக் கென எழும் புதிய நறுமணத்தில் திளைத்து மகிழுங்கள்



குழந்தையை இதமுடனும் சுகமுடனும் வைத்திருங்கள். காஷ்மீர் பொக்கே, எந்த ஒரு விசேஷ குழந்தைக் கான பவுடரைப் போலவே, மிருதுவும் பட்டுப்போன்றது மானது. நீங்கள் இருவருமே உபயோகிக் கக்கூடிய அவ்வளவு சௌகரியமான ஒரே பவுடர்!



காஷ்மீர் பொக்கே

டால்கம் பவுடர்—ஆடவர் விரும்பும் சுகந்தமுள்ளது!

CB-6-19-TAF

மணி அய்யர்

தமிழ் முனிவர் திரு வி. கல்யாண சுந்தர முதலியார் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள் :

''நமது தமிழன்னைக்கு முருகப் பெருமானைத் தவிர இன்னும் ஐந்து தவமணிகள் உண்டு. 'சுப்பிரமணியம்' என்றே இவர்கட்கும் பெயர். சுப்பிரமணிய பாரதி, சுப்பிரமணிய சிவம், வ. வே. சுப்பிரமணியம், ஆசிரியர் ஜி. சுப்பிரமணியம், மதுரை எஸ். சுப்பிரமணியம் இவர்களே அந்த ஐவரும்.''

இந்த ஐவரில் ஒருவரே ஸர் எஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்கள். மதுரை ஜில்லாவில் 1842-ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தேதி ஒரு பெரிய குடும்பத்தில் திரு மணி அய்யர் அவர்கள் பிறந்தார்கள். மதுரையிலும், ராமநாதபுரத்திலும் கல்வி பயின்று, மதுரை கலெக்டர் காரியாலயத்தில் ஒரு குமாஸ்தாவாகப் பணியாற்றத் தொடங்கினார். அந்தப் பணியில் ஈடுபட்டவாறே சட்டக் கல்வியில் முதலாவதாகத் தேறி மதுரையில் சிறிது காலம் தாசில்தார் ஆகவும், பப்ளிக் பிராசிக்யூட்டராகவும் பிறகு மதுரை நகரசபை கமிஷனராகவும் பதவி வகித்தார். பின்னர் சொந்தமாகவழக்கறிஞர் தொழில் நடத்தி வந்தார். மதுரை மக்கள் இவரை, நகரசபை உபதலைவராகத் தேர்ந்தெடுத்தனர். அந்நாளில் கமிஷனர்களே நகரசபையின் தலைவராக விளங்கி வந்தார்கள்!

மாக்கினார். அதைக் கொண்டு வைகைக்குப் பாலம் கட்டுவித்து முடித்தார் திரு மணி அய்யர்.



நகர சபையின் கமிஷனர் பதவி வகித்த காலத்திலும் உப தலைவர் பதவி வகித்த காலத்திலும் மதுரை நகர அபிவிருத்திக்குத் திரு மணி அய்யர் அவர்கள் சிறந்த பல திட்டங்களை நிறைவேற்றி வைத்தார். மதுரையில் பூங்கா ஒன்று அமைத்ததையும் மீனாட்சியம்மன் கோவிலைச் சுற்றி நந்தவனம் அமைத்ததையும் குறிப்பிட வேண்டும்.

மதுரை நகருக்கு வேல்ஸ் இளவரசர் விஜயம் செய்தபோது அவருக்கு அமோகமாக வரவேற்பு அளிக்க வேண்டுமெனத் தீர்மானித்து, மதுரை நகரப் பிரமுகர்கள் ஒரு பெரும் நிதி திரட்டி நகர சபை உப தலைவர் பதவி வகித்து வந்த திரு மணி அய்யரிடம் அளித்தார்கள். இந்தத் தொகையை வெறும் வாண வேடிக்கைகளில் வாரி இறைத்துவிடாமல் வரவேற்பு வைபவங்களைச் சிக்கனமாக முடித்து, ஒரு பெருந் தொகையை மீத

மதுரையில் வழக்கறிஞர் தொழிலில் இவருடைய புகழ் பிரபலமாக விளங்கிற்று. சென்னை நகரிலிருந்த கீர்த்தி பெற்ற வழக்கறிஞர்கள் கூட மதுரை செல்லத் தயங்கி வந்தார்கள்.

''சென்னை மாகாணத்தில் வழக்கறிஞர் ஸர் வி. பாஷ்யம் அய்யங்காருக்கு நிகராக எதிர்த்தரப்பில் தோன்றி வழக்காடக் கூடிய தகுதி ஒரே ஒருவருக்குத் தான் இருந்து வந்தது. அவர்தான் மதுரை ஸர் எஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்கள்'' என்று அட்வொகேட் ஜெனரல் பதவி வகித்த ஸர் பி. எஸ். சிவசாமி அய்யர் அவர்கள் கூறியுள்ளார்கள்.

மதுரையில் வழக்கறிஞர் தொழில் நடத்தி வந்த போது திரு மணி அய்யர் அவர்கள் மீனாட்சி அம்மன் கோவிலில் ஊழல் நடந்திருப்பதை வெளிப்படுத்தி நியாய ஸ்தலத்தில் தாமே வாதாடி ரூ. 40,000 தொகையைக் கோவிலுக்கு

மீட்டுக் கொடுத்த அறப்பணியைக் குறிப்பிட வேண்டும். இவரது திறமையை மதுரையோடு விட்டு வைக்க அரசாங்கம் விரும்பவில்லை. சென்னைக்கு அழைத்து அரசாங்க வழக்கறிஞர் பதவியை அளித்தது. இந்தப் பதவியைத் திரு மணி அய்யர் வகித்து வந்தபோது இவரது வாதத் திறமை வேறொரு கோவில் விஷயமாக எழுந்த வழக்கு ஒன்றின் மூலமாகவும் பிரபலமாயிற்று.

ஆந்திரத்தில் உள்ள ஒரு பெரிய கோவிலின் தலைவர் மீது, அர்ச்சகர்களும் மற்றவர்களும் ஒரு திடுக்கிடும் குற்றச்சாட்டைச் சுமத்தினார்கள். அந்தத் தலைவர் துவஜஸ்தம்பத்தின் அடியில் இருந்த ஏராளமான பொன் நாணயங்களை இரகசியமாக அப்புறப்படுத்தி விட்டு, அந்த இடத்தில் தாமிர நாணயங்களை வைத்து விட்டதாக அரசாங்கத்துக்கு முறை யிட்டார்கள். கோவில் தலைவர் மீது வழக்கு தொடரப்பட்டது. அவருக்கு ஆதரவாகப் புகழ்பெற்ற பாரிஸ்டர் நார்ட்டன் வழக்கில் தோன்றினார். கோவில் தலைவர் மீது பொறாமை காரணமாக இந்த வழக்கு சிலரால் ஏவி விடப்பட்டதாக வாதித்தார். துவஜஸ்தம்பத்தைப் பெயர்த்துப் பார்க்கக் கூடாது என்றும், அதைப் பெயர்ப்பது அறமுறைகளுக்கு ஆகாத, புனிதமற்ற செயலென்றும் எச்சரிக்கை செய்தார் திரு நார்ட்டன். அவர் விவாதம், மூன்று தினங்கள் நீடித்தது. ஸர் சுப்பிரமணிய அய்யர் சிறிதே வார்த்தைகளில், சிறிதே நேரத்தில் பதிலளித்த போது, ''துவஜஸ்தம்பத்தை நகர்த்திப் பார்ப்பதால் புனிதத் தன்மை கெட்டு விடாது. இதை நகர்த்துவதால் வானமே இடிந்து விழுந்து விடாது. அப்படியே இடிந்து விழுமானால் நீதிஸ்தலத்தின் நீதி என்ற தர்மம் அதைத் தாங்கிக் கொள்ளும்'' என்று கர்ஜனை செய்தார். இவரது சொற்கள் வழக்கை விசாரணை செய்த நீதிபதி ஸர் டி.முத்துசாமி அய்யரையும், பிரதம நீதிபதியையும் கவர்ந்தன. துவஜஸ்தம்பத்தை நகர்த்திப் பார்க்கும்படி உத்தரவு பிறப்பித்தார்கள். அதன்படி, அந்த ஸ்தம்பத்தை நகர்த்திப் பார்த்த போது திரு மணி அய்யர் கூறியபடியேதான் காரியங்கள் நடந்திருப்பது வெளியாயிற்று. ஸ்தம்பத்தின் அடியில் இருந்த பொன் நாணயங்கள் காணப்படவில்லை. அதற்குப் பதிலாகத் தாமிர நாணயங்களே அங்கு நிறைந்திருந்தன. கோவில் தலைவர் பிறகு என்னவானார் என்பது முக்கியமல்ல. திரு சுப்பிரமணிய அய்யரை இந்த வழக்குக்குப் பிறகு அரசாங்கம் நீதிபதி பதவியில் அமர்த்தியது. மூன்று முறை திரு அய்யர் அவர்கள் தாற்காலிகமாகப் பிரதம நீதிபதியாகவும் பணி புரிந்தார்கள்.

சிறிது காலம் வரை திரு மணி அய்யர் சென்னை சட்டசபையின் நியமன அங்கத்தினராக விளங்கி வந்தார். கல்வித்துறையில் இவர் ஆற்றி வந்த பணி கொஞ்சமன்று. 'இந்தியாவிலேயே முதல்' என்ற விதத்தில், சர்வகலாசாலையின் முதல் இந்திய உப அத்தியட்சகர் என்ற பெருமையும் இவருக்குச் சென்னை சர்வகலாசாலை மூலம் கிடைத்தது. அது மட்டுமல்ல, சென்னை சர்வகலாசாலையின் முதல் உப அத்தியட்சகரும் இவரேயாவார். இதே மாதிரிதான் சர்வகலாசாலைகள் அளித்து வரும் 'டாக்டர்' பட்டம் பெற்ற முதல் இந்தியரும் இவரேதான். இவர் உப அத்தியட்சகராகப் பதவி வகித்த காலத்தில் சென்னை சர்வகலாசாலையின் கல்விப் புகழ் வளர்ச்சிக்குப் பலப் பல அரிய திட்டங்களை நிறைவேற்றி வைத்தார். தமிழ், வடமொழி வல்லுநர்களுக்கு 'டாக்டர்' என்னும் பட்டத்துக்கு நிகராக, 'மகா மகோபாத்யாய' என்ற விருது அளித்துக் கௌரவிக்க வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டு அதை முதலில் அமுலுக்குக் கொண்டு வந்த இவரது தாய்மொழிப் பற்றை என்னென்பது?

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவுக்கு யாத்திரை சென்று இந்நாட்டின் ஆத்மீக சக்தியை அவர்களுக்கு எடுத்துரைத்த பிறகுதான், இந்நாட்டைப் பற்றியும், இந்திய மக்களைப் பற்றியும் அமெரிக்க மக்கள் கொண்டிருந்த பல தப்பு எண்ணங்கள் மறையத் தொடங்கின. விவேகானந்தரை இந்தப் பெரியதொரு பணியை மேற்கொள்ளும்படி தூண்டி, அவரை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தவர்களில் மணி அய்யர் ஒருவராவார். விவேகானந்தரின் வெளிநாட்டுப் பயணத்துக்கு வேண்டிய உதவிகளைத் திரு மணி அய்யர் அவர்கள் தாமும் செய்தார். நண்பர்களிடமும் உதவி திரட்டித் தந்து அவரை இந்நாட்டின் ஆத்மீகத் தூதுவராக அனுப்பி வைத்தார்.

நாட்டில் அப்போது கிளர்ந்தெழுந்த தேசிய உணர்ச்சி திரு அய்யர் அவர்களையும் பற்றிக் கொள்ளத் தவறவில்லை. அன்னிபெஸண்ட் அம்மையார் நடத்தி வந்த 'ஹோம் ரூல்' இயக்கத்தில் குதித்து அதில் தீவிரமாக ஈடுபடலானார் மணி அய்யர். இந்த இயக்கத்தில் கலந்து கொண்டதும் மணி அய்யர் அவர்கள் அப்போது நாட்டில் தலைவிரித்தாடிய அடக்குமுறைகளைக் கண்

டித்ததோடு தமக்கு அரசாங்கம் அளித்த பட்டம் பதவிகளையும் துறந்தார்.

தமிழகத்தில் முதன் முதலாக அரசாங்கம் அளித்த பட்டங்களையும் கௌரவப் பதவிகளையும் துறந்தவர் திரு மணி அய்யர் அவர்கள்தான். திரு பெஸண்ட் அம்மையாரின் ஆவேசப் பிரசங்கங்களினால் சீற்றம் அடைந்த அரசாங்கம், அவரையும் மற்றும் இரு தலைவர்களையும் காவலில் வைத்து விட்டது. இதைக் கண்டித்து எங்கும் கூட்டங்கள் நடந்த போதிலும் பயன் விளையவில்லை. இதன் மீது திரு அய்யர் அவர்கள் 24-6-1917 தேதியிட்டு அமெரிக்க ஜனாதிபதி திரு வில்சன் அவர்களுக்குக் கடிதம் ஒன்று எழுதினார். அதைத் தபாலில் போட்டால் தணிக்கையாளர்கள் போய்ச் சேராமல் தடுத்து 'விடுவார்களென்று கருதி, சென்னைக்கு வந்திருந்த அமெரிக்க நண்பர் ஒருவர் மூலமாக வில்சனுக்கு அனுப்பி வைத்தார். இந்திய மக்களின் சுதந்திர உணர்ச்சிக்கு, அமெரிக்காவின் உதவி கோரி எழுதப்பட்ட அந்தக் கடிதம் இந்த நாட்டின் தேசிய சரித்திரத்தில் பல நல்ல விளைவுகள் தோன்றக் காரணமாயிருந்தது. ஜனாதிபதி வில்சனிடம் கடிதம் சேர்ந்ததும், அவர் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு என்ன எழுதினாரோ தெரியவில்லை; ஆனால், பெஸண்ட் அம்மையாரையும் மற்ற இருவரையும் உடனே விடுதலை செய்யச் சொல்லி, பிரிட்டனிலிருந்து உத்தரவு பிறந்தது.

சென்னையில் காங்கிரஸ் மகாசபை 1914-ல் கூடியபோது அதன் வரவேற்புக் கமிட்டித் தலைவராகவும் விளங்கினார் மணி அய்யர் அவர்கள். அடிநாட்களில் காங்கிரஸ் இயக்கத்தை ஒரு ஸ்தாபனமாக உருவாக்கிய சில தலைவர்களில் திரு மணி அய்யரும் ஒருவர்.

உடல் தளர்வு ஏற்படும் வரை, இல்லறத்தில் ஒரு துறவி போலவும், பதவிகளில் கடமையாளராகவும், தேசிய உணர்வில் சிறந்த பணியாளராகவும், மதுரைக்கு ஒரு நிரந்தரப் பெரியாராகவும் வாழ்ந்து வந்தார். எனவே, மக்கள் இவரை 'மகான் மணி அய்யர்' என்று அழைத்து வந்தது பொருத்தமானதே.

திரு சுப்பிரமணிய அய்யர் அவர்கள் 1927-ம் ஆண்டு டிசம்பர் பத்தாந் தேதி இவ்வுலகை விட்டு மறைந்தார்கள். இவரது உருவச் சிலை, சென்னை சர்வகலாசாலைப் பூங்காவில் அமைக்கப்பட்டிருக்கிறது. உருவச் சிலையின் முகப் பொலிவிலே, கல்வியின் கருத்தும், செயலின் தூய்மையும் கலந்து ஒளி வீசுவதைக் காணலாம்.

—கதிர்



அத்தியாயம் 9

ஏக்கத்தின் எதிரொலி!

சத்தியாக்கிரஹம், ஒத்துழையாமை இயக்கம், மாபெரும் ஊர்வலம், பொதுக்கூட்டம், போலீஸ் தடியடிப் பிரயோகம், சிறைவாசம் என்றெல்லாம் தினசரிகளில் அவ்வப்போது வெளிவரும் செய்திகளில் தட்டுப்படுவதைப் படித்திருக்கிறான் வடிவேலு. தேச பக்தி, தியாகம், சுயராஜ்யம் என்றெல்லாம் கிராம மக்கள் பேசிக் கொள்வதைக் கேட்டிருக்கிறான். அந்தச் சம்பாஷணைகளில் சில சமயங்களில் கலந்து கொண்டு தீவிரமான விவாதங்களிலும் இறங்கி யிருக்கிறான். ஆனால் அந்த விடுதலைப் போராட்டங்களோ அல்லது அவற்றை நடத்தி வைக்கும் புரட்சியாளர்களோ அன்று வரை தேனூரை எட்டிப் பார்த்ததில்லை. எனவே, தியாகி ஒருவருடன் நேரடியான தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பம் வடிவேலுவுக்கு முதன் முறையாக அன்றைக்குத்தான் கிட்டியது. மறுநாள் சுபாஷ் போஸைக் காணப் போகிறோம்; கற்பனையிலோ அல்லது படத்திலோ அல்ல—ரத்தமும் சதையும் கொண்ட மனிதராக! சுதந்திரத்தையே தனது உயிர் மூச்சாகக் கொண்டு கர்ஜிக்கும் அந்த வங்கச் சிங்கத்துக்கு வீர வணக்கம் செலுத்தும் வேளை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பது போன்ற எண்ணங்களே ரோமாஞ்சனத்தை உண்டாக்கியதுடன் ஓரளவுக்குக் கர்வத்தையும் உருவாக்கியது அவன் உள்ளத்தில். 'தேனூரிலே எத்தனையோ பேர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள், என்ன பிரயோஜனம்? எல்லாரும் எளிதில் பெற்று விடக் கூடியதல்லவே இந்த மகத்தான பாக்கியம்! நாளைய தினம் துறைமுகத்தில் நடைபெறப் போகும் சம்பவத்தைப் பக்கத்திலிருந்து தன் இரு கண்களாலும் நோக்கியதாக வாழ்நாள் முழுதும் சொல்லிச் சொல்லிப் பெருமைப்படலாமே?' இந்தக் கருத்தில் இறுமாந்திருந்த அவன் உமாகாந்துடன் தாராளமாகப் பழக நேர்ந்ததையும் பெரிய அதிர்ஷ்டமென்றே நம்பினான். ஒரு நாள் சிநேகமாக இது முடிந்து விடக் கூடாது; நெருக்கமான தொடர்பு வைத்துக் கொண்டு உரமேற்றி, நட்பு செழிக்க வழி வகுக்க வேண்டும் என்று விரும்பினான். அதுமட்டுமல்ல, தேச சேவையில் அவருடன் ஒன்றாக ஒத்துழைக்கும் ஆர்வமும் இதயத்தின் ஒரு மூலையில் எட்டிப் பார்க்கத் தொடங்கியது. இதற்கெல்லாம் முதற்படியாக உமாகாந்துக்குத் தன் மீது நல்ல அபிப்பிராயம் விழ வேண்டும். இந்த ஆசைதான் சுபாஷ் போஸைப் பார்ப்பதற்காகவே தான் தேனூரில் இருந்து வந்ததாக உண்மைக்குப் புறம்பாக அவனைத் தாராவிடம் பேச வைத்தது. ஆகா! உமாகாந்துக்குத் தன் தலை

வரிடம் உள்ள பக்திதான் எத்தகையது? சுபாஷ் போஸ் என்ற பெயரைச் செவியுற்றதுமே, நீருக்குள் அமுக்கிப் பிடிக்கப்பட்ட பந்து விடுதலை பெற்றதும் பாய்ந்து மேலே வருவது போல் விரைந்தெழுந்து நிற்கிறாரே! தேசத் தொண்டர் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்! வியப்போடும் வினயத்தோடும் அவரை ஏறிட்டுப் பார்த்தான் வடிவேலு.

உமாகாந்த், ''தாரா! என்ன சொல்கிறார் இவர்'' என்று கேட்டார் ஆங்கிலத்தில்.

பல வருஷங்களாகச் சென்னையிலேயே தங்கிப் படித்த தாராவுடன் தமிழில் உரையாடுவது எளிதாக இருந்தது வடிவேலுவுக்கு. ஆனால் உமாகாந்த் தன்னைப் பற்றி இன்னும் உயர்வாக மதிக்க வேண்டுமானால், தான் ஆங்கிலத்தில் அவருடன் அளவளாவியே தீரவேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். கணவரின் கேள்விக்குப் பதிலளிக்காமல் தாராவும் தயங்கி நிதானிக்கவே, சட்டென்று உமாகாந்துடன் நேரடியாக வார்த்தையாட ஆரம்பித்தான் வடிவேலு. அந்நிய மொழியை நிறையப் படித்திருந்த போதிலும் பேசிப் பழகாததால் கொஞ்சம் சிரமமாகத்தான் இருந்தது. ஆங்காங்கே சற்றுத் தடுமாறியது. உமாகாந்த் இதைத் துளியேனும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. கருத்திலே கண்ணாக இருந்தார் அவர். தாராவிடம் சொன்னதையே வடிவேலு இன்னொரு தடவை கூறி முடித்ததும் சட்டென்று அவர் மறுபடியும் தன் மனைவியின் விரல்களைப் பற்றிக்கொண்டு கெஞ்சுகிற தோரணையில் தலையைச் சாய்த்து விழிகளை உயர்த்தினார். ''கேட்டாயா தாரா, இவர் கூறுவதை? சுபாஷ் பாபுவைத் தரிசிக்க வென்றே தேனூரிலிருந்து எவ்வளவு தூரம் வந்திருக்கிறார்! நாமோ யதேச்சையாக நல்லதொரு சமயத்தில் வந்து சேர்ந்திருக்கிறோம். நம் அதிர்ஷ்டத்தை எண்ணிச் சந்தோஷப்படுவதற்குப் பதிலாக நீ என்னைத் துறைமுகத்துக்குப் போகவே கூடாதென்று தடுத்து நிறுத்துகிறாயே, நியாயமா, இது?''

''தடுப்பதா, உங்களையா?'' என்றான் வடிவேலு. தன் காதுகளையே நம்ப முடியவில்லை அவனால். தேசபக்தத்தியாகி உமாகாந்த் சுபாஷ்போஸைப் பார்க்கக் கூடாதென்றால் அது கன்றுக்குட்டியைத் தாய்ப்பசு இருக்கும் கொட்டிலுக்குள் நுழையக் கூடாதென்று தடை விதிப்பது போன்ற ஓர் அர்த்தமற்ற செய்கையாகத்தான் அவனுக்குப் புலப்பட்டது.

தாராவின் முகத்தில் வருத்தத்தின் சாயல் படர்ந்தது. தன் கரத்தை விடுவித்துக் கொண்டு அவள் எழுந்தாள். சில அடிகள் எடுத்து வைத்து அந்தக் குன்றின் எல்லையில் எழுப்பப்பட்டிருந்த சுவரோரமாக நின்று கருநீலக் கடல், நிலத்தில் உட்புகுந்து ஏற்படுத்தியிருந்த வளைவை உற்று நோக்கினாள். இருள் கவிந்து கொண்டு வந்த அந்த நேரத்தில் கடற்கரை ஓரமாக ஓடிய சாலையிலும் சுற்று வட்டாரத்திலும் இங்கொன்றும் அங்கொன்றுமாக விளக்குகள் எரிய ஆரம்பித்தன. தன் இதயத்திலே ஏற்றி வைத்துள்ள அன்பு விளக்கு புரட்சிக் காற்றிலே சிக்குண்டு அணையப் படபடப்பதாகத் தாராவுக்கு ஒரு பிரமை. அவள் கன்னங்களில் வழிந்த கண்ணீர் ஒவ்வொரு சொட்டாகத் தரையில் விழுந்து பூமியினால் ஈர்க்கப்பட்டு மறைந்தது.

வடிவேலுவுக்குத் தான் அங்கு வந்து சேருவதற்கு முன்னால் அவர்களிடையில் ஏதோ தர்க்கம் நடந்திருக்கிறது என்பதை ஊகிப்பது கடினமாக இல்லை. கருத்தொருமித்த காதலர்கள் என்று தான் சில நிமிஷங்களுக்கு முன்னால் நினைத்தது தவறா? இப்படி எண்ணிக் குழம்பிய அவன், தான் கூறிய பொய் தன்னைப் பொறுத்த மட்டிலும் மிகச் சிறிதாக இருந்தாலும் அதனால் உமாகாந்தின் கட்சிக்கு நிரம்பப் பலம் ஏற்பட்டிருப்பதையும் தாராவின் நெஞ்சம் வெகுவாக நொந்து போயிருப்பதையும் உணர்ந்தான். நெருப்புத் தணல்களைப் பரப்பி அதன் மீது தாண்டவமாடுவது போலிருந்தது அவனுக்கு. ''நான்.....



தவறாக ஏதாவது சொல்லி விட்டேனா?'' என்று உமாகாந்திடம் கேட்டான்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை. பெண்களுக்கே இது வழக்கம். இதுமாதிரி எப்போதாவது ஒரு முறை அவர்களுக்கு அழுது தொலைக்க வேண்டும். இன்னும் ஐந்தே நிமிஷங்களில் எல்லாம் சரியாகி விடும், பாருங்கள்.''

ஐந்தோ ஐம்பதோ கணக்குத் தெரியவில்லை வடிவேலுவுக்கு. மூக்குக் கண்ணாடியை ஒரு முறை துடைத்துப் போட்டுக் கொண்டு உமாகாந்த் ரசமாகப் பல சங்கதிகளைச் சொல்ல அவன் பாட்டுக்குக் கேட்டுக் கொண்டேயிருந்தான். வங்காளக் கலகங்களின் விளைவாகத் தூக்குத் தண்டனை பெற்ற போது, 'என்னுடைய ஒவ்வொரு துளி இரத்தமும் சுதந்திர விதைகளைப் பாரத நாட்டிலுள்ள ஒவ்வோர் இல்லத்திலும் ஊன்றி விடட்டும்' என்று முழக்கினாரே கோபிநாத் ஸஹா, அந்த வீரரின் கதையில் தொடங்கி, சுதந்திரப் போரைப் பற்றிய பல ருசிகரமான தகவல்களையும் அவற்றில் எந்தெந்த அளவுக்குத் தமக்குச் சம்பந்தம் உண்டு என்பதையும் விவரித்தார். வடிவேலு திறந்த வாய் மூடவில்லை.

நீண்ட நேரத்துக்குப் பிறகு தாரா அவர்களுக்குக் கிட்டத்தில் வந்தாள். அவள் கண்கள் செக்கச் செவேலென்றிருந்தன.

''போகலாமா?'' என்று கேட்டார் உமாகாந்த்.

''சரி'' என்றாள் தாரா.

''வெரி குட்! இதோ பாருங்கள் பாயி, வடிவேல்! நீங்கள்தான் சாட்சி! மனம் மாறி, 'போகலாம்' என்று அனுமதித்திருக்கிறாள் தாரா!''

''துறைமுகத்துக்குத் தானே? தாராளமாகப் போய் வருவோம்'' என்றாள் அவள். 'விரக்தி மனப்பான்மையோடு சம்மதம் தெரிவிக்கிறாளா' என்று யோசித்தபடியே எழுந்தான் வடிவேலு.

குன்றிலிருந்து கீழ்நோக்கி இறங்கும் பாதையில் மூவரும் நடந்தார்கள்.

''என்னைப் பற்றியே கதை அளந்து கொண்டிருந்து விட்டேன்; உங்களுக்கு அலுத்துப் போயிருக்கும். இல்லையா?'' என்று கேட்டார் உமாகாந்த்.

''சேச்சே! அப்படியொன்றும் இல்லை. நேரம் போனதே தெரியவில்லையே'' என்றான் வடிவேலு. உண்மையும் அதுதான். ஆனாலும் அவர் மடை திறந்த வெள்ளம் போல் வளவளவென்று வார்த்தைகளைக் கொட்டித் தீர்த்தது என்னவோ கொஞ்சம் வேடிக்கையாகத்தான் இருந்தது அவனுக்கு. 'தாய் நாட்டின் விடுதலைக்காகத் தாம் புரிந்துள்ள பணிகளெல்லாம் கவனிக்கப் படாமலே போய்விடுமோ என்ற ஒரு பயம் நிலவுகிறதா அவர் மனத்தில்? அந்தச் சாதனைகளுக்கு ஏற்பப் பெயரும் புகழும் செல்வாக்கும் தம்மைத் தவறாது வந்து அடைய வேண்டுமே என்று கவலைப்படுகிறாரா ?'

''பம்பாய்க்கு வந்ததிலிருந்து என்னவெல்லாம் பார்த்தீர்கள்?'' உமாகாந்த் உரையாடலை வேறு திசையில் திருப்ப யத்தனித்தார்.

''அதிகமாகச் சுற்றி அலைய நேரமில்லை. இன்று காலையில்தானே இந்த நகரத்தை மிதித்தேன்? 'கேட் வே ஆப் இண்டியா' என்கிறார்களே அதை மட்டும் பார்த்து விட்டு, மலபார் ஹில்லுக்கு வந்து சேர்ந்திருக்கிறேன்.''

''இந்தியாவின் நுழைவாயில் வரை சென்றிருந்தீர்களாக்கும். பார்க்க வேண்டியதுதான். ஆனால் இந்தச் சமயத்தில் அங்கு போய்ப் பிரயோசனம் இல்லை. அடுத்தடுத்து வைஸ்ராய்களும் புதுப்புது கவர்னர்களுமாக நம்மை ஆளுவதற்கென்று சீமையிலிருந்து அனுப்பப்பட்டு வருகிறார்களே, அப்போது வரவேற்பு விழாக்களும் வேண்டிய அளவுக்கு நம் மக்களை வதைத்தெடுத்து விட்டு விடைபெற்றுக் கொண்டு செல்கையில் பிரிவுபசார, வழியனுப்பு வைபவங்களும் அம்மண்டபத்தினருகே நடைபெறும். அவற்றைக் கண் குளிரக் கண்டு களிக்கவேண்டும்! கோலாகலம் நிறைந்த அந்தத் தினங்களில், மக்களின் தன்மான சுதந்திர உணர்ச்சிகளை நசுக்கியும் கசக்கியும் எறிய ஆங்கிலேயர் வைத்துள்ள ராணுவ சேனையும் போலீஸ் பட்டாளமும் அணிவகுத்து நின்று அவர்களுக்கு மரியாதை செலுத்தும். சுதேச சமஸ்தான மன்னர்கள் பட்டுப் பீதாம்பரங்கள் பளபளக்க, சரிகைத் தலைப்பாகைகள் தகதகக்க ஆபரணங்களில் பதிக்கப் பெற்றுள்ள நவரத்தினங்கள் மின்னி ஒளிபரப்ப, போனால் போகட்டும் என்று தங்களைச் சும்மா விட்டு வைத்திருக்கும் பிரிட்டிஷ் மன்னரிடம் தங்களுக்குள்ள விசுவாசத்தைத் தெரிவித்துக் கொள்ளும் முறையில் வரிசையாக நிற்பார்கள். மன்னரின் பிரதிநிதியாக இந்த மாநிலத்தை ஆண்டவருக்கு நன்றியறிதலையும் வணக்கத்தையும் கூறிக் கௌரவப் படுத்துவார்கள்.

''பாயி, வடிவேல்! மேன்மை பொருந்திய ஐந்தாம் ஜியார்ஜ் மன்னர், தாம் அடிமைப்படுத்தியுள்ள நாட்டில் அடியெடுத்து வைத்த இடம் அது என்பதன் அறிகுறியாக கேட் வே ஆப் இண்டியாவை நிறுவியுள்ளார்களே; ஆங்கிலேய ஆட்சியை ஆழக் குழி தோண்டிப் புதைத்து,அதன் ஞாபகச் சின்னமாக ஒரு

சமாதியும் எழுப்பும் காலம் எப்போது வரும், சொல்லுங்கள்!''

'ஆகா! உமாகாந்துக்குள்ள நாட்டுப் பற்றுதான் எத்தகையது?' என்று பிரமித்தான் வடிவேலு. 'ஒருமுறைக்கு நான்கு முறையாக எம்பிக் குதித்து முயன்றால் கைக் கெட்டி விடக் கூடிய உயரத்திலுள்ள கொய்யாப் பழத்தைக் கண்டுவிட்ட சிறுவனைப் போலல்லவா தோற்றமளிக்கிறார், சுதந்திரக் கனியை ஆங்கிலேயனிடமிருந்து தட்டிப் பறித்து விடலாம் என்கிற ஆசையில்?'

''உங்களைப் போன்ற விடுதலை வீரர்கள் வீறு கொண்டெழும்போது தேசத்துக்கு நல்ல காலம் பிறக்க அதிக நாளாகாது'' என்றான் வடிவேலு.

தாரா குறுக்கிட்டாள். ''வாயைத் திறந்தால் அரசியல்தானா?'' என்றாள் ஒரு பெருமூச்சுடன். ஏக்கத்தை அவள் மறைத்துக் கொள்ள முற்படவில்லை. ''வேறு ஒரு சங்கதியும் அகப்படவில்லையா உங்களுக்கு? இவ்வளவு நேரம் இந்தத் தோட்டத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தோமே அதன் அழகைப் பார்த்தீர்களா?''

''இந்த நந்தவனத்தை யார் ரசிப்பார்கள் தெரியுமா? ஆங்கிலேயர்களின் அடிவருடிகள், ராவ்பகதூர்கள், திவான் பகதூர்கள் போன்றோர்தான். பெரிய பெரிய மோட்டார்களில் அலுங்காமல் நலுங்காமல் வந்திறங்கி வம்பளந்து நேரத்தை வீணாக்குவதால் நஷ்டம் ஒன்றுமில்லை என்று நினைக்கும் தேசத் துரோகிகள்! அடிமைப்பட்டிருக்கும் ஒரு நாட்டின் இயற்கை எழிலை வேறு யாரால் அனுபவிக்க முடியும்? இந்தத் தோட்டம் ரொம்பப் பிரமாதமாயிருக்கும் என்று ஏதோ ஒரு புத்தகத்தில் படித்ததாக நினைவிருக்கிறது. எகிப்திய அரசியாக விளங்கி வன்மத்திலும் வனப்பிலும் தன்னிகரற்றவள் என்று பெயரெடுத்த ஸெமிராமிஸ் பூவுலகத்துக்கு மீண்டும் விஜயம் செய்து இந்தப் பூங்காவையும் பார்க்கக் கூடுமானால் பரவசமடைய மாட்டாளாம்; தன் வாழ்நாளில் இப்படிப்பட்ட ஒரு பூம்பொழிலில் உலவி வரக் கொடுத்து வைக்கவில்லையே என்ற பொறாமையால் வெந்து இன்னும் ஒரு தடவை செத்தே போய் விடுவாளாம்! ஆனால் நிஜத்தைச் சொல்ல வேறு மானால் எனக்கு என்னவோ மனம் இதில் லயிக்கவே யில்லை. அதோ பறந்து செல்கின்றனவே பறவைகள், அவை கண்களில் தட்டுப்படும்போது, சுதந்திரமாக நாம் என்றைக்குத்தான் வாழப் போகிறோமோ என்று மனக் கசப்பு உண்டாகிறது. பொங்கும் அலை கடல் விடுதலை உணர்ச்சி இதுபோல் நம் மக்களின் உள்ளங்களில் விம்மிப் பெருகவில்லையே என்ற வேதனையைத் தான் எழுப்புகிறது. மாலைக் கதிரவனைக் காணுகையில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சூரியன் அஸ்தமிப்பதேயில்லை என்று மார் தட்டுகிறார்களே அந்த அகங்காரம் இன்னும் எத்தனை நாட்கள் நீடிக்கும் என்றுதான் யோசிக்க ஆரம்பித்து விடுகிறேன். பாவி, வடிவேலு! நான் என்ன செய்யட்டும்? இயற்கையின் சௌந்தர்யங்களை ரசிக்க லாயக்கற்றவன் நான்!''

விடைபெற்றுக் கொண்டு வெவ்வேறு பக்கங்களில் பிரிந்து போக வேண்டிய நாற்சந்தியை நெருங்கி விட்டார்கள்.

மறுநாள் குறித்த நேரத்தில் வடிவேலு அவர்களுடைய ஜாகைக்கு வந்து சேர்ந்து விடுவதென்றும், பிறகு மூவரும் ஒன்றாகக் கிளம்பிக் கப்பல் துறையை அடைந்து அங்கே சுபாஷ் பாபுவைக் காணக் கூடப் போகும் ஆயிரக்கணக்கான மக்களுடன் கலந்து கொள்வதென்றும் தீர்மானித்தார்கள்.

'அன்று நான் அந்தச் சிறு பொய்யைச் சொல்லாமல் இருந்திருந்தால் ஒரு வேளை உமாகாந்த் துறைமுகத்துக்குப் போகும் எண்ணத்தையே கைவிட்டிருப்பார். துயரகரமான அந்தச் சம்பவம் நிகழ்ந்தே இருக்காது....'

தூங்குவது போல் பாசாங்கு செய்த வாறே இந்தப் பழைய நினைவுகளில் ஆழ்ந்து போயிருந்த வடிவேலு, இலேசாக இமைகளைத் திறந்து பார்த்தான். முன்பு தாராவின் கண்களில் திரையிட்டிருந்த நீர் இப்போது நல்முத்துக்களாகத் திரண்டு விழிக்கோணத்தில் நிற்பதைக் கண்டான். தன் இருதயத்தை முறுக்கிப் பிழிந்து உதிரத்தைச் சொட்ட வைப்பது போலிருந்தது அவனுக்கு.

அத்தியாயம் 10

வரவேற்பா இது?

மாயவரத்தை அணுகிக் கொண்டிருந்த ரயில் இடையில் ஓரிடத்தில் நின்று விட்டது. கண் விழித்து ஜன்னல் வழியே உடலை வெளியே நீட்டிப் பார்த்தான் வடிவேலு.

''என்ன ஸ்டேஷன்?'' என்ற கேள்வி பிறந்தது, படுத்து அரை குறையாகக் கண்ணயர்ந்திருந்த தாராவிடமிருந்து.

''ஸ்டேஷனுமில்லை, மண்ணுமில்லை. ஏதோ பொட்டல் வெளி'' என்றான்



வடிவேலு. ''பெரிய தேசபக்தரின் மனைவியை ஏற்றிக் கொண்டு செல்கிறதல்லவா ரயில்? அதுவும் கொஞ்சம் சத்தியாக்கிரஹம் செய்து நல்ல பெயர் சம்பாதித்துக்கொள்ள முயலுகிறது!''

தாரா எழுந்து உட்கார்ந்து கலகலவென்று சிரித்தாள். சட்டென்று அந்தக் கிண்கிணி நாதம் ஓய்ந்தது. எங்கோ பார்த்தவாறு மெல்லிய குரலில், ''நான் இவ்வாறெல்லாம் அசட்டுத் தனமாய் நடந்து கொள்ளக் கூடாது இல்லையா? தேனூரிலுள்ளவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள், என்னைப் பற்றி?'' என்று வருத்தப்பட்டாள்.

ஒரு புன்னகையை உதிர்த்தாலே போதுமானது என்று மற்றவர்கள் எண்ணக்கூடிய சந்தர்ப்பத்தில் அவள் சிறுமியைப் போலக் கட்டுப்பாடு ஏதுமின்றிச் சிரித்து வைத்தது அவனுக்கு ஆச்சர்யமாகத்தான் இருந்தது. தனக்கே வியப்பளித்த தென்றால் கிராம மக்கள் விகல்பமாகவல்லவோ கருதுவார்கள்? இந்தக் கோணத்தில் அவன் தாராவின் வருகையைப் பற்றி இதுவரை சிந்திக்கவில்லை.

''நீங்கள் தயங்குவதிலிருந்து நான் பயந்ததில் அர்த்தமுண்டு என்று தெளிவாகிறது. எப்படி நடந்து கொள்ள வேண்டும் நான்? கற்றுத் தாருங்கள்.''

''உங்களுக்குத் தெரியாததா? நான் என்ன சொல்லவிருக்கிறது?''

''அப்படியில்லை! பாரு எத்தனையோ கடிதங்கள் எழுதியும் நான் இந்தப் பயணத்தை ஒத்திப் போட்டுக் கொண்டே வந்ததற்கு அதுவும் ஒரு காரணம். உங்கள் ஊரில் எனக்குச் சரியான வரவேற்பு இருக்குமா? பாருவின் சிநேகிதி எல்லாருடைய நோக்கிலும் உயர்ந்து நிற்பது எப்படி? படித்துப் பட்டம் பெற்றவள் என்றாலே பரிகாசத்துக்கு இடமளிப்பதாகத் தோன்றுமே அவர்களுக்கு?''

''ஏன்? பாரு இல்லையா என்ன? பி. ஏ. பரீட்சை எழுதிப் பாஸ் பண்ணியவள்தானே? என்ன வந்து விட்டது அவளுக்கு?''



''எனக்குச் சமாதானம் சொல்லுகிறீர்கள். அதனால் கொஞ்சநஞ்சமிருந்த நம்பிக்கையும் அடியோடு போய்விட்டது. பாரு காலேஜில் சேர்ந்து படித்திருந்த போதிலும் கிராமிய வாழ்க்கையை ஏற்றுக் கொண்டு அங்கே எல்லாரும் என்ன எதிர்பார்க்கிறார்களோ அதன் படி நடந்து கொண்டு வருகிறாள். நான் அப்படியில்லேயே? இருந்தாலும் அவளைப் பார்த்தே நாலு வருஷங்களுக்கு மேலாகி விட்டதால் ஆவலை அடக்க முடியாமல் கிளம்பி விட்டேன்.''

ஆசை பகுத்தறிவை வெற்றிகொண்டது; இப்போது அறிவு விழித்துக் கொண்டு எச்சரிக்கிறது என்பதைப் புரிந்து கொண்டான் வடிவேலு. ''அப்படியெல்லாம் நீங்கள் மனம் கலங்கக் கூடாது'' என்றபோது அவனுக்கே கலக்கமாகத்தான் இருந்தது. நெற்றிப் பொட்டை இழந்து விட்ட போதிலும் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்காமல் நாலு பேருடன் தாராளமாகப் பேசிப் பழகுவதைத் தேனூர் வாசிகள் விரும்புவார்களா, அல்லது இந்த நகரத்து நாகரிகத்தைக் கண்டு எள்ளி நகையாடுவார்களா? வடிவேலு விழித்தான். தாராவுடன் அவன் நெருங்கி உறவாடிய வேளைகளிலெல்லாம் அவளிடம் பொருந்தியிருந்த அறிவாற்றல், கண்ணியம், இனிய சுபாவம் எல்லாமாகச் சேர்ந்து மதிப்பும் மரியாதையும் கொடுக்கச் செய்தன. ஆனால் தேனூரில் உள்ளவர்கள் வெறும் வாயையே மெல்லுபவர்களாயிற்றே?

புதிரை விடுவிக்கத் திணறிய வடிவேலுவிடம், ''நான் கவலைப் படுவதெல்லாம் எனக்காகவே அல்ல. என்னால் உங்கள் குடும்பத்துக்கு எந்த விதமான தொந்தரவும் ஏற்படக் கூடாதே என்றுதான்'' என்றாள் தாரா.

'நன்றாய்த்தா விருக்கிறது' என்று தனக்குள் சிரித்துக் கொண்டான் வடிவேலு. 'தாரா எங்கள் நல்வாழ்வுக்குக் குந்தகம் தன்னால் விளையக் கூடாதே என்று ஏதேதோ நினைத்துச் சிரமப் பட்டுக் கொண்டிருக்கிறாள். நாங்கள் அவள் சந்தோஷமாகக் கிராமத்தில் காலத்தை ஓட்ட வேண்டுமே என்று தவித்துக் கொண்டிருக்கிறோம். கிராம மக்களைப் பற்றியோ இருதரப்பிலும் பலமான யோசனை. ஆகக் கூடி ஒரே கவலைமயமாகவல்லவா இருக்கிறது?'

ஃ ஃ ஃ

மாயவரம் ஸ்டேஷனிலேயே தங்கை பார்வதியும் அத்தான் சிங்காரமும் தாராவை எதிர்நோக்கிக் காத்திருந்தது வடிவேலுவுக்கு வியப்பைத் தந்தது. அவர்களும் அவனைப் பார்த்துத் திகைப்பிலாழ்ந்து போனார்கள் சில விநாடிகளுக்கு. ரயிலடியிலேயே தாராவைஎதிர்கொண்டு அழைக்க அவர்கள் வருவார்களென்று வடிவேலு நினைக்கவேயில்லை. அவர்களோ அவன் பட்டாளத்தில் சேருவதற்காகப் போயே விட்டான் என்று தீர்மானித்திருந்தார்கள்.

''அண்ணா!'' என்று கூவியபடியே, அன்புடன் தன்னை அணுகும் பார்வதியைக் கண்டதும் வடிவேலுவுக்கு ஒன்றும் புரியவில்லை. 'இதென்ன திடீரென்று இத்தனை வாத்ஸல்யம்,சகோதரன் மீது?' ''ஏன் பாரு, தாராவை ஸ்டேஷனில் சந்திக்க வெறும் கையோடேயா வருவார்கள்? நல்ல வரவேற்பு கிடைக்குமோ, கிடைக்காதோ என்று ஏற்கெனவே சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கிறாள் உன் தோழி. ஒரு ரோஜாப் பூ மாலையாவது கட்டச் சொல்லி வாங்கி வரக் கூடாது? வெளியே மேளம் தயாராக இருக்கிறதா, அத்தான்? ஊர்வலத்துக்கு எல்லாம் 'ரெடி'யா?''

''அண்ணா! உன்னை என்னவோ என்று நினைத்தேன்; ரொம்பச் சமர்த்து என்று இப்போது தான் எனக்குப் புத்தி வந்தது'' என்றபடியே பார்வதி அவன் கன்னங்களை உள்ளங்கைகளால் அழுத்தித் தடவித் தன் நெற்றிப் பொட்டில் விரல்களை மடக்கிச் சொடுக்கித் திருஷ்டி கழித்தாள்.

''தாராவைக் கவனி, பாரு!'' என்று கூறி எக்கச்சக்கமான ஒரு நிலையிலிருந்து தப்பி விலகிக் கொண்டான் வடிவேலு. தாராவினெதிரில் தங்கையின் அன்புப் பிரவாகம் அவனிடத்தில் வெட்கத்தை உண்டாக்கியது.

''அவள் கிடக்கிறாள், அண்ணா! வீட்டோடு குறைந்தது ஐந்தாறு மாதங்களேனும் தங்குவதாய் வாக்களித்து வந்திருக்கிறாள். சாவகாசமாகப் பேசிக் கொள்வேன் அவளிடம். நீ அப்படியில்லையே? 'பைபிளி'ல் வருகிற கதை போல அப்பாவுக்கு நீ காணாமல் போய்க் கிடைத்த மகனல்லவா?''

''அதென்ன சமாசாரம்?'' என்று இடைமறித்துக் கேட்டாள் தாரா.

''உனக்குச் சொல்லவில்லையா, அண்ணன்? பட்டாளத்திலே சேருவதாக முடிவு பண்ணிக் கிளம்பி விட்டவனை நீதான் நல்ல வார்த்தை கூறிச் சரிக்கட்டித் திருப்பி அழைத்து வந்திருக்கிறாய் என்றல்லவோ நினைத்துக் கொண்டிருக்கிறேன்?''

''ஒருநாளும் நான் அப்படிச் செய்யவே மாட்டேன். அவர் விருப்பத்துக்குக் குறுக்கே எதற்காக நிற்க வேண்டும்?''

நன்றியறிதலுடன் தாராவை ஏறிட்டு நோக்கினான் வடிவேலு. 'அப்பாடா! தன் இதய தாபங்களைப் புரிந்துகொண்டு அனுதாபப்படும் உயிர் ஒன்றும் இந்த உலகத்தில் இருக்கிறதா?'

வெளியே நின்ற இரு வண்டிகளுள் ஒன்றில் பெண்கள் ஏறிக் கொண்டனர். நிறைய இடமிருந்தும் ஒருவரோடு ஒருவர் இடித்துக் கொண்டுதான் அமர்ந்தார்கள். வண்டிக்காரன் பாரம் சரியாக இல்லை என்று எவ்வளவு சொல்லியும் அவர்கள் கேட்கவேயில்லை.

'அந்த எல்லன் மட்டும் என் கண்ணிலே தென்படட்டும்; அவன் தலையைத் திருப்பி வைத்து விடுகிறேன்' என்று உரக்கவே முணுமுணுத்த வடிவேலு, அத்தான் ஏறியிருந்த மற்றொரு வண்டியில் முன்புறம் எம்பி உட்கார்ந்து கயிற்றைப் பற்றிச் சொடுக்கினான். இரட்டை மாட்டு வில் வண்டிகள் இரண்டும் 'ஜல் ஜல் ஜல் ஜல்' என்று சதங்கை ஒலி எழுப்பி விரைந்தன.

''இந்த விஷயத்தை அவன் மாமாவிடம் மட்டும் கூறியிருந்தாலும் பரவாயில்லை தம்பி! ஊரே 'கொல்'லென்று போயிருக்கிறது. நேற்று சாயந்திரத்திலிருந்து யாரைப் பார்த்தாலும் சரி, வடிவேலு தொப்பி அணிந்து, துப்பாக்கி பிடித்திருக்கும் கதையைத்தான் அளக்கிறார்கள். அப்படியிருக்க நீ திரும்பவும் இவர்களுக்கு முன்னாடி போய் எப்படி நிற்கப் போகிறாய்? பாதி தூரம் சென்று, பிறகு பட்டாளத்திலே சேரப் பயந்து ஓடி வந்து விட்டான் என்று கைகொட்டிச் சிரிப்பார்களே!

''அத்தான் இதைப் பிடியுங்கள்! சொல்கிறேன்'' என்று தும்புக் கயிறுகளை அவரிடம் தந்து விட்டு வண்டி நிலையாக நின்றதும் கீழே குதித்தான் வடிவேலு. ''நான் தேனூர்ப் பக்கம் எட்டிப் பார்த்ததாகவே யாருக்கும் தெரிய வேண்டாம். இங்கேயே தங்கி ராத்திரி ரயிலைப் பிடித்துப் பட்டணத்துக்குத் திரும்புகிறேன்.''

முன்னால் சென்ற வண்டியின் ஓட்டமும் இதற்குள் தடைப்பட்டு நின்றது. அவன் கீழே இறங்கி விட்டதைக் கண்டு பெண்கள் இருவரும் கலவரமடைந்திருக்க வேண்டும். அவர்களை அணுகித் தன் திட்டத்தை விளக்கினான் வடிவேலு.

''இவ்வளவு தூரம் அழைத்து வந்து விட்டு விட்டு உடனடியாகத் திரும்பிப்போகிறீர்களே, நியாயமா அது?''

வடிவேலுவின் மனத்தில் ஒரு குறுகுறுப்பு உண்டாகி உடல் முழுவதும் பரவியது. 'நான் பிரிந்து செல்வதை விரும்பவில்லையா தாரா? எப்படிப் புரிந்து கொள்வது நான் இவள் சொற்களை?'

பற்றி எரியத் தொடங்கிய நெருப்புக் குச்சியில் குடம் நீரைக் கொட்டினாள் பார்வதி. எந்தவிதமாக அர்த்தம் செய்து கொள்ள வேண்டும் என்று சுட்டிக் காட்டுவது போலப் பேசினாள்: ''ஆமாம், அண்ணா! நீ ஓடிப் போய் விட்டாய் என்பது நிச்சயமானால் அப்பாவும் அம்மாவும் முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்வார்கள். பிறகு தாரா அங்கே நிம்மதியாகத் தங்கியிருக்க முடியுமா? அவளுக்குப் பூரண அமைதி கிடைக்க வேண்டுமென்பதில் நீதானே ஆரம்பத்திலிருந்து அக்கறை காட்டி வருகிறாய்?''

பதில் ஏதும் கூறாமல் நடந்து சென்று, மீண்டும் வண்டியில் ஏறி உட்கார்ந்தான் வடிவேலு. மனத்துக்குக் கொடுக்கும் அடியாகப் பாவித்துச் சவுக்கைச் சொடுக்கினான். மாடுகள் நாலு கால் பாய்ச்சலில் விரைந்தன.

வாசலிலேயே நின்று கொண்டிருந்தார் முத்தையா. அவர் ரௌத்திராகாரம் அடைந்திருப்பது கண்ட பார்வதி, தாராவின் பக்கமாகத் திரும்பி நின்றுகொண்ட பாணி நடக்கப் போகும் நாடகத்தைச் சிநேகிதியின் பார்வையிலிருந்து மறைத்து விட முற்படுவது போலிருந்தது. சிங்காரம் மோகனைத் தூக்கிக் கொண்டு கொஞ்ச ஆரம்பித்தார்; சுற்றி நடப்பது ஒன்றிலும் தமக்குச் சம்பந்தமே யில்லை என்று காட்டிக் கொள்வது போல.

வடிவேலு நிலவரத்தை நன்கு அளந்து கொண்டான். தாராவின் கைப்பைகள் இரண்டையும் தூக்கிக் கொண்டு படிகளில் ஏறினான்.

முத்தையா, ''எலே! பட்டாளத்திலே சேரப் போவதாகச் சொன்னியாமே, நிஜம்தானா?'' என்று கர்ஜித்தார்.

''அப்பா, பிறகு பேசிக் கொள்வோமே'' என்று தாராவை நோக்கிக் கண்ணோட்டம் செலுத்தினான் வடிவேலு ஜாடையாக. வந்திருக்கும் விருந்தாளியை முன்னிட்டுத் தன்னை நிதானப் படுத்திக் கொள்ளக்கூடிய நிலையிலா இருந்தார் முத்தையா?

''ஏண்டா! இந்தக் குடும்பத்துக்கு நீ ஏற்கெனவே தேடி வைச்சிருக்கிற அவக்கேடு போதாதா? ஓடித்தான் போயிருக்கிறாளே, அந்தச் சிங்காரச் செருக்கி சிங்கப்பூருக்கு? நீ வேறே சொல்லிக்காமல் கொள்ளாமல் ஓடிப்போய்க் கொஞ்ச நஞ்சம் பாக்கி இருக்கிற மானத்தையும் கப்பலேற்றணுமா?'' என்று கத்தினார்.

வீதியின் எதிர் வரிசை வீடுகளில் இருந்தோரில் சிலரும் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தனர். வடிவேலு பற்களை நறநறவென்று கடித்தான். (தொடரும்)


பவழத் தீவு
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ரமணி
(9)
சிறைச் சாலைக்குள் வந்து விழுந்த ஆனந்தன் அறையின் மூலையில் இருந்த உருவத்தைக் கண்டதும் கத்தி விட்டான்........
அப்பா! அப்பா! நீங்களா அப்பா?
என்னை அப்பா என்று அழைக்கக் கூடிய மகன் இந்தப் பவழத் தீவில் இல்லை யார் நீ... இதுவும் அந்தத் தவபாணியின் சூழ்ச்சிகளில் ஒன்றா?
ஐயோ அப்பா! சூழ்ச்சியல்ல. உங்கள் ஆனந்தனைத் தெரியவில்லையா? அம்மாவைச் சிறை மீட்டு விட்டேன். உங்களைக் காணவே சிறைப்பட்டு வந்தேனப்பா.
ஆனந்தா, என் கண்மணி! ஆனந்தா! இருட்டிலேயே அடை பட்டிருப்பதில் கண்கள் பார்க்கும் சக்தியை இழந்து விட்டதடா கண்ணே!
ஆனந்தன், தான் பவழத் தீவிற்கு வந்ததிலிருந்து அது வரை நடந்ததைத் தகப்பனாரிடம் சுருக்கமாகச் சொல்லிக் கொண்டிருக்கும் போது.....
மன்னரை இப்படி மோசமான ஓர் இடத்தில் வைத்திருப்பது வருத்தமாகத்தான் இருக்கிறது. ஆனால் நான் கேட்டதைச் சொல்வதானால் தங்களைத் தக்க மரியாதைகளுடன்..



நேற்று, அதற்கு முன் தினம், அதற்கும் முன்னால் என்ன பதில் சொன்னேனோ அதையே தான் இன்றும் என்னிடமிருந்து நீ எதிர்பார்க்க முடியும்.....
அதோ பார்த்தீர்களா அந்தச் சுவரில் இன்னும் இரண்டு ஜோடி சங்கிலிகள். நாளைக் காலையிலும் உங்கள் பதில் இதுவானால் இவ்விருவரும் அத்துடன் பிணைக்கப்படுவார்கள். அது மட்டுமல்ல உங்கள் அருமை மகன் சித்திரவதைக்குள்ளாவதைக் கண்டு களிக்கலாம். நாளை வரை இவர்கள் விலங்கின்றி இங்கேயே இருக்கட்டும்....
அயோக்கிய நாயே. சீ, நீயும் ஒரு மனிதனா?
மனிதர்களை நாங்கள் கட்டிப் போடுவதில்லை.
அப்பா, அவன் உங்களிடம் எதை எதிர்பார்க்கிறான்?
பாழடைந்த இந்திரபுரியின் இடிபாடுகளிடையே மறைந்திருக்கும் புதையல் இருக்குமிடத்தைச் சொல்ல வேண்டுமாம்...
நீங்கள் யாத்திரை கிளம்பும்போது நமது குருதேவர் கொடுத்தாரே, ஒரு குறிப்பு. அது தானே?
ஆமாம். அது இந்த என் உடலில் தான் இருக்கிறது. ஆனால் அதை இவர்களால் கண்டு பிடிக்கவே முடியாது...
ஆனந்தா, இத்தனை நாள் அதை நான் காப்பாற்றி விட்டேன். இனி அதை உன்னிடம் ஒப்படைத்து விடுகிறேன். கத்தி வாளிருக்கிறதா?
இல்லையே.. எதற்கு?...
இதோ என்னிடமிருக்கிறது...


அந்த வாளினால் என் துடையைக் கிழி. அதனுள் அந்தக் குறிப்பை வைத்து நான் தைத்திருக்கிறேன்.
ஐயோ அப்பா... இதென்ன?
ஆனந்தா, நீ அரசகுமாரன். ரத்தத்தைக் கண்டு பயப்படலாமா? இதோ என் கையிலுள்ள காயத்தில் ஒரு மருந்து இருக்கிறது. அதைத் தடவினால் ரணம் உடனே அழிந்துகொள்ளும். துடையைக் கிழித்து அதை எடு.
தகப்பனாரின் கட்டளைப்படி அவரது துடையைக் கிழித்து, புதையல் பட்டத்தை வெளியிலெடுத்தான் ஆனந்தன்...
மகனே, இதைக் காப்பாற்று. நமது மூதாதையரின் பொக்கிஷத்தை அடையும் பொறுப்பு இனி உன்னுடையது.
அப்படியே ஆகட்டும் அப்பா. கந்தா, என்னைவிட இதைப் பத்திரமாகக் காப்பாற்றும் தகுதி உனக்குண்டு. இதை நீ வைத்திரு.
கந்தா, இந்தச் சிறைக்குக் காற்றும் வெளிச்சமும் கொடுப்பது அந்த ஒரு ஜன்னல்தான் போலிருக்கிறது. அந்தக் கம்பிகளைப் பெயர்க்க முடியுமானால்...
ஏறிப் பார்க்கலாமா?
கம்பிகளை எல்லாம் எடுத்தாலும் கூட ஒரு ஆள் நுழைய முடியாது.
கந்தா! கொஞ்சம் சிரமப்பட்டால் காரியம் கைகூடும். கம்பிகள் அப்படியொன்றும் உறுதியாகப் பதிக்கப்படவில்லை.........
இங்கிருந்து தப்பினாலும் வெளியே பலத்த காவல் இருக்கிறது.
காவலைப் பற்றிக் கவலை வேண்டாம். நான் இங்கிருப்பதால் உங்களைத்தான் இம்சிப்பார்கள். ஆகவே...
தப்பிச் செல்வதால் பலன் உண்டு. நமது படைகளும் அருகில்தான் உள்ளன
அன்று இரவு சந்தடி அடங்கியதும் ஆனந்தன் தன் திட்டத்தை நிறைவேற்றுவதில் முனையலானான்.......

தொடரும்

'தரத்தின் சின்னம்'

இதைப் பாருங்கள்



பர்ஸ்டோன் டயர்களில் மட்டுமேயுள்ள இது உங்களுக்கு அதிகப்
டியான பாதுகாப்பிற்கும் நம்பிக்கைக்குமான உத்திரவாதச் சின்னம்


களிடம் ஒரு மோட்டார் ஸ்கூட்டர், கார் ராக்டர் அல்லது டிரக்கிருந்தாலும் சரி, அல்லது கள் மேற்பார்வையில் ராட்சஸ மண் அகற்றும் ந்திரங்களிருந்தாலும் சரி, உங்களுடைய வைகளுக்குத் தகுந்த ஒரு பயர்ஸ்டோன் டயர் க்கிறது. ஒவ்வொரு டயரிலும், நெடுங்கால க ஸ்தாபிக்கப்பட்டதும் கூடுதலான பாதுகாப் ரும் நம்பிக்கைக்கும் சின்னமான பயர்ஸ்டோ ் 'தரத்தின் சின்னம்' பொரிக்கப்பட்டுள்ளது.

ஸ்டோனைத் தேர்ந்தெடுப்பதால் உங்களுக்குக் கிடைப்பவை

ாதுகாப்பு — பயர்ஸ்டோனுக்கேப் பிரத்தி யேகமான டிரெட் டிசைன் மற்றும் டயர் அமைப்பு உங்களுக்குக் கூடுதலான நிறுத்தும் க்தியையும் ரஸ்தா அபாயங்களிலிருந்து பாது காப்பையும் அளிக்கின்றன,


சிக்கனம் — பயர்ஸ்டோனின் நீடித்து உழைக் கும் டிரெட் இந்தியாவில் நிலவும் உழைப்புச் சூழ்நிலைகளுக்கெனப் பிரத்தியேகமாகக் கலவை செய்யப்பட்டது. ஒரிஜினல் டிரெட் மூலம் நீங்கள் நிச்சயமாக ஒவ்வொரு ரூபாய்க்கும் கூடுதலான கிலோ மீட்டர்கள் ஓட்ட முடிகிறது.

ரிடிரெட் செய்ய முடியும் — உங்கள் பயர்ஸ் டோன் டயர்களைப் பேணுங்கள். அவற்றின் மீது தாங்க முடியாத பாரத்தை ஏற்றித் தாறுமாறாக உபயோகிக்காதீர்கள். அவை மறுபடியும் மறுபடியும் ரிடிரெட் செய்வதற்கு லாயக்காக இருக்கும்.



பயர்ஸ்டோன் - இன்று சிறந்தவை — நாளை மேலும் சிறந்தவை

மின்மினி மீன்!



இருட்டில் வழி தெரிவதற்கு நாம் டார்ச் கொண்டு செல்வதில்லையா? அதே போல இருட்டில் இரை தேடுவதற்கு ஒரு மீன் டார்ச் விளக்கை உபயோகப்படுத்துகிறது! ஆழ்கடலின் அடியில் ஒரே இருட்டாக இருக்கும். ஆங்க்ளர் என்பது ஒரு வகை ஆழ்கடல் மீன். இதன் தலையில், வாயின் மேல் பாகத்தில் தூண்டில் போன்ற ஓர் உறுப்பு நீட்டிக்கொண்டிருக்கிறது. இருட்டில் மின்மினிப் பூச்சி பளிச்சிடுவதைப் போல இந்த உறுப்பிலிருந்து ஒளி உண்டாகிறது. இந்தப் பளபளப்பினால் கவரப்பட்ட மற்ற மீன்கள் இதன் அருகே ஓடி வருகின்றன. அவ்வளவுதான்! தயாராக வாயைத் திறந்து கொண்டிருக்கும் இந்த மீன் அவைகளைக் கபளீகரம் செய்து விடுகிறது.

மொத்தம் எத்தனை பேர்?


சுப்புசாமி தம்பதிக்கு ஏழு பெண்கள். ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒரு சகோதரன் இருந்தான். அப்படியானால் அந்தக் குடும்பத்தில் மொத்தம் எத்தனை நபர்கள் இருந்தார்கள்?



பத்து பேர். ஏழு பெண்ணும் ஒரு பிள்ளையும். அந்த ஒரு பிள்ளை எல்லாப் பெண்களுக்கும் சகோதரன் தானே.

சர்க்காரமா - க்யூ

சென்னையிலே வந்துள்ள சர்க்காரமாவைக் காண ரமணியும் உஷாவும் கிளம்பினார்கள். க்யூவில் நுழைவதற்கான வழி கீழே அம்புக் குறியிட்டுக் காட்டி இருக்கிறது. நடுவில் + குறியிட்டுள்ள இடம்தான் சர்க்காரமா ...



ஜோதிடப் புலி!

உன் நண்பனைப் பார்த்து "நீ பிறந்த தேதி, மாதம், உன் வயது இத்தனையையும் நான் கனகச்சிதமாகச் சொல்லி விடுகிறேன்" என்று சொல்லு. உனக்கு ஆருடத்திலே அபாரமான திறமை உண்டு என்பதை அவன் நம்பாமல் கேலியாகச் சிரிப்பான். உடனே நீ பந்தயம் கட்டி விட்டு "நான் சொன்னபடி எல்லாம் செய்" என்று எட்டப்போய் நின்றுகொள். அவன் பிறந்த தேதியையும் மாதத்தையும் ஒரு காகிதத்தில் எழுதச்சொல். அதை உன்னிடம் காட்டவேண்டாம் என்றும் சொல். உதாரணமாக அவன் பிறந்த தேதி 21, மாதம் செப்டம்பர் என்று வைத்துக் கொள்ளுவோம். அதாவது ஒன்பதாவது மாதம் இல்லையா? அவன் அதை 219 என்று எழுத வேண்டும். தேதியையும் மாதத்தையும் ஒரே எண்ணாக எழுதச் சொல். பிறகு அதை இரண்டால் பெருக்கச்சொல். (219 × 2 = 438 வந்திருக்கும்.) பெருக்கிவந்த தொகையுடன் ஐந்தைக் கூட்டிக் கொள்ளச் சொல் (438 + 5 = 443) கிடைத்த தொகையை மறுபடி ஐம்பதால் பெருக்கச் சொல். (443 × 50 = 22,150) பெருக்கி வந்த இலக்கத்துடன் அவனது தற்போதைய வயதைக் கூட்டச் சொல். (அவனது வயது 13 என்று வைத்துக் கொள். அப்படியானால் 22,150 + 13 = 22163) அத்துடன் ஒரு வருடத்தின் மொத்த நாட்களைக் கூட்டிக்கொள்ளச் சொல் (22,163 + 365 = 22, 528) இப்போது கடைசியாக அவனுக்குக் கிடைத்த விடையைச் சொல்லச் சொல். அவன் சொல்லுவான். அதிலிருந்து 615ஐக் கழித்துவிடு. அதாவது 22,528—615 என்றால் வரும் விடை (21,913 இல்லையா?) இதில் முதல் இரண்டு இலக்கமும் அவனது பிறந்த தேதி (21) மூன்றாவது இலக்கம் அவன் பிறந்த மாதம்(9) கடைசி இரண்டு இலக்கமும் அவனுடைய வயது (13.) மந்திரமல்ல தந்திரமல்ல. ஆனால் உன் நண்பன் உன்னைத் திறந்த வாய் மூடாமல் பார்த்து வியந்து கொண்டிருப்பான். கூட்டிக் கழித்துப் பெருக்கும் இலக்கங்களை வரிசைக் கிரமமாக மறக்காமல் செய்தாயானால் தவறே ஏற்படாது. யாருடைய பிறந்த மாதம், தேதி, வயதையும் இதேபோலச் சொல்லிவிடலாம்.



சேர்ந்தாற்போல விடாமல் அடைமழை பெய்தாலோ, ஊதல் காற்றடித்தாலோ உடனே ரேடியோவின் 'வானிலை அறிக்கை'யில் என்ன சொல்லுகிறார்கள் என்று கேட்க ஓடுகிறீர்கள் இல்லையா? உங்களுக்குத் தெரியாததை - உங்களால் சொல்ல முடியாததை - வானொலிக்காரர்கள் மட்டும் எப்படிச் சொல்கிறார்கள்? மாலையில் வரப்போகும் இடியுடன் கூடிய மழையைப் பற்றியும், இருபத்திநாலு மணி நேரத்தில் வீசப்போகும் புயற் காற்றைப்பற்றியும் அவர்களுக்கு முன் கூட்டியே யார் அறிவிக்கிறார்கள்?

"வானிலை ஆராய்ச்சி நிலையம் ஒன்று இருக்கிறது. அங்குள்ளவர்கள் வானிலையை வானொலிக்காரர்களுக்குத் தெரிவிப்பார்கள்."


"ஆமாம். ஆனால் வானிலை ஆராய்ச்சி நிலையத்திலுள்ளவர்களுக்கு இந்த விஷயத்தைத் தெரிவிப்பது யார்?"


அந்த நிலையத்தில் எத்தனையோ இயந்திரங்கள் இருந்தாலும் அவைகளில் முக்கியமானது பாரமீட்டர் என்ற ஒரு கருவிதான்.

பாரமீட்டர் என்பது காற்றின் அழுத்தத்தை அளவிடும் ஒரு கருவி. அழுத்தம் என்றால் காற்றின் - அதாவது வாயுமண்டலத்தின் - பல்வேறு நிலைகள். காற்றின் அழுத்தத்தைப் பற்றி முதன் முதலில் ஆராய்ந்து அறிந்தவர் பதினேழாம் நூற்றாண்டுவாசியும் இத்தாலிய விஞ்ஞானியுமான கலிலியோ (1564 - 1642) என்பவர். காற்றின் அழுத்த சக்தி ஒரு குழாயிலுள்ள நீரை 34 அடி வரை கீழே விழாமல் நிற்கச் செய்யும் என்பதை இவர் கண்டுபிடித்தார். இந்தக் குழாயின் குறுக்களவு ஒரு அடி இருக்குமானால் அதிலுள்ள நீரின் நிறை பதினேந்து டனாக இருக்கும் என்பதையும் கணக்கிட்டார். காற்றின் பல்வேறு அழுத்த நிலைகளை அறிய இதுவே ஆதாரம்.

கலிலியோவின் மாணாக்கருள் ஒருவரான 'டாரிசெல்லி' தமது ஆசிரியரின் ஆராய்ச்சியில் ஒரு புது முறையை ஏற்படுத்தினார். அதாவது தண்ணீருக்குப் பதில் பாதரசத்தை உபயோகித்தார். நீரை விடப் பாதரஸம் 13 மடங்கு கனமானது. இதனால் குறைந்த அளவு திரவமும் குட்டையான குழாயும் போதும் என்ற நிலை ஏற்பட்டது. 34 அடி நீளமுள்ள குழாயைக் கொண்டு கணக்கிடுவது எத்தனை அசௌகரியம். டாரிசெல்லியின் சோதனையை நீங்களே கூடச் செய்து பார்க்கலாம். 3 அடி நீளமுள்ள ஒரு பக்கம் மூடப்பட்ட கண்ணாடிக் குழாயில் பாதரஸத்தை நிரப்பிக் கொள்ள வேண்டும்.

அனிராய்டு பாரமீட்டர்






மேலே: A. சூனியப் பிரதேசம். B. கிண்ணத்திலுள்ள பாதரசம்.

கீழே: A. உறுதியான ஸ்பிரிங் B. குறிமுள். C. சூனியமாக்கப்பட்ட பெட்டி. D. குறிமுள்ளை இயக்கும் சங்கிலி.


நிற்கவைத்தால் குழாயிலுள்ள பாதரஸத்தில் குறிப்பிட்ட ஒருபகுதி கிண்ணத்தில் விழுந்து ஒரு நிலையில் அப்படியே நின்றுவிடும். குழாயின் பாதரஸ மட்டத்துக்கும் கிண்ணத்தின் பாதரஸ மட்டத்துக்கும் இடையேயுள்ள தூரத்தை அளந்து பார்த்தால் சரியாக 30 அங்குலம் இருக்கும். இதுதான் காற்றின் சாதாரண அழுத்தம். குழாயின் பாதரஸ மட்டத்துக்கு மேலுள்ள பாகத்தில் காற்றுக்கூடக் கிடையாது. இதற்குச் சூனியப் பிரதேசம் என்று பெயர். குழாயிலுள்ள பாதரஸத்தின் உயரத்திலிருந்து காற்றின் அழுத்த நிலையைக் கணக்கிடுகிறார்கள்.

டாரிசெல்லி காற்றின் அழுத்த நிலை அடிக்கடி மாறுதலடையக் கூடியது என்று கண்டுபிடித்தார். காற்றின் அழுத்த சக்தி அதிகமானால் அதாவது பாதரஸ மட்டம் உயர்ந்தால்-30 அங்குலத்துக்கு மேல் போனால் சுகமான பருவநிலை என்றும், குறைந்தால் அதாவது பாதரஸ மட்டம் தாழ்ந்தால் - 29 அங்குலமோ அதற்கும் குறைவாகவோ இருந்தால் பருவநிலை மோசம் என்றும் கொள்ளவேண்டும். 29 அங்குலத்துக்கும் 30 அங்குலத்துக்கும் இடையிலேதான் மாறக் கூடிய பருவநிலை. பாரமீட்டரின் பாதரஸ மட்டம் உயர்ந்தால் 'காற்றின் அழுத்த நிலை அதிகமாகிறது' என்பதன் அறிகுறி. குறைந்தால் 'காற்றின் அழுத்தநிலை குறைந்து வருகிறது. பருவநிலை மோசமாகக் கூடும் என்று அறிய வேண்டும். அனிராய்டு பாரமீட்டர் என்பது ஒன்று. அனிராய்டு என்றால் திரவமே இல்லாதது என்று பொருள். இந்தக் கருவியில் பாதரஸம்கூடக் கிடையாது. இந்தக் கருவிக்குள் சூனியமாக்கப்பட்ட ஓர் இரும்புப் பெட்டி இருக்கிறது. இந்தப் பெட்டியின் முன் பக்கம் காற்றின் அழுத்தத்தினால் உப்பும், சுருங்கும். இந்தச் சூனியப் பெட்டியின் அசைவுகளை ஒட்டி அதனோடு பொருத்தப்பட்ட ஒருமுள், மேலே குறிகளிடப்பட்ட தகட்டில் நகரும். அதன் அசைவுகளிலிருந்து பருவநிலையின் மாறுதல்களைக் கலபமாகத் தெரிந்து கொள்ளலாம். இத்தகைய மாறுதல்களைத் தானாகவே ஒரு காகிதத்தில் கோடுபோட்டுக் குறிக்கும் ஒரு கருவியும் வானிலை ஆராய்ச்சி நிலையத்தில் உண்டு. 'பாரோகிராப்' என்ற இந்தக் கருவி வேறொன்றும் இல்லை. அனிராய்டு பாரமீட்டரேதான். ஆனால் இதோடு இணைக்கப்பட்ட ஒரு பென்னில் கிழமையும் மணியும் குறிக்கப்பட்ட காகிதம் சுற்றிய உருளை ஒன்றின்மீது காற்றின் அழுத்த நிலையைக் கோடு கிழித்துக் காட்டிக் கொண்டே போகும். இந்தக் கருவி இருப்பதினால் தான் பயங்கர மழை, புயல் காற்று வரப்போவதை முன்கூட்டியே அறிந்து, ஜனங்களை எச்சரிக்கை செய்து பெரிய அபாயங்களில் இருந்து அவர்களைக் காப்பாற்றமுடிகிறது.

பாதரஸ பாரமீட்டர்







புதுவெள்ளம்



அத்தியாயம் நாற்பத்து மூன்று

தில்லை அம்பலம்

குருசாமியிடம் பேச்சு வாங்கிக் கட்டிக் கொண்ட ரத்தினம் அந்த மனச் சாட்சித் துடிப்போடு முதன் முதலில் எழுத்தாளர் அம்பலவாணனைக் காண்பதற்குச் சென்றான். அவன் சென்ற வேளை அவ்வளவு நல்ல வேளையாக இருக்கவில்லை. அம்பலவாணன் மேஜையில் காகிதத்தை வைத்துக் கொண்டு, கையில் பேனாவுடன் தம்முடைய வீட்டுக் கூரையின் ஒரு மூலையை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். கற்பனைக் காதலியின் ஊடலைத் தணிப்பதற்காக அவர் ஏங்கித் தவங் கிடந்த நேரம் அது.

வந்தவனை அவர் வரவேற்கவில்லை; அவனோடு முகம் கொடுத்துப் பேசவுமில்லை. அவனுடைய வரவை அவர் தெரிந்து கொள்ளவே இல்லை. விழிகள் திறந்திருந்தனவே தவிர, விழிகளின் உள்ளொளி அவருடைய கதாபாத்திரங்களில் ஒன்றியிருந்தது.

''வணக்கம் அண்ணா! உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும்; மிகவும் அவசரமான விஷயம்...''

இந்தக் குறுக்கீட்டைக் கண்டவுடன் அவருக்குக் கோபம் வந்து விட்டது. காதற் காட்சிக்கு மத்தியில் வரும் 'வில்லனை'க் கதாநாயகன் உருட்டி விழிப்பது போல் ரத்தினத்தைப் பார்த்தார். 'எழுத்தை விட எனக்கு இப்போது எதுவும் அவசரமுமில்லை; முக்கியமுமில்லை; தயவு செய்து போய்விட்டு வா' என்று கூறின அவருடைய கண்கள்.

''உங்களுக்கு உதவி செய்வதற்குத்தான் அண்ணா இப்போது வந்திருக்கிறேன்'' என்று மெதுவாக இழுத்தான் ரத்தினம்.

''என்னை இப்போது எழுத விடுங்கள்! அதுதான் நீங்கள் செய்யும் முதல்உதவி'' என்று ரத்தினத்திடம் எரிந்து விழுந்தார் அம்பலவாணன்.

'இந்த மனிதர் முன்கோபி மாத்திரமல்ல; முரடரும் கூட!' என்று நினைத்துக் கொண்டான் ரத்தினம். அவரைப் போல் ஒரு கதாபாத்திரத்தைத் தன்னுடைய நாடகத்தில் உருவாக்கவேண்டுமென்று அவனுக்குத் தோன்றி விட்டது. சொல்ல வந்த விஷயத்தைச் சொல்லாமலே திரும்பி விட நினைத்தான். ஆனால் மனம் கேட்கவில்லை.

கிழிந்த சட்டையும், வாரி விடாத கிராப்புத் தலையுமாக உட்கார்ந்து கொண்டு, தம்மைப் பற்றியே கவலைப் படாமல் சமூகத்தின் கவலைகளைப் பற்றி எழுதும் அந்த மனிதர் மீது அவனுக்கு இரக்கம் பிறந்தது. பழகத் தெரியாத ஒரு குற்றத்துக்காக அவன் அவர் மீது கோபம் கொள்ளவில்லை. அவருடைய எழுத்துக்களில் அவர் உள்ளத்தைப் புரிந்து கொண்டவன் அவன்.

அவரை வழிக்குக் கொண்டு வந்து தன்னோடு பேச வைப்பதற்கு என்ன வழி என்று யோசித்தான். பளிச்சென்று ஒரு திட்டம் பிறந்தது. சமீபத்தில் அவர் எழுதியிருந்த கதை ஒன்றை மளமளவென்று பாராட்டத் தொடங்கினான். அதைக் கேட்டவுடன் எழுத்தாளருக்குக் கோபம் பறந்து விட்டது. உச்சி குளிர்ந்து விட்டது அவருக்கு.

''அண்ணா! தனி மனிதர்களுடைய வாழ்க்கையில் ஏற்படும் வேதனைகளையும், சமூகத்தின் தீமைகளையும் நீங்கள் எடுத்துச் சொல்லும் துணிவிருக்கிறதே..., அடடா!....''

அம்பலவாணன் அதே விநாடியில் அவனிடம் நன்றாக வசப்பட்டுக் கொண்டார். ஒரு ரசிகனின் இதய பூர்வமான பாராட்டென்றால், அதை விடச் சிறந்த பரிசு வேறெதுவுமே இல்லை என்பது அவர் எண்ணம்.

''என்னவோ எழுதுகிறேன். நானா எழுதுகிறேன்! ஏதோ ஒரு சக்தி, வாழ்க்கையில் நான் காணும் இன்ப துன்பங்களையெல்லாம் திரட்டிக் கொண்டு வந்து என்னிடம் சுமத்தி, தானாகத் தன்னை எழுத்தில் வெளிப்படுத்திக் கொள்ளுகிறது. அந்தச் சக்தியால் ஆட்டி வைக்கப்படும் அற்பமான சிறு துரும்பு நான்.''

தாம் உண்மையென்று உணர்ந்ததை அப்படியே அவனிடம் கூறினார் அம்பலவாணன்.

''சமூகத்தின் தீமைகளான பேராசை, திருட்டு, குறுக்கு வழிப் பணக் கொள்ளை இவைகளைப் பற்றியெல்லாம் எழுதுகிறீர்களே, அது சம்பந்தமான இன்னும் சில விஷயங்களை உங்களிடம் சொல்

விப் போகலாமென்று தான் வந்தேன்'' என்றான் ரத்தினம்.

அம்பலவாணன் தலைநிமிர்ந்து உட்கார்ந்தார். சமூக வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளையும் கூடியவரையில் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை அவருக்கு உண்டு.

''இலக்கிய எழுத்தாளர்கள் என்ன நோக்கத்தோடு எழுதுகிறார்கள்?'' — என்று அவரிடமே கேட்டான் ரத்தினம்.

''எழுதுகிறவர்களில் பலவிதம்உண்டு. ஒருவரே பலவிதமாகவும் எழுதுவது உண்டு'' என்றார் அவர். ''வாழ்க்கையின் இன்பத்தைக் கண்டு நாம் குயிலாகக் கூவுவோம்; ஆனந்தமாகப் பாடுவோம். துன்பத்தைக் கண்டு துடித்தெழுவோம்; அல்லது கதறி அழுவோம். சமூகத் திருடர்களைக் கண்டு விட்டால் காவல் நாய்களைப் போல் கோபத்தோடு குரைத்துச் சமூகத்துக்கு விழிப்பூட்டுவோம். மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டுப் பேனா முனையைத் தீமையைக் குத்திக் கிழிக்கும் கொடு வாளாகப் பயன் படுத்தவும் செய்வோம்!— உங்களுக்குத் தெரியாததல்லவே? நீங்களும் ஒரு நாடக ஆசிரியர் தானே?''

''இத்தனை ஆண்டுகளாக நாடு, மக்கள், சமூகம் என்று நினைத்துக்கொண்டு தொல்லைப்படும் நீங்கள் உங்கள் சொந்த வாழ்க்கையைக் கவனித்துக் கொள்ள மறந்து விட்டீர்களே!''

''ஊருக்கும் உலகத்துக்கும் வாழச் சொல்லிக் கொடுத்து விட்டு, நம் வாழ்க்கையை மறப்பது தானே நம் வழக்கம்? நம்முடைய வறுமைதானே நமக்குரிய பெருமை?''

ரத்தினத்துக்கு இப்போது அவர்மேல் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. அவரோ கலைந்து கிடந்த கிராப்புத் தலையைச் சீவிக்கூட விட்டுக் கொள்ளாமல் காட்டிலிருந்து பிடித்து வந்த சிங்கக் குட்டிபோல் காட்சியளித்தார். அவரைச் சுற்றிலும் அறையிலிருந்த சாமான்கள் அவரது ஏழ்மையை ஒளிவு மறைவின்றிப் பறைசாற்றிக் கொண்டிருந்தன.

''நீங்கள் பாட்டிற்கு எப்போதும் அறைக்குள்ளிருந்து எழுதிக் கொண்டே இருங்கள். எழுத்தைத் திருடி இன்னொருவன் பெயரும் புகழும் வாங்கிக்கொண்டு காரும் பங்களாவுமாக உலகத்தைஏமாற்றிக் கொண்டே இருக்கட்டும். —உங்கள் சொத்து பறிபோவதைப் பற்றிக்கவலைப் படாமல், சமூகத்துக்காக வரிந்து கட்டிக் கொண்டு நீங்கள் எழுதித் தள்ளுங்கள்!''

''என்ன? என்ன?'' — திடுக்கிட்டார் அம்பலவாணன்.

''திரையுலகத் தில்லையின் பெயரில் அம்பலத்தின் கதை அம்பலத்துக்கு வரப் போகிறது. உங்கள் சொத்தை நீங்கள் பாதுகாத்துக் கொள்ளப் பாருங்கள். அவ்வளவுதான் நான் உங்களுக்குச் சொல்ல முடியும்.''



ரத்தினம் எழுந்து வெளியில் போகப் பார்த்தான். எழுத்தாளர் அவனைப் போக விடவில்லை.


''திரையுலகில் நல்லவர்கள் பலர் இருக்கிறார்களே! பிற எழுத்தாளர்களுடைய கதைகளை இப்போதெல்லாம் உரிமை கேட்டு வாங்கிப் படம் எடுக்கிறார்களே? என்னுடைய கதைகளையும், மற்றவர்களுடைய கதைகளையும் சிலர் வாங்கிக் கொண்டிருக்கிறார்களே?....தில்லையப்பன் கூட என் கதை ஒன்றைக் குறிப்பிட்டு அதைத் தாம் எடுக்க விரும்பியதாகக் கூறினாரே? அவரைப் போய்....''

எழுத்தாளர் பதைபதைத்தார்; ரத்தினம் சிரித்தான்.

''கொல்லர் தெருவில் ஊசி திருடி, கொல்லர் தெருவிலேயே ஊசி விற்கும் துணிகரத் திருட்டுப் பேர்வழி அவர். உங்களுடைய அபிமானத்தைப் பெற்றுக் கொள்வதற்காக முதலில் உங்களை அப்படிக் குளிப்பாட்டி வைத்தார். உங்களுடைய மற்றொரு 'ஒத்துவராத கதை'யை இப்போது ஒத்து வரச் செய்து கொண்டிருக்கிறார்!.. மிக மிக முன் யோசனையோடு, நாளைக்கு ஏதும் தொல்லைகள் வந்தால் எப்படித் தப்புவது என்பதற்கெல்லாம் திட்டங்கள் போட்டு வைத்துக் கொண்டு காரியத்தில் இறங்கியிருக்கிறார்!''

அம்பலவாணனின் தலை அந்தரத்தில் சுழன்றது.

உங்கள் கதைகளில் ''நீங்கள் எழுதவில்லையா?-எல்லாம் குறுக்கு வழியில் திடீரென்றுபொருளும் புகழும் குவித்து,பெரும் புள்ளி ஆகவேண்டுமென்ற பேராசைதான்.கேட்டால், வேறு ஏதேதோ கதைகளிலிருந்து எடுத்த





தாகச் சொல்லி, கேட்பவர்களை நம்ப வைக்கப் போகிறாராம். நீங்களே மீறிக் கேட்டால் உங்களுக்கே திருட்டுப் பட்டம் கட்டப் போகிறாராம்! எல்லா விஷயங்களையும் ஒரு வகையாக அலசிப் பார்த்து விட்டுத் தான் பகற்கொள்ளையில் இறங்கி யிருக்கிறார்.''

''எனக்குத் திருட்டுப் பட்டமா?'' அம்பலவாணனின் முகம் சிவந்தது; கண்களில் இரத்தம் கட்டியது. ''நீங்கள் சொல்வதெல்லாம் உண்மை தானா ரத்தினம்...?''

''உங்கள் எழுத்தின் மேல் சத்தியம்!'' என்று, அவர் எழுதிக் கொண்டிருந்த எழுத்துக்களின் மீது அடித்தான் ரத்தினம்.

அவ்வளவுதான்; சத்தியத்தின் ஆவேசம் அவருடைய அங்கத்தின் நாடி நரம்புகளிலெல்லாம் பரவி அவரை ஆட்கொண்டு விட்டது. அவருடைய கண்களில் கண்ணீர்த் துளிகள் பொங்கின. பாரதியின் வரிகளை அவர் கணீரென்று முழங்கினார்:

"எழுதுகோல் தெய்வம்.—இந்த
எழுத்தும் தெய்வம்!"

"தெய்வமே! என் எழுத்தில் நீ இருப்பது உண்மையானால், என்னை நீ ஆட்டிப் படைத்து உன்னுடைய அடிமையாக்கிக் கொண்டது உண்மையானால், உன்னைக் காப்பாற்றிக் கொள்! நான் வலுவிழந்தவன்; தங்களையும் தங்கள் உழைப்பையும் காப்பாற்றிக் கொள்ள வகை தெரியாத இலக்கியக் கூட்டத்தைச் சேர்ந்தவன். என்னிடம் உன்னருளைத் தவிர வேறு எதுவுமே இல்லை..என் எழுத்தில் நீ இருப்பது உண்மையானால் உன்னை நீயே காப்பாற்றிக் கொள்! நீ சின்னஞ் சிறிய நெருப்புத் துண்டு. மனித குலத்தின் துன்பங்களைச் சுட்டெரிக்க என்னுள்ளே புகுந்த மாபெரும் சக்தி நீ! உனக்கே துன்பம் வருகிறதென்றால் — நான் என்ன செய்ய முடியும்? நெருப்பையே விழுங்கப் பார்ப்பவர்களிடமுள்ள தீமைகளை நீ சுட்டுப் பொசுக்கு! அவர்களுடைய பஞ்சமா பாதகச் செயல்களை அவர்களிடமிருந்து அழித்து விட்டு, அவர்களையும் மனிதாபிமானமுள்ள மனிதர்களாக மாற்று! — தெய்வமே, நீ இருக்கிறாயா? நீ இருப்பது மெய்தானா?"

ரத்தினம் அதிர்ச்சியுற்றுத் திகைப்படைந்தான். அப்போது அவனுடைய நாடகத் திருட்டால் அவனுக்கேற்பட்ட சொந்த அனுபவமும் சேர்ந்து கொண்டது. பாதிக்கப்பட்டவர்களின் வயிறு பற்றி எரியும் துன்பக் காட்சி எவ்வளவு கொடுமையானது? 'ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்' என்பது உண்மைதானா?

"அண்ணா! இவ்வளவு துன்பம் நேர்ந்த போதும்கூட, நீங்கள் அவருடைய நெஞ்சில் உள்ள தீமையைத்தான் சுட்டெரிக்கச் சொல்லுகிறீர்களே தவிர, அவருக்கு ஒரு தீங்கும் நினைக்கவில்லையே?" என்று அவருடைய கரங்களைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

"நான் மனிதர்களுடைய மனிதத் தன்மையில் அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளவன். மனிதர்களுக்கு நான் தீமை நினைப்பதே இல்லை. அவர்களிடமுள்ள தீமையைத்தான் சாடுகிறேன். அவர்களும் வாழட்டும்; மற்றவர்களும் வாழ வழி விடட்டும்! இப்போது கூட அவருடைய நல்ல எண்ணத்தில் இன்னும் நான் நம்பிக்கை இழக்கவில்லை. நீங்கள் போய் இந்தத் துரோகச் செயல் வேண்டாமென்று அவரிடம் சொல்லுங்கள்."

"நான் போக முடியாது; நான் இப்போது அவரிடம் வேலை பார்க்கவில்லை" என்றான் ரத்தினம். "நீங்கள் போய்ச் சொன்னாலும் அவரைத் தடுக்க முடியாது."

"நான் இன்னும் நம்பிக்கை இழக்கவில்லை. பத்திரிகைக்கு இந்தத் தீச் செயலைக் கண்டித்துநேரடியாக எழுதுகிறேன். அதை அவர் படித்துப் பார்த்துத் திருந்துவார்" என்றார் அம்பலவாணன்.

மனிதர்களின் நல்ல எண்ணத்தில் அந்த அப்பாவி மனிதருக்கு இருந்த நம்பிக்கையை நினைத்து ஏங்கிக் கொண்டே அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டான் ரத்தினம். 'ஏற்கனவே பல முறைகள் அவர் எழுதிவிட்டார்; இப்போதும் எழுதுவார் திருந்தக் கூடிய மனச்சாட்சி உள்ளவர்களுக் கல்லவோ எழுத்துப் பயன் தரும்?'

"எழுதுகோல் தெய்வம்—இந்த
எழுத்தும் தெய்வம்!"

இதை முணுமுணுத்துக் கொண்டே நடந்தான் ரத்தினம்.

அத்தியாயம் நாற்பத்து நான்கு

பாவமும் பழியும்

முருகையன் தன் கால்களில் விழுந்து பற்றிக் கொண்ட பெட்டிக் கடை நடேசனைச் சமாதானப்படுத்தி மெதுவாக அழைத்துக் கொண்டு சென்றான். தோட்டத்தில் பங்களாவின் வெளித் தாழ்வாரத்தின் ஓரமாகக் கிடந்த நாற்காலிகளில் இருவரும் உட்கார்ந்தார்கள். நடேசனுக்கு நாற்காலியில் உட்காருவதற்கு மனமும் இல்லை; தெம்பும் இல்லை. இருந்தாலும் முருகையன் வற்புறுத்தியதால் பயந்து கொண்டே ஒரு விளிம்பில் உட்கார்ந்தான்.

"பதறாமல் நடந்த விஷயத்தைச் சொல்லுங்கள்; என்னால் முடிந்த உதவியைச் செய்கிறேன்" என்றான் முருகையன். என்றாலும் நடேசனால் பதறாமல் இருக்க முடியவில்லை. அவனுடைய தேகம் முழுவதும் வெட வெட வென்று நடுங்கியது. வேங்கைப் புலியின் பாய்ச்சலுக்கு அஞ்சி ஓடி வந்து, ஒரு மறைவில்

பருவ மழையின் பரவசம்!



தாங்காத உஷ்ணம்கொண்டு தத்தளிக்கும்
பூமிக்கு மழையின் முதல் துளிகளால்
துவண்டுவரும் இன்பம்தான் என்னே!
கொத்தளிக்கும் உள்ளத்திலே குதூகல
மளிக்கும் மழையை இன்பமுடன்
வரவேற்பது இயற்கைதானே ? அதேபோல்
லக்மே டால்கம் பவுடர் உபயோகிக்கும்போது
பரவசப்படுத்தும் நறுமணத்துடன்
விளங்கி, புதுமையுடன் குளுமையடைவீர்கள்.
காலை ஸ்நானத்திற்குப் பின் லக்மே
டால்கம் பவுடர் உபயோகித்து, நாள்
முழுவதும் நீடித்த புதுமலர்ச்சியுடன்
புளகாங்கிதமடையவேண்டுமென
நிச்சயம் செய்துகொள்ளுங்கள்.

லக்மே

அலங்காரத்தை ஆடம்பரமாக
ஆரம்பிக்கிறது

லக்மே ஓர் டாடா ஸ்தாபனம்

LKY-137 TAM

நின்று நடுங்கும் மான் குட்டி போல் அவன் காணப்பட்டான்.

''முனியாண்டியோட வீட்டுக்காரி வேலம்மா செத்துப் போனதுக்கு நான் தான் காரணம்னு என் மேலே பழியைப் போடுவாங்க போலிருக்கு. என் பிள்ளை குட்டிகள் மேல் ஆணையாகச் சொல்றேன்; நான் ஒரு பாவமும் செய்யலிங்க........''

நடேசனின் பேச்சு முருகையனுக்கு வேதனையைத் தந்தது. வேலம்மாளின் மரணத்துக்கும் நடேசனுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்? பேயறைந்தது போல் வெளுத்துப் போயிருந்த நடேசனின் முகத்தை முருகேசன் பரிதாபத்தோடு கவனித்தான்.

''வேலம்மா வழக்கமா என்னோட கடையிலேதான் சாமான் வாங்கிட்டுப் போகும். காசுக்கும் கொடுப்பேன்; கடனுக்கும் கொடுப்பேன். நான் கொடுத்த சாமான்களிலே விஷம் கலந்திருக்கும்னு சந்தேகப்பட்டு, என்னோட கடைச் சாமான்களை வந்து அதிகாரிகள் எடுத்துக்கிட்டுப் போயிருக்காங்க. மஞ்சள் தூளைப் பத்தித்தான் தூண்டித் துருவிக் கேட்டாங்க.''

முருகையனின் நெற்றி சுருக்கம் கண்டது. அவன் உற்றுக் கேட்டான்.


''என்னைப் புடிச்சிட்டுப் போய் ஜெயிலிலே தள்ளப்போறாங்கன்னு தெருவிலே பேசிக்கிறாங்க. என்னோட வீட்டுக்காரி இதைக் கேட்டவுடனே மயக்கம் போட்டு விழுந்திட்டா.''

''நீ அந்தச் சாமான்களை எங்கிருந்து வாங்கினாய்? வந்தவர்கள் அந்த விஷயத்தை உன்னிடம் கேட்டார்களா?''

''அவர்களும் கேட்கலே; நானும் சொல்லலே'' என்றான் நடேசன். ''அதை எப்படிங்க நான் அவுங்ககிட்டே சொல்வேன்? முனியாண்டி சொன்னதிலிருந்து நான் வாடிக்கையா ஐயாவோட கடையிலேதான் வாங்கிக்கிட்டிருக்கேன்.''

துணுக்குற்றான் முருகையன். முன்பொரு நாள் தங்களுடைய கடைக்கு நடேசன் சாமான்கள் வாங்க வந்த நினைவு வந்தது. தன்னிடமிருந்த அன்பின் காரணமாக, வெகு தூரத்திலிருந்த அந்தக் கடையைத் தேடி வந்து, அவன் கொள்முதல் செய்து கொண்டிருந்தான். அவனுக்கா இந்தக் கதி வர வேண்டும்?

''சாமி சத்தியமாய் உங்களோட கடையிலே இருக்கிறவங்களையும் குற்றம் சொல்ல முடியாது. ஒவ்வொரு ஊரிலேயும் எத்தனையோ கடைகள் இருக்கு. அவுங்க யாரையுமே குற்றம் சொல்லக்



கூடாதுங்க. கிடைக்கிற சாமான்களை வாங்கி வச்சுக் கொஞ்சம் லாபம் சேர்த்து அவுங்க விற்கிறதினாலேதான், நினைச்சவுடனே எல்லாரும் காசு கொடுத்து எதையும் வாங்க முடியுது....''

''நீங்களும் தவறு செய்யவில்லை; நாங்களும் செய்யவில்லை. பிறகு வேறு யார்தான் செய்திருப்பார்கள்? வந்த அதிகாரிகள் தக்க காரணம் இருப்பதால் தானே வந்திருப்பார்கள்? எதையும் பரிசோதித்துச் சீர்தூக்காமல் அவர்கள் வந்திருக்க மாட்டார்கள்! மக்களுடைய ஆரோக்கியத்தையும் உயிரையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறதல்லவா?''

''அண்ணா! இந்த மாதிரி விஷயங்களுக்குப் பொறுப்பு எங்கேயோ வேறே இடத்திலே இருக்கணும். வெளி நாட்டுக்கு அனுப்புகிற பொருள்களில் கூட மட்ட ரகச் சரக்குகளைக் கலந்து வச்சு நம்ப நாட்டோட கௌரவத்தையே கெடுக்கறாங்க....எங்கேயாவது மொத்தமாய்ச் சரக்கு தயார் பண்ணுறாங்க பாருங்க, அவர்களிலே சில பேர் தான் பழி பாவத்துக்கு அஞ்சாமல் இப்படியெல்லாம் செய்யறாங்க. ஆனால் அந்தச் சில பேருடைய பேராசைக்கு ஒரு பாவமும் அறியாத பல பேர் பலியாக வேண்டியிருக்கிறது. — பழி ஒரு பக்கம்; பாவம் என் பக்கம்!''

''நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம்'' என்று தைரியம் கூறினான் முருகையன். ''சட்டம் நியாயத்தையும் தர்மத்தையும் காப்பாற்றுவதற்காகத் தான் போடப்பட்டிருக்கிறது. குற்றம் செய்யாதவர்களைக் குற்றவாளிகளாக்குவதும் குற்றவாளிகளைத் தப்ப விடுவதும் அதன் நோக்கமல்ல. நீ எதற்கும் பயப்பட வேண்டாம்.''

''எப்படிங்க நான் பயப்படாமல் இருக்கிறது?'' என்று நாத் தழுதழுக்கக் கேட்டான் நடேசன். ''தினசரி, ஏதாவது வியாபாரம் நடந்தால் தான் என் வீட்டிலே அடுப்பு எரியும். இனிமே யார் வந்து என் கடையிலே சாமான் வாங்குவாங்க? எப்படி நான் பிழைப்பு நடத்தறது? ...சட்டத்தை எட்டிப் புடிக்கிறதுக்கு என்னைப் போல ஏழை எளியவங்களாலே முடியுங்களா? கையிலே காசில்லாத எங்களுக்கெல்லாம் எதற்காகக் கடவுள் இவ்வளவு சோதனைகளைக் கொடுக்கிறார்? நான் மனசார யாருக்கும் ஒரு கெடுதலும் செய்யலீங்களே!''

நடேசன் எழுப்பிய கேள்விகள் முருகையனின் மனத்தில் கேள்விகளாகவே நின்று விட்டன. அவைகளுக்குப் பதிலளிக்க வேண்டுமென்றால் இன்றையச் சமுதாய நிலையின் ஆணி வேருக்கே தேடிச் செல்ல வேண்டும். அங்குமட்டும் நடேசனின் கேள்விகளுக்கு எப்படி விடைகள் கிடைக்கப் போகின்றன? ஏழை எளியவர்கள், நடுத்தர வர்க்கத்தினர், அன்றாட உழைப்பால் கூலி பெற்று வாழ்வோர், எதையுமே குறிப்பாக எதிர்பார்க்க முடியாதவர்கள் இவர்களுக்கு என்ன பாதுகாப்பு? இப்போது நடேசன் செய்யாத குற்றத்திலிருந்து அவனைத் தப்புவிப்பது எப்படி.....?

''நீ பயமில்லாமல் வீட்டுக்குப் போ. நான் சில விஷயங்களைக் கவனித்து விட்டு உன்னை வந்து பார்க்கிறேன். அதற்குள் ஒன்றும் நடந்து விடாது.''


நடேசன் சிறிது ஆறுதலுடன் அங்கிருந்து கிளம்பினான். அவனும் முருகையனும் பேசிக் கொண்டிருந்த விஷயங்களை ஜன்னலுக்குப் பின்னாலிருந்து மாணிக்கம் உற்றுக் கேட்டதை அவர்கள் இருவருமே கவனிக்கவில்லை. மாணிக்கம் அவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்து விட்டுச் சந்தடியில்லாமல் தம்முடைய அறைக்குள் புகுந்துகொண்டார். கதவைத் தாளிட்டுக் கொண்டு தொலைபேசியில் குமரவேலுடன் ஏதேதோ காரசாரமாகப் பேசினார். சில நிமிஷங்களுக்குச் சூடான சொற்கள் தொலைபேசி வழியே பறந்தன. பிறகு முகத்தின் வேர்வையை அழுத்தித் துடைத்துக் கொண்டு தாழ்வாரத்துக்கு வந்து முருகையனைத் தேடினார். முருகையனை அங்கு காணவில்லை. அவர் நெஞ்சு 'திக்' கென்று ஒரு கணம் நின்று விட்டது.

மீண்டும் அறைக்குள் ஓடித் தம்முடைய கடைக்குத் தொலைபேசியில் அவசரமாகப் பேசினார்.

முருகையன் கடைக்குச் சென்ற போது அவன் தேடிய பொருள் எதுவும் அங்கு இல்லை. எல்லோரும் அவனை ஒரு விதமாகப் பார்த்தார்கள். அவர்களுடைய பார்வையின் பொருளைப் புரிந்து கொண்ட முருகையன், ''நாம் ஒரு தவறும் செய்யாத போது நாம் ஏன் உண்மையை மறைக்க வேண்டும்?'' என்றான்.

''உண்மையை நாம் வெளியிட்டால் ஒரு பாவமும் அறியாத ஓர் ஏழை நிரபராதியை நாம் காப்பாற்ற முடியும்; அதற்காகத்தான் ஓடி வந்தேன்'' என்றும் கூறினான்.

அவர்களில் யாரும் அவனுக்குப் பதில் அளிக்கவில்லை. எல்லோரும் ஒன்றுகூடி மௌனம் சாதித்தார்கள். (தொடரும்)



இரவு பத்து மணிக்கு மேல் இருக்கும்.

வாயிற்கதவைத் தொடர்ந்து தட்டும் சத்தம் கேட்டது. அலுவலகப் பார்ட்டிக்குத் தயார் செய்து கொண்டிருந்த நான் அலுத்துக் கொண்டே நாற்காலியை விட்டு எழுந்தேன். சீதாவும் குழந்தையும் கூட இருந்தால் படிப்பில் மனத்தைச் செலுத்த முடியாது என அவர்களை அனுப்பி விட்டுத் தனியாக இருக்கிறேன். இந்த அகால வேளையில் எந்த நண்பன் இப்படித் தொல்லை கொடுக்கிறான்? முகத்தில் அடித்தாற்போல் ஏதாவது சொல்லி அனுப்பி விட வேண்டியதுதான் என்று எண்ணியபடி தாளை நீக்கினேன்.

கதவைத் திறந்தவனைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தாள் ஒருத்தி. ஓடி வந்திருக்கிறாள் என்பது அவளுடைய பெருமூச்சிலிருந்தே தெரிந்தது. அவள் எதிர்பாராமல் வீட்டுக்குள் நுழைந்தது எனக்குக் கொடுத்த அதிர்ச்சியில் யாரென்று கேட்கக்கூட எனக்கு நா எழவில்லை.

''கதவை மூடுங்கள்!....'' என்று பறந்தாள் அவள்.

''ஏன்?....''

''மூடுங்களேன் .... தயவு..செய்து.'' கெஞ்சினாள் அவள்.

கதவை யந்திரம் போல் தாளிட்டவன் அவள் முகத்தைப் பார்த்தேன். அழகி என்று கூற முடியா விட்டாலும் அவலட்சணம் இல்லை. கைகளில் ஒரு ஜோடி வளையும் 'ரிஸ்ட்—வாட்சு'ம் மின்னின. கையிலிருந்து ஒரு குடை ஊசலாடியது. நெற்றியில் துளிர்த்திருந்த வியர்வையில் திலகம் கலைந்திருந்தது. தன் சிறு கைக் குட்டையால் நெற்றியை அடிக்கடி ஒத்திக் கொண்டாள்.

''நீங்கள் யார்?....'' என்று கேட்டேன் நான் தைரியமாக!

இரவு வேளையில் ஓர் இளம் வயதுப் பெண் வீட்டுக்குள் நுழைந்து என்னையும் அதிகாரம் செய்தால், மனத்தில் தான் எத்தனை சந்தேகங்களெல்லாம் தோன்றுகின்றன?

திறந்திருந்த ஜன்னல் கதவை முக்கால் பாகம் மூடிவிட்டு, ''அவன் போய் விட்டானா, பாருங்கள்!....'' என்று பயந்த குரலில் சொன்னாள்.

நான் எட்டிப் பார்த்தேன். நல்ல உயரமும் ஆகிருதியுமுடைய ஒருவன் வீட்டைக் கடந்து போய்க் கொண்டிருந்தான். இருட்டில் அவனுடைய முக - பாவம் எனக்குச் சரியாகப் புலனாக வில்லை. ஒன்று மட்டும் நிச்சயம்; அவனிடத்தில் பகைத்துக் கொண்டால் எலும்புகளை யெல்லாம் சூரணமாக்கக் கூடிய வலிமை அவன் நடையிலேயே எனக்குத் தெரிந்தது. அப்போதே இந்த அபலையின் தவிப்பும் எனக்குப் புரிந்தது.

''அவன் தாண்டிப் போய் விட்டான். யார் அது?...''என்றுவினவினேன் நான்.

''நான் என்ன கண்டேன்?....'' என்றாள் அவள்.

''நன்றாக இருக்கிறதே ..... இந்த அகாலத்தில்.....''

''இரையாதீர்கள். நான் டவுனில் வேலை பார்க்கிறேன்..... ஆபீஸிலிருந்து வரும் போது, பல்லாவரம் ஸ்டேஷனில் இறங்கி.......''


''ஆபீஸா?... இவ்வளவு நேரம் கழித்தா?....''

''ஆமாம் .... மானேஜர் மாற்றிப் போகிறார். 'மாடர்ன் கபே'யில் 'டின்

னர்'... முடிந்து கிளம்புவதற்கு ஒன்பது மணிக்கு மேல் ஆகி விட்டது....''

''உம்......''

''என் வீடு காநதி நகரில் இருக்கிறது....''



''ஓஹோ!....''

''பாருங்கள்..இந்த ஆசாமி எழும்பூரிலிருந்து என்னையே பார்த்துக் கொண்டு வருகிறான்; எனக்கு அப்பொழுதே சந்தேகம்...பல்லாவரம் ஸ்டேஷனிலும் என் பின்னால் வரவே ஒரே ஓட்டமாக வந்து உங்கள் வீட்டைத் தட்டினேன்.''

''நான் இறக்கா விட்டால்....''

''உங்களுக்கு என்னைத் தெரியா விட்டாலும் நான் உங்களைப் பார்த்திருக்கிறேன்..இது உங்கள் வீடுதான் என்றும்

பிரபல பல்வைத்திய நிபுணர்கள் நிரூபித்துள்ளனர்

கால்கேட் குளோரோபில்



ஈறுகளை பலப் படுத்து கிறது


வாய் நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது! "ஆல் மோல்லோப்" பரிசோதனைகளில், கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட், வேறெந்த சாதாரண பற்பசையையும்விட மிகத்தீவிரமாக வாய் நாற்றத்தை ஒழிக்கிறது என்பது நிரூபணமாயுள்ளது.

சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது! கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்டை ஒவ்வொரு முறையும் சாப்பிட்டவுடன் தேய்ப்பதால், பற்களை சொத்தையாக்கும் கிருமிகள் அழிகின்றன.

கால்கேட்டின் பிரத்தியேகமான சேர்க்கை முறையைக் கொண்ட குளோரோபில்லின் பூரண பலனை அடையுங்கள்.... கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்ட் அல்லது கால்கேட் குளோரோபில் டூத் பவுடர் வாங்குங்கள்!

கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்டை தினமும் தேய்ப்பதால், தீவிரமான குளோரோபில்லின் பூரண தன்மையை அடைந்து ஈறுகள் உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க ஏதுவாகிறது. உன்னதமான இந்த குளோரோபில் டூத்பேஸ்ட், சிறந்த பற்பசை, பற்பொடி முதலியவை தயாரிப்பதில் மிக்க அனுபவங்கொண்ட உலகிலே மிகப்பெரிய ஸ்தாபனத்தால் தயாரிக்கப்படுகிறது!

வேறு எந்த பற்பசையிலும் இதைவிட அதிக வீரிய குளோரோபில் இல்லை — குழந்தைகள் அதன் பெப்பர்மின்ட் வாசனையை மிகவும் விரும்புகிருர்கள்!



CTPA-G-10 TAM.

எனக்குத் தெரியும். அதனுலதான் தைரியமாகக் கதவைத் தட்டினேன்...''

''அதனுலென்ன.... இப்போது....''

''உங்களுக்குச் சிரமத்தோடு சிரமம். என்னை எப்படியாவது வீட்டில் சேர்த்து...''

அவளையும் அழைத்துக் கொண்டு வெளியே போவது முட்டாள்தனம் அல்லவா?... ஏதோ ஒரு பெண்ணுக்கு இரவு வேளையில் துணை போய் வழியிலே அந்த முரடன் கையிலகப்பட்டு மண்டை உடைந்தால், யார் பொறுப்பு?...இல்லை ஒரு போலீஸ்காரனே பார்த்துச் சந்தேகப் படுகிறுன்.—எக்கச்சக்கமாக ஏதாவது கேட்டுத் தொலைக்கிறுன். அப்புறம் என் நிலைமை என்ன?... நான் மட்டும் தனியாகப் போய் அவள் வீட்டிலிருந்து யாரையாவது அழைத்து வந்தால்....

இந்த யோசனை எனக்குத் தோன்றுமல் நான் கிளம்பியபோது அவளே தடுத்து நிறுத்தி நல்ல வேளையாக எனக்கு ஞாபகப்படுத்திஞள்.

''உன் வீட்டு விலாசம் என்ன?''

''ஐம்பத்திரண்டு, இரண்டாவது குறுக்குத் தெரு....''

பல்லாவரம் ஸ்டேஷனுக்கு வெகு அருகில் என் வீடு...அவள் சொன்ன இடத்துக்குப் போக இரண்டு பர்லாங் நடக்க வேண்டும்.

''யார் இருக்கிறுர்கள், உன் வீட்டில்?....''

''அண்ணு, அப்பா...மத்யாச்சனம் என்று கேளுங்கள்... என் பெயர் மல்லிகா.....''

அவளைத் தனியாக விட்டுப் போகலாமா என்று தயங்கினேன் நான்.

''நீங்கள் வேண்டுமானுல் வீட்டைப் பூட்டிக் கொண்டு போங்கள் ... நான் உள்ளே இருக்கிறேன்....''

''சை!.....என்னை என்ன நினைத்து விட்டாய்?...நீ ஜாக்கிரதையாகத் தாள் போட்டுக் கொண்டு பத்திரமாக இரு... நான் கதவை இடித்தால் கூட ஜன்னல் வழியாகப் பார்த்து விட்டுப் பிறகு கதவைத் திற......''

நான் வீட்டை விட்டு இறங்கி அவள் சொன்ன விலாசத்தை நோக்கி நடந்தேன். இன்னும் இரண்டு பர்லாங் தூரம் நடக்க வேண்டியிருந்தது. பக்கத்திலும் தெரு முனையிலும் அந்த முரடன் தென்படுகிறுஞ என்று பார்த்துக் கொண்டே போனேன்.

இரண்டாவது குறுக்குத் தெருவில் இரவு பதினேரு மணி அளவில் ஐம்பத்திரண்டாம் நம்பரை எப்படிக் கண்டு பிடிப்பது? பதற்றத்தில் எந்த வரிசை, இடது பக்கமா, வலது பக்கமா என்று



சென்னை மவுண்ட் ரோட் குழந்தைகள் அரங்கில் செல்வி சுதந்திரா, செல்வி சித்ரகலா ஆகியோரின் பரத நாட்டிய அரங்கேற்றம் ஏப்ரல் 23ந் தேதி வெகு விமரிசையாக நடைபெற்றது.

கூடக் கேட்கவில்லை. தைரியமாகக் கதவைத் திறந்து உள்ளே போய் எந்த வீட்டிலும் கேட்க எனக்குத் துணிவில்லை. அந்தத் தெருவில் வளர்க்கப்படும் நாய்களை முன்பு நான் பார்த்திருக்கிறேன். ஒன்று குரல் கொடுத்தால் போதும்; இருபது என் மேல் பாய்ந்து விடும்.

அந்தத் தெருவின் குறுக்கே இரண்டு முறை நடந்து விட்டேன். ஐம்பத்திரண்டாம் நம்பர் வீடு எது? ..தெருவில் உள்ள வீடுகளே மொத்தம் இருபத்தைந்துக்கு மேல் தேருது. நம் நகர சபையில் வீட்டு எண் கொடுத்திருப்பது எந்த நியதியில் என்பது அவர்களுக்கே புரியாதாகையால் ஒவ்வொரு வீட்டையும் மங்கிய நிலவொளியில் பரிசீலனை செய்தேன். 'லக்ஷ்மி விலாஸ்', 'லேக் வ்யூ', 'ரோஜா மொட்டு', 'ஆப்பிள் வில்லா' என்ற பெயர்கள் தான் தெரிந்தனவே தவிர எண் எதையுமே காணேம்.

அலுத்துச் சலித்து நான் வீடு திரும்ப நினைத்தேன். காத்திருக்கும் பெண்ணுக்கு என்ன பதில் சொல்வேன்?.... பகலானுலும் பரவாயில்லையே...இரவு வேளையாயிற்றே .... இளம் குமரியாகவும் இருக்கிறுள்.. இப்படியொரு இக்கட்டமான நிலையில் என்ன செய்வது என்று எந்தக் கலாசாலையிலும் போதிக்கவில்லை!

வெளிச்சத்தை மழையாகப் பொழிந்து கொண்டு ஒரு கார் அந்தத் தெருவிலே திரும்பி ஒரு வீட்டு வாயிலில் நின்றது.

ஆபத்பாந்தவன் போல் காரிலிருந்து இறங்கிய நபரிடத்தில் விசாரித்தேன்.

அவர் சொன்னதன் சாரம்; மத்யார்ச்சுனத்துக்கு எழும்பூரில் ரயிலேற வேண்டும்: மல்லிகையோ ஜவந்தியோ பூக்கடையில் கேட்கலாம்.... அவருக்குத் தெரியாத நபர் அந்தத் தெருவில் எவரும் கிடையாது. அப்படியும் அந்தத் தெருவில் மொத்தம் இருபத்தி மூன்றே வீடுகள்தானாம்!

அப்படியானால்?... விலாசம் தவறா?. இல்லை... இரண்டாவது குறுக்குத் தெருவா?.... மூன்றாவது குறுக்குத் தெருவா... நான் சரியாகக் கேட்டுக் கொண்டேனா? அங்கு நிற்பதினால் எந்த வித லாபமும் இல்லை என்று மனத்தில் படவே, வீடு திரும்பினேன்.

பின்னால் காலடிச் சத்தம் கேட்டது: மெதுவாகத் தலையைத் திரும்பிப் பார்த்தேன்....ஐயையோ!... அந்த முரடன் அல்லவா வந்து கொண்டிருக்கிறான். என்னுடனேயே அவனும் வீட்டுக்குள் நுழைந்து விட்டால் அப்புறம் அந்தப் பெண்ணின் கதி... துணைக்கு அழைக்கப் பக்கத்தில் ஒரு வீடுகூடக் கிடையாதே. பொட்டலில் போய் வீட்டைக் கட்டிக் கொண்டால் அவஸ்தைதான்!...

என் நடை தானாகத் துரிதமாகியது. பின்னால் வந்தவன் அதைக் கவனிக்காமல் நிதானமாகவே நடந்தான். துரித நடையை ஓட்டமாக்கி என் தெருவினுள் புகுந்து வீட்டுக்குள் நுழைந்தேன்.

வீட்டில் விளக்கு எரியவில்லை. ஜன்னல் புறம் சென்று கூப்பிட்டும் பதில் இல்லை. ஒரு வேளை உறங்கி விட்டாளோ என்று எண்ணிக் கதவைத் தட்டக் கையைக் கொண்டு போனேன். கதவு தானாகத் திறந்து கொண்டது.

விளக்கைப் போட்டுப் பால் போலப் பிரகாசம் பரவியவுடன் அவளைத் தேடினேன். அவள் எங்குமில்லை. எனக்கு ஓர் அச்சம் ஏற்பட்டது. மேஜை டிராயரைத் திறந்தேன். நினைத்தபடி என் 'மணி பர்ஸ்' அங்கு இல்லை.

வயிற்றின் அடியில் புளியைக் கரைத்தது. பீரோவை நெருங்கிப் பார்த்தேன். நல்லவேளையாக அது திறக்கப்படவில்லை. திறக்க முயன்ற 'தடங்கள்' மட்டும் தெரிந்தன. என்னுடைய நல்ல காலம், கொத்துச் சாவி, தலையணையின் அடியில் வைத்தது நழுவிக் கட்டிலின் அடியில் ஓர் இருட்டு மூலையில் விழுந்திருந்தது.

சாதாரணமாக 'மணிபர்ஸ்' திருட்டுப் போனால் கவலைப்பட மாட்டேன். ஒரு ரூபாய்க்கு மேல் அது காண்பது மாதத்தில் ஒரு நாள் தான். ஆனால்

அன்று சம்பளம் வாங்கிய முதல் தேதி யாக இருந்தது. நிகர நஷ்டம் இரு நூற்றிப் பத்து ரூபாயும் தொண்ணூற்றி நாலு நயா பைசாவும். அந்த மாதம் முழுதும் ஓட்ட வேண்டுமானால் இந்தப் பணம் இல்லாவிட்டால் முடியுமா? யாரிடம் போய்க் கடன் கேட்பது? நண்பர்கள் எல்லோரும் நம்மையே கேட்கும் நிலையிலிருக்கும்போது யாரை அணுகுவது?

இப்போது என்ன செய்ய முடியும்? திருடனுக்குத் தேள் கொட்டிய நிலையில் இருந்தேன். முன்பின் தெரியாதவனை, வீட்டில் வைத்து வெளியே போனேன் என்று சொன்னால், சின்னக் குழந்தை கூடச் சிரிக்கும்.

மனத்தில் கனத்த சுமைக்குப் பதில் கூற இயலாமல் வாயிற்கதவைத் தாள் போட்டுச் சென்றேன். அந்த 'முரடன்' அப்போது தான் அந்த வழியாகப் போய்க் கொண்டிருந்தான்.

திரும்பிப் பார்த்த அவர் என் கண் களில் தெரிந்த சோகத்தைக் கண்டு, ''என்ன தேடுகிறீர்கள்?....'' என்று விசாரித்தார்.

என் குறையைப் பெருங்குரலில் அழுது வைத்தேன். யாரிடமாவது சொன் னால்தான் மனம் கொஞ்சமாவது சமா தானப்படும்.

''அடடா....மறுபடியும் தப்பி விட் டானா?'' என்று அங்கலாய்த்தார் அவர். அவர் பதில் என்னைத் தூக்கி வாரிப் போடச் செய்தது.

''உமக்கு அவனைத் தெரியுமா?'' என்று வியப்புடன் கேட்டேன்.

''போன வாரம் பெரம்பூரில் என் வீட்டில் இதே நாடகம் தான் ஆடினான். இன்று எழும்பூரில் என் கண்ணில்படவே நான் பின்தொடர்ந்தேன்...''

எனக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. ''எங்கே ஸார் இந்த இருட்டு வேளையில் போக முடியும்?. வாருங்கள், தேடலாம்!'' என்றேன்.

எனக்குப் பதில் சொல்வது போல் தாம்பரத்துக்குச் செல்லும் கடைசி ரயில் பல்லாவரம் ஸ்டேஷனில் கூவியது.

இதுவரை என் பொருள்கள் திரும்ப வில்லை. அந்த அபலையை நான் சந்திக்க வில்லை.

❖ ❖ ❖

நம்புகிறீர்களா? கிதாவாவது நம்ப வேண்டும் என்று பகவானை வேண்டிக் கொண்டிருக்கிறேன்! இல்லாவிட்டால், பாழும் நண்பன் பேச்சை நம்பிச் சம்ப ளப் பணம் முழுவதும் கிண்டி மைதா னத்தில் தொலைத்ததை எப்படிச் சொல்லி அவளிடம் சமாளிக்க முடியும்?



காணமல்போன கடிதங்கள்



கொக்கி

சென்னை போலீசு கமிஷனரு அய்யாவுக்கு எழுதிப் போட்டது :-

வணக்கமுங்க! சென்னைப் பட்டணத்துக்கே இந்த மவுண்டு ரோடு ஒன்றுதான் முக்கியமான ரோடுன்னு சொல்வாங்க. இதிலேதான் நேரு வந்தாலும் யாரு முக்கியமானவங்க வந்தாலும் போயாகணும். இந்த ரோட்டை இம்மாநாளா ரிப்பேருகூடச் செய்யாமப் போட்டிருந்தது. நீங்க கொஞ்சம் முயற்சி எடுத்துக்கிட்டு இப்போ நல்லபடியாச் செய்திட்டீங்க. ரோடு இப்ப பார்க்கிறதுக்கே நல்ல கண்ணாடி போலப் பளபளன்னு இருக்குது. வெள்ளை வெளேருன்னு கோடுங்களும் போட்டு, விதம் விதமாகக் கலர் லைட்டுங்களும் போட்டுட்டீங்க. அங்கங்கே ரோட்டிலே அம்புக் குறிங்க எழுதி வண்டிங்க எப்படித் திரும்பணும்னு போட்டிருக்கிறதும் நல்லாத்தான் இருக்குது. நடுநடுவே டாணுக்காரங்களையும் நிறுத்தியிருக்கிறீங்களே; அவங்க டிரஸ்ஸுகூட முன்னைக்கு இப்போ வெளேர்னு லாண்டிரியிலே போட்டது போலயிருக்குதுன்னு எல்லாரும் பேசிக்கிறாங்க. இதுக்காகவும் சந்தோஷப்படறேங்க. இவ்வளவு அழகான ரோட்டிலே, தள்ளு வண்டி, கட்டை வண்டி இதெல்லாம் ஓடினால் ரோடு பாளாகி விடும், டிராபிக்குக்குத் தடையாய்ப் பூயிடும்னு நீங்க நினைச்சு இந்த வண்டிங்க போகக் கட்டுப்பாடு செய்தீங்களாம். இந்தத் தள்ளு வண்டி விசயம் ஹை கோர்ட்டு வரையில் போய்த் திரும்பி வந்ததாம். ஹை கோர்ட்டிலே தள்ளு வண்டி சமாசாரம் தள்ளிக்கொண்டே போகாமல் சீக்கிரம் ஒரு வழியா முடிஞ்சது குறித்தும் 'சந்தோசப்படுறேங்க. மவுண்டு ரோடிலே ஒரோரு நேரத்திலே தாராளமா தள்ளு வண்டிங்க போவலாம்னு நீங்க சம்மதிச்சதுக்கு நானும் மத்த தள்ளு வண்டிக்காரங்களும் நன்றி செலுத்திக்கிடறோம். ஆனா இந்த விசுவாசம் சர்க்காரு பஸ்ஸுகளுக்கும் அதை ஓட்டுற நிர்வாகிங்களுக்கும் இருக்குமா? மெய்யாலும் இப்ப பட்டினத்திலேயே தள்ளு வண்டியைக் காட்டியும் மெதுவாப் போற பார வண்டி சர்க்காரு பஸ்ஸுதானுங்களே. இது அய்யாவுக்குத் தெரியாத விசயம் இல்லீங்களே !.....

இப்படிக்கு

தள்ளுவண்டி தங்கவேலு.

ஃ ஃ ஃ

கொளுத்தும் வெய்யிலை ஏவி, மக்களை வெளியே தலைகாட்ட வொட்டாது தடுக்கும் சூரியனுக்கு ஒரு 'ஐஸ்கிரீம்' வண்டிக்காரர் எழுதுவது :



இந்தத் தடவை சித்திரை மாதம் ஆரம்பத்திலேயே சென்னையில் வெய்யிலைக் கடுமையாக ஏவி, மக்களை 'ஐஸ் ஐஸ்' என்று கதறும்படி செய்து வருவதற்காக என் மனமார்ந்த வணக்கம். சென்ற வருடத்தைவிட நகரில் இந்தத் தடவை மிக நன்றாக வெயில் கொளுத்த ஆரம்பித்து விட்டது. எங்கும், இதைப் பற்றியே மக்கள் தொண்டை வறளும்படி பேசி வருகிறார்கள்! இதெல்லாம் என் போன்ற ஐஸ் கிரீம் விற்பனையாளர்களின் மீது தங்களுக்குள்ள இரக்கத்தின் பயன்தான் என்று நினைத்தேன். ஆனால் இந்தப் புகழ் தங்களுக்குச்சேராது போலிருக்கிறதே! பஸிபிக் கடலில் அமெரிக்கர்கள் அணுகுண்டுகள் போட்டுச் சோதனை செய்து வருகிறார்களல்லவா? இது மேலேயுள்ள தங்களுக்கும் தெரிந்திருக்கலாம். அந்த அணுகுண்டுச் சோதனைகளின் விளைவாகவே எங்கும் இப்போது வெயில் காலத்துச் சூடு அதிகரித்திருப்பதாகச் சிலர் கூறுகிறார்கள்! இது உண்மையானால் , ஐஸ்கிரீம் வியாபாரிகள் மீது அமெரிக்காவின் இரக்கசித்தத்துக்கு என்ன கைம்மாறு செய்வதென்று தெரியவில்லை. சூரியனுடைய

தங்களுக்கு, நிவேதனமாக எடுத்து வைத்த 'ஐஸ்கிரீம்' கட்டியை, அமெரிக்காவுக்குத்தான் அனுப்பி வைக்க வேண்டும். எங்களுடைய ஐஸ்கிரீம்கள் விற்பனைக்கு அவர்களின் அனுகுண்டு உதவிதான் காரணமென்றால், இந்தத் தடவை எங்களுடைய கோடை கால நன்றியை அவர்களுக்கே தான் தெரிவிக்கப் போகிறோம். இதற்காக எங்கள் மீது தாங்கள் வருத்தப்படக் கூடாதென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு 'ஐஸ்கிரீம்'காரர்

ஃ ஃ ஃ

சென்னை சட்டசபை தி. மு. க. அங்கத்தினர் திரு வி. ஆர். நெடுஞ்செழியனுக்கு ஒரு போசனையாளர் வரைவது :—

சில தினங்களுக்கு முன், சட்ட சபையில், வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருட்களின் விலை விஷம் போன்று ஏறி வருவதைப் பற்றி நீங்கள் பேசி வரும் போது திடீரென்று மயக்கம் போட்டு விழ்ந்து விட்டது குறித்து மிக வருந்தினேன். ஏதாவது மருந்து வாங்கி அனுப்பலாமென்று நினைத்தால், மருந்து விலைகளும் கிட்டத்தில் நெருங்க முடியவில்லை. எல்லாமே மயக்க மருந்துகளாக விஷமென விலை ஏறி விற்கின்றன! ஒரு டம்ளர் தண்ணீரை அருந்தி, நிலைமையைச் சமாளித்துக் கொள்ளுங்கள் என்று சொல்வதைத் தவிர வேறு என்ன நான் சொல்லப் போகிறேன்? அல்லது சொல்ல முடியும்?

பண்டங்களின் யானை, குதிரை விலைகளைப் பற்றி நீங்களும் சரி, மற்ற எதிர்க் கட்சிக்காரர்களும் சரி பொது அரங்குகளிலும், மேடை மன்றங்களிலும் பேச முற்படும் போது, கீழே விழ்ந்தால், பிடித்துக் கொள்ள யாராவது ஒருவரைத் தயாராக நிறுத்தி வைத்துக் கொள்வது நல்லதென்று தோன்றுகிறது. இந்த யோசனை, ஆளும் கட்சிக்காரர்களுக்கு அல்ல. அவர்கள்தான், விலைவாசிகள் உயர்வைப் பற்றி அவ்வளவாகத் தங்கள் மனத்தைச் சலனப்படுத்திக் கொள்வதில்லையே!

ஒரு போசனையாளர்.

ஃ ஃ ஃ

சிறைப்பட்டிருக்கும் கானு நாட்டுத் தொழில் மந்திரி எடுசி அவர்களுக்கு ஒரு 'ஷட்டகன்' எழுதிக் கொண்டது :

திரு எடுசி! உம்முடைய அசட்டுத்தனமான போக்காலேயே உம்மைப் பிரதமர் என்க்ருமா சிறையில் போட்டு விட்டார் என்று தெரிகிறது. உம்முடைய மனைவி விலை உயர்ந்த தங்கக் கட்டில் ஒன்று வாங்கினாளாம். மந்திரி பதவியிலிருந்தபடியே சொந்தத்துக்கு அரண்மனையைப் போன்ற மாளிகை ஒன்று நீர் கட்டிக் கொண்டீராம். ''இதற்கெல்லாம் பணம் ஏது'' என்று கேட்டு விட்டு, பிரதமர் என்க்ருமா உம்மீது 'ஊழல்' குற்றம் சுமத்திச் சிறையில் அடைத்து விட்டார். இதற்கெல்லாம் உம்முடைய அஜாக்கிரதை தான் காரணம் என்று நான் தயங்காமல் கூறுவேன். அரண்மனை கட்டிய போது, அல்லது மனைவி மூலமாகத் தங்கக் கட்டில் வாங்கிய போது உம்முடைய ஷட்டகர் ஒருவர் பேரில் இதை யெல்லாம் வாங்கி யிருக்கக் கூடாதா? ஷட்டகர் இல்லையென்றால் மச்சினன் இல்லையா? மாப்பிள்ளைகள், மருமகன்கள், தாய்மாமன், மச்சினியின் மகன், அல்லது கேவலம் இளைய மாமனாரின் மச்சினன் கூடவா இல்லாமற் போய் விட்டான்? அவர்களில் யார் பேரிலாவது இந்தக் கட்டிலை வாங்கி யிருந்தால் இப்படி சிறையில் நிம்மதியாகத் தூங்கும்படி நேர்ந்திருக்காதே.




பணம் திரட்டும் நோக்கமிருந்தால் மந்திரிப் பதவி ஏற்கும் போதே முதல் காரியமாக ஷட்டகர்களையும் மச்சினன்களையும் இளைய மாமனார் மச்சினன்களையும் தயாரித்து வைத்துக் கொள்ள வேண்டும். அப்போது எந்த ஊழல் குற்றச்சாட்டு கிளம்பினாலும் உம்மை அசைக்க முடியாது. மச்சினன்களும், ஷட்டகர்களும் மளமளவென்று காரியங்களைக் கவனித்துக் கொள்வார்கள். இப்படித்தான் இந்தப் பக்கங்களில் வழக்கம். இது தெரியாமல், பகிரங்கமாகவே 'ஊழலில்' குதித்து இப்போது நீர் சிறைப்பட்டு விட்டீர்! மொத்தத்தில் முன் யோசனை யில்லாமல் அகப்பட்டுக் கொண்ட உம்மைப் பார்த்து 'ஒரு ஷட்டகன்' என்ற முறையில் அனுதாபப்படுகிறேன். 'யாருக்கு நான் ஷட்டகன்?' என்று நீங்கள் கேட்பது என் காதுகளில் விழுகிறது. யாருக்கு நான் ஷட்டகனாக இருந்தால் என்ன? உமக்கு அல்ல என்பது மட்டும் நிச்சயம்.

இப்படிக்கு

ஒரு ஷட்டகன்.



மணிபல்லவம்



— உங்கள் கருத்து

திரு நா. பார்த்தசாரதி அவர்கள் எழுதிய 'மணிபல்லவம்'' சரித்திரத் தொடர்கதை 8-4-62 கல்கி இதழுடன் முடிந்து விட்டதும் எதையோ விட்டுப் பிரிவதைப் போன்ற பிரமை ஏற்படுகிறது.

திருச்சி
9-4-62 பெ. சீனிவாசன்

சுரமஞ்சரி, குமரனோடு வாதிட்டு வெல்லும் அத்தியாயம் எங்கள் கண்களில் கண்ணீரை வரவழைத்து விட்டது. கதையின் கடைசிப் பகுதியில் முல்லையைத் தியாகத்தின் சிகரமாக, சோகத்தின் சின்னமாக மாற்றி விட்டார் ஆசிரியர்.

அல்லாம்
6-4-62 சித்திரா

கடைசி இரண்டு அத்தியாயங்களில் கதாநாயகனை மிக உன்னத நிலையில் நிறுத்திக் காட்டியதோடல்லாமல், கதாபாத்திரங்களை—'புடம்' போட்டு எடுத்து விட்டார். அவரவர் மனப்போராட்டமும் தத்துவமும், நெறியும் போட்டி போட்டுக் கொண்டு ஒளிர்ந்தன.

கோயம்புத்தூர்
5-4-62 எஸ். கே. சுந்தரம்

தமிழன் எங்கிருந்தாலும் அவன் எந்தத் தலைமுறையில் வளர்ந்தாலும் — அவன் இதயத்தில் இளங்குமரன் என்ற தூய்மையான ஞானி வாழ்ந்து கொண்டே யிருப்பான்

தமிழ் உலகமும் தமிழ்த் தலைமுறையும் அந்த அறிவு வாழ்வில் தம்மையே அர்ப்பணிக்குமாக.

இலங்கை
5-4-62 தி. இராஜகோபாலன்

மணிபல்லவத்தின் கதாசிரியர் சொற்களை வைத்து ஒரு விளையாட்டே நிகழ்த்தியிருக்கிறார் என்று கூறலாம். ''கோலத்தை அரைகுறையாய் முடித்தவளின் புதுக் கோலம்'', ''முறையாகச் சுற்றி நிலை திரும்பும் தேர்'', ''வென்றவரிடமே தன்னைத் தோற்கக் கொடுத்தல்.'' இவை உதாரணத்துக்குச் சில. எழுத்துலகிலே தனக்கென ஒரு தனி பாணியையே சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறார் திரு நா. பா.

மதராஸ்
7-4-62 கணேஷ்

இளங்குமரனை அழகுள்ளவனாகவும், வீரனாகவும் வளர்த்து, பின் ஞானத்தைக் கற்பித்து, சான்றாண்மை வீரனாக்கி, ''ஆற்றோடு மிதந்து வந்த பூமாலை நீராடிக் கொண்டிருந்தவன் மூழ்கியெழுந்தபோது அவனுக்கு நோக்கமும் எண்ணமும் இல்லாதபடியே அவன் கழுத்தில் நேர்ந்தது ''பால்'' என மிகைப்படுத்திச் சுரமஞ்சரியை அவன் இல்லாளாக்கி இல்லறத்திலே புகுத்தி விட்டார் ஆசிரியர். இவ்வாறு பொய்யா மொழிப் புலவனின் கூற்றை மெய்ப்பித்து விட்டார். இறுதியில் முல்லையை ஞானப் பாதையில் செலுத்தி, பின் அதே முல்லையின் பிரியா விடையோடு, தானும் வாசகர்களிடம் பிரியா விடை பெறுவது சிறப்பு மிக்கது.

இம்மாதிரி அரிய தத்துவங்களை நாவல்களின் மூலம் இன்னும் படைக்கத் திரு நா. பார்த்தசாரதி அவர்களுக்கு இறைவன் அருள் புரியட்டும்.

வீரபாண்டி
6-4-62 இராதாகிருட்டினன்

மணிபல்லவத்தில் நுழைந்த நாங்கள் அங்கு வீசிய இன்பத் தமிழ் மணத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும்பொழுதே முல்லையின் துயர ஒலி எங்கள் இன்பத்தைச் சிதற அடித்து விட்டது. தன் தோள் புண்ணுக்கு மருந்திட்டு ஆற்றிய 'முல்லை' என்ற பேதைக்குத் தீரா மனப் புண்ணை இளங்குமரன் தந்து விட்டானே! ஆயிரம் விசாகைகளை அனுப்பினாலும் அவள் வேதனை ஆறாது என்பதை ஏன் அந்த 'ஞான வீரன்' உணரவில்லை?

பூனா
6-4-62 குமாரி ராஜலக்ஷ்மி குளத்து

விலை மிகுந்த மெய்யறிவுச்
செல்வந் தன்னை
வீதியெலாம் அருள் தெளிக்கும்
வீரந் தன்னைப்

புலைமனத்தைப் பொய் வலியைப்
பொன்றச் செய்து
புனிதத்திற் குளித்தொளிரும்
பெண்மை தன்னைக்

கலைகுலவத் தெளி வுலவக்
கதையிற் சொல்லிக்
காவியத்தை உரை நடையாம்
கவியிற் சொன்ன

தலைமணியாம் மணிவண்ணன்
தமிழர் பேறு
சாதனிலாப் பெருமையுற்ற
கம்பன் தம்பி.

இருகூர்
5-4-62 வீர. சுந்தரன்

ஆசிரியரின் நடை தமிழன்னைக்கு ஒரு புதிய, அழகுமிக்க அணிகலனாக விளங்குகிறது. உயர்ந்த கற்பனைகளுக்கும் சீரிய இலட்சியங்களுக்கும் நம்மை எளிதில் அழைத்துச் செல்லும் தன்மை அதன் தனிச் சிறப்பு. வீரச் செயல்களை விவரிக்கும் போதோ, தத்துவங்களின் ஆழ்ந்த நுட்பங்களை விளக்கும்போதோ, எழிற்காட்சிகளை வருணிக்கும் போதோ, உள்ளத்தின் மென்மையான உணர்ச்சிகளை

வெளிப்படுத்தும் போதோ அந்த நடை எப்படித்தான் அழகுறக் குழைகிறது!

திருப்பதி
7—4—62 அ. நடராஜன்

மணிபல்லவத்தில் வருகின்ற இளங்குமரனும் சுரமஞ்சரியும் என் மனத்தை விட்டு அகலவே இல்லை. இக்கதையின் ஒவ்வொரு பருவத்தையும் விடாமல் படித்த என் மனத்தின் எண்ணங்கள் ஒவ்வொன்றாக இதழ்விட்டு மலர்ந்து 'மணம் பரப்பின. இக்கதையின் இறுதிப் பருவமாகிய ஐந்தாம் பருவம் இளங்குமரனின் வாழ்க்கையில் மட்டும் நிறைவை உண்டு பண்ணவில்லை. என் நினைவிலும், என் செயலிலும், என் வாழ்விலும் பூரண நிறைவை உண்டு பண்ணியிருக்கின்றது. என் மனத்தில் இளங்குமரனைப் போன்று காவிய வாழ்வு வாழ வேண்டுமென்ற ஆசையை வளர்த்துவிட்டார் ஆசிரியர்

சென்னை
9—4—62 இரா. சீனிவாசன்

'**ஆ**ரம்பம்' என்று இருந்தால் நிச்சயம் 'முடிவு' என்பது உண்டு. ஆனால் 'இந்தக் கோலத்தை இப்படி அரைகுறையாக விட்டுப் போகிறாயே முல்லை' என்று கேட்ட இளங்குமரனை நோக்கி, 'இந்தக் கோலத்துக்குத் தொடக்கம்தான் உண்டு. இறுதி தெரியவில்லை. முடிவும் இல்லை. நான் இதை முடிக்கப் போவதும் இல்லை!' என்று முல்லை தொடுத்த வார்த்தைகளைக் கேட்டு இளங்குமரனுக்கு மட்டுமல்ல; என்போன்ற பல்லாயிரம் வாசகர்களுக்கும் கூடப் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது.

அழகை
6—4—62 வி. கேசவன்

முல்லையின் காதல் தியாகம் நம் நெஞ்சை உருக்குகிறது. மறு பிறப்பிலாவது அவள் ஆசை நிறைவேற நம் நெஞ்சமும் நம்மையறியாமல் வாழ்த்துகிறது.

திண்டுக்கல்
5—4—62 க. சங்கர நாராயணன்

அமரர் கல்கியின் கதைகளில் ஆழ்ந்து கட்டுண்ட என்னைப் போன்ற வாசகர்களின் மனத்தை ஆசிரியர் திரு பார்த்தசாரதி மணிபல்லவத்தின் மூலம் இளகச் செய்து விட்டார் என்றால் மிகையாகாது. வீரத்தையும், ஞானத்தையும், காதலின் தியாகத்தையும் 'சலசல' வென்று சத்தமிட்டுக் கொண்டு செல்லும் நீரோடை போன்ற நளினமான நடை மூலம் தந்து ஆசிரியர் எங்கள் அனைவர் மனத்தையும் குளிரச் செய்து விடுகிறார்.

புதுதில்லி
6—4—62 குருநாதன்

'**கு**றிஞ்சி மலர்' மணிவண்ணன் அவர்கள் இலக்கிய உலகுக்கு அளித்துள்ள மற்றொரு காணிக்கையான 'மணிபல்லவம்' இலக்கியங்களின் வரிசையிலே ஒரு தனி இடம் பெறுகிறது. 'கதாபாத்திரங்களின் குணச் சித்திரமும் ஆசிரியரின் அற்புதநடையும் நம்நெஞ்சை அள்ளுகின்றன. தொடக்கம் முதல் நிறைவு வரை ஆசிரியர் கதாபாத்திரங்களோடு நம்மையும் பூம்புகாருக்கும் மணிபல்லவத்துக்கும் அழைத்துச் சென்று விடுகிறார். பூம்புகாரின் கடற்கரையிலே யவன மல்லனோடு போரிட்டு வெற்றி கண்ட இளங்குமரனை முதலில் வீரனாகவும், பின் திருநாங்கூர் அடிகளிடம் கல்வி பயின்று எல்லாக் கலைகளிலும் முழுமை பெற்று விளங்குகின்ற அறிஞனாகவும் சமயவாதிகளோடு சொற்போரிட்டு வென்ற ஞானியாகவும் கடைசியில் சுரமஞ்சரியின் அன்புக்காகத் தன்னையே அவளிடம் தோற்று விடுகின்ற பரந்த மனம் கொண்ட பண்பாளனாகவும் அற்புதமாக உருவாக்கியிருக்கிறார்.

தூத்துக்குடி
9-4-62 வி. வேதநாராயணன்

'**எ**மக்கு முந்திய தலைமுறையினரிடையில் தோன்றித் தமிழ் இலக்கியத்துக்குத் தொண்டாற்றிய எத்தனையோ பண்டைய இலக்கியக் கலைஞர்களுக்கு நாம் சற்றும் சளைத்தவர்கள் அல்லர்' என்ற உண்மையை, முதலில் இலக்கிய மணம் கமழும் 'குறிஞ்சி மலரை'த் தமிழ் மக்களுக்கு அளித்ததன் மூலமும், தற்சமயம் 'மணிபல்லவம்' என்னும் அரும் பெரும் காவியத்தைக் கல்கியின் வாயிலாகத் தமிழ் மக்களுக்கு அளித்ததன் மூலமும் திரு பார்த்தசாரதி அவர்கள் உறுதிப்படுத்திவிட்டார்கள்.

யாழ்ப்பாணம்
3-4-62 இணுவை ஆறுமுகன்

சரித்திர நவீனத்தில் ஒரு திருப்பம். போர் முறை, கொடுவினை நிகழ்த்தும் வாள், வில் இல்லை. மற்போரில் தொடங்கிச் சொற்போரில் வெற்றி கண்ட முறையான கதை. ஒழுக்க நெறிகளையும், பண்பட்ட பழக்க வழக்கங்களையும், பயிற்றுவிக்கும் ஆற்றல் சமூக நவீனங்களில் மட்டும்தான் சமைக்கப்படும் என்பதல்ல என்பதற்கு இத்துறையில் முதல் சான்று. சரித்திர நவீனமென்றால் இராசா ராணிக் கதை என்ற மேலெழுந்த எண்ணம் கொண்டோர் அனைவருக்கும் ஒரு புதுமை. மொத்தத்தில் முத்தமிழும் இணைந்தோடும் சந்தான உரை நடைக் காவியம் மணிபல்லவம்.

பன்னபட்டி
19-4-62 சாமு. செயபாலன்

சான்றாண்மையையும், ஒவ்வொரு பாத்திரத்தின் வாயிலாக ஒவ்வொரு தத்துவங்களையும் விளக்கி என் அக இருளை நீக்கியமைக்கு ஆசிரியர் அவர்களுக்கு நான் நன்றியுடையேன். 'நிறைந்தது' என ஆசிரியர் கதையை முடித்திருந்ததைப் படிக்க என் கண்களில் நீர் நிறைந்தது

திருக்கோணமலை
7-4-62 பொன். இராமநாதன்

'**ம**ணிபல்லவம்' நிறைந்து விட்டது. ஏட்டில், எழுத்தில் மட்டுமல்ல, எங்கள் இதயத்திலும் என்றுமே அழிக்க முடியாதபடி நிறைந்து விட்டது. முடிவுகூடத் தொடக்கம் போல் ஆர்வத்தைத் தூண்டி விட்டது. எங்கள் மனமோ நிறைவையும் தாண்டி அலைபாய்கிறது. முடிவில் நிறைவிருந்தாலும், இன்னும் இல்லையே, முடிந்துவிட்டதே என்ற ஏக்க உணர்வு அதையும் மீறி நிற்கிறது.

புதுதில்லி
10-4-62. எம். எஸ். பத்மா

அழுத்தச் சமையல்

அ. நடராஜன்

இன்றைய யுகம் அவசர யுகம்; எதுவுமே மிக மிக விரைவாக நடந்துவிட வேண்டுமென நாம் விரும்புகிறோம்!— சமையல் துறையில் இந்த விரைவைச் சாத்தியமாக்கி யிருப்பது 'பிரஷர் குக்கர்' எனப்படும் அழுத்தச் சமையல் பாத்திரம். இது எப்படிச் செயல்படுகிறது?



சமையலில் வேக வைத்தல் என்பது ஒரு முக்கியமான பகுதி; நமது பொறுமையைச் சோதிக்கும் பகுதி என்றுகூடச் சொல்லலாம்! அரிசியோ, கோதுமையோ காய்கறியோ, மாமிசமோ எதுவானாலும் — முதலில் அதை வேகவைத்தாக வேண்டும். பிறகுதான் தாளிதம் எல்லாம்.

சாதாரணச் சமையலில் வேக வைத்தல் பெரும் பகுதி நேரத்தை எடுத்துக் கொள்கிறது. ஏன்? வேக வைத்தல் என்பதைச் சற்று விஞ்ஞான நோக்கில் கவனிக்கலாம். பச்சை உணவுப் பொருளை (எடுத்துக் காட்டாக, உருளைக்கிழங்கை) ஒரு பாத்திரத்தில் போட்டு அதில் சிறிது நீர் ஊற்றி, அடுப்பின் மீது அப் பாத்திரத்தை வைக்கிறோம். அடுப்பிலிருந்து வரும் வெப்பத்தினால் பாத்திரத்தில் இருக்கும் நீர் படிப்படியாகச் சூடாகி, இறுதியில் கொதி நிலையை அடைந்து விடுகிறது. நீர் வாயிலாக வெப்பம் உணவுப் பொருளினுள் புகுந்து, அதிலுள்ள பகுதிகளை இளக்கிஅதை 'வேக' வைத்து விடுகிறது. நீர் கொதி நிலையை அடைந்த பிறகு அதற்கு மேலும் வெப்பம் அளித்தாலுங்கூடக் கொதி நிலை உயருவதில்லை; நீர்தான் ஆவியாக மாறுகிறது. எனவே உணவுப் பொருளின் வெப்பநிலையும் நீரின் கொதி நிலைக்கு மேல் உயர்த்தப்படுவதில்லை. இந் நிலையில் உருளைக்கிழங்கு வேகுவதற்குச் சுமார் முப்பது நிமிஷங்கள் ஆகின்றன.

கடல் மட்டத்தில் சாதாரணக் காற்றழுத்தத்தில் நீரின் கொதி நிலை ஸென்டிக்ரேட் முறையில் 100 டிக்ரி. கடல் மட்டத்திற்கு மேல் உயரச் செல்லச் செல்ல, காற்றின் அழுத்தம் குறைவதால் ஆயிரம் அடிக்கு ஒரு டிக்ரி விதம் கொதிநிலை குறைகிறது. 5000 அடி உயரமுள்ள மலை ஒன்றின் மீது நீர் 95 டிக்ரியிலேயே கொதிக்கத் தொடங்கிவிடும்; உருளைக் கிழங்கு வேகுவதற்கு அப்போது முப்பது நிமிஷங்களைவிட அதிகநேரம்பிடிக்கும்.

அழுத்தம் மிகுதியானால் கொதி நிலையும் உயருகிறது. அதிகமான கொதி நிலையில் வேகுவதற்காகும் நேரமும் குறைவு. அழுத்தச் சமையல் பாத்திரத்தில் நடப்பது இது தான்.

சாதாரணச் சமையல் பாத்திரத்தில் ஒன்று, வாய் திறந்திருக்கிறது அல்லது பாத்திரத்தின் மூடி தளர்ந்து இருக்கிறது. ஆகவே, பாத்திரத்தினுள்ளிருக்கும் அழுத்தம் வெளியிலுள்ள அழுத்தத்துக்குச் சமமாகவே இருக்கும். ஆனால், அழுத்தச் சமையல் பாத்திரத்தில் மூடி கெட்டியாகப் பொருத்தப்பட்டிருக்கும். பாத்திரத்தினுள்ளிருந்து நீராவி எளிதில் வெளியே செல்ல முடியாது; எனவே, பாத்திரத்தினுள் அழுத்தம் அதிகமாகி, கொதி நிலையும் உயருகிறது. உணவுப் பொருளும் விரைவாகவே வெந்து போய் விடுகிறது. மூடியின் மீதுள்ள துவாரத்தைத் திறந்து விட்டு



அழுத்தச் சமையல் பாத்திரத்தில் நீர் ஊற்றி அதைச் சூடாக்குகிறோம். நீர் ஆவியாகி அதிலுள்ள காற்றை எல்லாம் அகற்றிவிடு

றது. உடனே (ஒரு வழி) அடைப்பான் ஒன்றைக் கொண்டு அதை மூடிவிட்டால் நீராவி வெளியே போக முடியாது. கொதி நிலை உயரும். தவிரவும், சூடான நீரை விடச் சூடான நீராவியினால் உணவுப் பொருளினுள் எளிதில் நுழைய முடியும். எனவே, சில நிமிஷங்களிலேயே உணவு சமையலாகிவிடுகிறது. உடனே மூடியைத் திறந்து விடக்கூடாது. ஏன் எனில், வேகமாக வெளிவரும் நீராவியினால் நமக்கு ஆபத்து ஏற்படக் கூடும். அடுப்பிலிருந்து சமையல் பாத்திரத்தை எடுத்துவிட்டு, மூடியின் மீது குளிர்ந்த நீர் சிறிது தெளித்தால் நீராவி குளிர்ச்சி அடையும்; அழுத்தமும் குறையும். இப்போது பயமின்றி மூடியை எடுக்கலாம்.



அழுத்தம் மிகவும் உயர்ந்துவிட்டால் பாத்திரம் வெடித்து விடலாமல்லவா? எனவே, அதைத் தடுப்பதற்கு (ஒரு வழி) அடைப்பான் பயன்படுகிறது. அழுத்தம் குறிப்பிட்ட அளவுக்கு மேற்பட்டு விட்டால், (ஒரு வழி) அடைப்பான் திறந்து கொண்டு விடும்.

. வீட்டில் மட்டுமல்ல, தொழிற் சாலைகளிலும் அழுத்தச் சமையல் பாத்திரங்கள் பயன்படுகின்றன. அதிக அழுத்தத்தினால் கொதி நிலை உயருவதைப்போல, குறைவான அழுத்தத்தினால் கொதி நிலை குறைகிறது. கரும்புச் சாற்றிலிருந்து சர்க்கரைப் படிகங்கள் தயாரிக்கவும், பாலிலிருந்து பால் பொடி செய்யவும் குறைந்த கொதி நிலைகளில் அவற்றைக் கொதிக்க வைக்க வேண்டியிருக்கிறது. கொதி நிலை அதிகமாயிருந்தால் அவை தீய்ந்து போய் ருசி கெட்டு விடும்.

விஞ்ஞான ஆராய்ச்சியின் ஆக்கப் பயன்களுக்கு அழுத்தச் சமையல் பாத்திரம் ஓர் அருமையான எடுத்துக் காட்டு இல்லையா?

தமிழ் கூறும் நல்லுலகம்

நாம பக்த ஸமாஜத்தின் ஆதரவில் ஸ்ரீராம நவமி உற்சவம் ஏப்ரல் 13, 14, 15 தேதிகளில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. 13-ம் தேதி மாலை குமாரி ராஜலக்ஷ்மி ஸ்ரீனிவாஸன் அவர்கள் இன்னிசை விருந்தளித்தார்கள். 13-ம் தேதி லக்ஷார்ச்சனை, ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி நாகராஜன் அவர்களுடைய பாட்டுக் கச்சேரி, ஸத்குரு போதேந்த்ர ஸ்வாமிகளின் அடியார்களுடைய திவ்யநாம ஸங்கீர்த்தனம் முதலியவை நடைபெற்றன. குமாரி எஸ். ஆர். பிரபாவின் இசை விருந்துடன் 15-ம் தேதி விழா முடிவுற்றது.

★

கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கம் ஏப்ரல் 21-ம் தேதி அன்று திரு தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்களுக்கும் மற்றும் கோவை நகரப் பிரமுகர்களான திரு என். கிரிதாரி பிரசாத், திரு கே. ஆர். ராதாகிருஷ்ணன் ஆகியோருக்கும் ஒரு வரவேற்பு அளித்தது. கூட்டத்துக்கு ஸ்ரீமதி வேங்கடலக்ஷ்மி தலைமை வகித்தார்.

திரு கிரிதாரி பிரசாத் அவர்கள் 'திருவாசகமும் திரு அருட்பாவும்' என்ற தலைப்பில் பக்தி நயம் தோன்ற ஒரு சொற்பொழிவினை நிகழ்த்தினர். இராமலிங்க அடிகள் தமிழகத்தின் தமிழ்ப் பண்பாட்டின் முழு உருவம் என்று குறிப்பிட்டார். திருவாசகத்தில் 'சிவபிரானு'க்குப் பதிலாகக் 'கண்ணபிரானை'ப் பொருத்தினால் 'திருவாசகம்' 'பகவத் கீதை' யாக மாறி விடும் என்ற பேருண்மையை வெகு தெளிவாக எடுத்துரைத்தார். கீதை பகவான் கண்ணன் பாடப் பார்த்தனாகிய மனிதன் கேட்டது என்றும், திருவாசகம் மனிதனாகிய மாணிக்கவாசகர் பாட இறைவன் சிவபெருமான் கேட்டுப் பரவசமடைந்தது என்றும் கூறினர்.

தமிழின் பெருமை, தமிழ்க் கலை, கலாசாரம் இவை யனைத்தையும் உலகம் சிறபக் கலையின் மூலம் கண்டு உணர்கிறது என்றும், உட்பொருளை அறிய இயலாத கடவுளின் தன்மையைக் கண்டு உணர்ந்தவர் சைவ நாயன்மார்களில் ஒருவரான 'பூசலார்' என்றும், எல்லாப் பொருள்களும் 'சிவ சக்தி'யாக விளங்குகின்றன என்றும் திரு பாஸ்கரத் தொண்டைமான் தமது உரையில் குறிப்பிட்டார்.

இந்த வரவேற்பில் கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கம், தமிழ் மாணவர் மன்றம், கம்பன் கழகம் ஆகிய அமைப்புக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தன.

★

ஸிக்கந்திராபாத் மாபூப் காலேஜ் ஹாலில் தமிழ் இலக்கிய சங்கத்தார் ஸ்ரீ பாஸ்கரத் தொண்டைமான் அவர்களுக்கும், அவருடன் பயணத்தில் கலந்து கொண்ட ஸ்ரீ கிரிதாரி பிரசாத், ஸ்ரீ ராதாகிருஷ்ணன் ஆகியவர்களுக்கும் ஏப்ரல் 30-ந் தேதி வரவேற்பளித்துக் கௌரவித்தனர்.

நார்ஜிலிங் மார்க்கத்தில் விஞ்ஞானி மயில்ஸ்டோன் ராஞு காட்டில் ஏன் தங்கினார்? அல்லது அங்குள்ள நகர சபை ஹாலில் சொற்பொழிவாற்ற ஏன் ஆவலுற்றார்? இவை பற்றிக் கூறுவது கடினம். ஏனெனில் அப்போது நான் அங்கு இல்லை. அதனால் நேரில் கண்டவனைப் போல் தத்ரூபமாக அந்த அநுபவத்தைப் பற்றிக் கூற இயலாதவனாக இருக்கிறேன். ஆயினும் மற்றவர்கள் வாய் மொழியாகக் கேள்விப்பட்டதைக் கேள்விப்பட்டபடியே சிறிதும் காது மூக்கு வைக்காமல் கூறுகிறேன்.

உண்மையில் நாஜி ஜெர்மனியிலிருந்து வெளியேற்றப்பட்டபின் விஞ்ஞான மேதையான மயில்ஸ்டோனுக்கும் ஒருவேளை பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதோ என்னவோ? எனவே, சொற்பொழிவு செய்து பொருள் ஈட்டும் ஆசையில் அவர் இந்தியாவுக்கு வந்திருக்க வேண்டும். பொதுவாகவே அவர் பல்வேறு இடங்களிலும் பொருளுக்காக வேண்டியே சொற்பொழிவாற்றியிருக்கிறார்.

கிருஷ்ண நகரத்தில் உள்ள மகாவித்யாலயத்தில் அப்பொழுது கணிதப் பேராசிரியராகப் பணியாற்றி வந்த ராய்பகதூர் நீலாம்பர் சட்டோபாத்யாயர் கடமையிலே கண்ணான மனிதர். செனட் ஹாலில் மயில்ஸ்டோன் ஆற்றிய விஞ்ஞானச் சொற்பொழிவைக் கேட்டுவிட்டு, ஒருசில சிந்தனையாளர்களைப்போலவே அவரும் மெய்மறந்து மதிகிறங்கிப்போனார். தமது கல்லூரிக்கு வந்து சொற்பொழிவாற்ற வேண்டும் என்று அவருக்கு அழைப்பும் விடுத்தார்.

பாலிகஞ்சில் விநோதனின் வீட்டில் இதைப் பற்றியேதான் பேச்சு நடந்து கொண்டிருந்தது. விநோதன் ராய்பகதூரின் பெரிய மைத்துனன். விநோத சௌத்ரி என்பது முழுப் பெயர். "சட்டர்ஜி, அன்று கட்டாயம் நானும் ராஞுகாட்டுக்கு வருவேன். மயில்ஸ்டோனை நான் இந்தக்காலத்தில் வாழும் மாபெரும் மகரிஷியாகவே மதிக்கிறேன். இன்று மத்தியானம் நீங்கள் இங்கேயே உணவருந்தலாமே!" என்றான் தன் அத்திம்பேரிடம்.


"இல்லை, இல்லை. இப்பொழுது எனக்குத் தங்கப் பொழுதில்லை. பல வேலைகள் இருக்கின்றன. எப்படியாவது விஞ்ஞானமேதைக்குக் கொஞ்சம் பொருள் திரட்டிக் கொடுப்பதற்கான வழி வகை செய்ய வேண்டும். அந்தப் பொறுப்பை நான் ஏற்றிருக்கிறேன். போய் நகர சபை முதல்வர், உதவி முதல்வர் முதலியவர்களைப் பார்த்துப் புகழுரை சொல்லிப் பணம் திரட்டப் பார்க்கிறேன். எல்லாரும் பெரிய ஆசாமிகள்! சீக்கிரம் பணத்தைக் கழற்ற மாட்டார்கள். இருந்தாலும் ஏதாவது முடியுமா என்று பார்த்து வருகிறேன். அதோடு ஹாலுக்கு வேறு ஏற்பாடு செய்ய வேண்டும்" என்றார் ராய்பகதூர் சட்டர்ஜி.

"நன்றாய்ச் சொன்னீர்கள் சட்டர்ஜி! மயில்ஸ்டோன் பெயரைச் சொன்னால் ஹால் கொடுக்க முடியாது, பணம் தரமுடியாது என்று சொல்வாரும் இருப்பார்களா? பாவம்! முதிர்ந்த வயதில், தள்ளாத காலத்தில் இந்த மாபெரும் விஞ்ஞான மேதை சொற்பொழிவாற்றியல்லவா பணம் சேகரிக்க வேண்டியிருக்கிறது! என்ன துர்ப்பாக்கியம்! என்ன துர்ப்பாக்கியம்!" என்றான் விநோதன்.

அதற்குப் பின் பல நாட்கள் ராய்பகதூர் சட்டர்ஜி ஓய்வு ஒழிச்சல் இன்றிப் பெருமுயற்சியில் ஈடுபட்டார்.

குறிப்பிட்ட தினத்தன்று ராய்பகதூர் சட்டர்ஜி தமது மாணவர்களில் சிலரை அழைத்துக் கொண்டு காலை வண்டியில் ராஞுகாட்டுக்குச் சென்றார்.

ராஞுகாட் ஸ்டேஷனுக்கு வெளியே ஒட்டப்பட்டிருந்த ஒரு சுவரொட்டி விளம்பரத்தைக் கண்டதும் ராய்பகதூர் துணுக்குற்று ஸ்தம்பித்து நின்று விட்டார். சுவரில் மூன்று நிற விளம்பரம் ஒன்று கண்ணைக் கவரும் வகையில் காட்சி தந்தது.



வாணி சினிமாத் தியேட்டருக்கு
வருகிறாள்! வருகிறாள்! வருகிறாள்!
புகழ் பெற்ற திரைப்பட நடிகை
இந்துபாலா தேவி!
இன்று மாலை ஐந்து மணிக்கு!
நுழைவுக் கட்டணம்: 5, 3, 2, 1
மாதர்களுக்கு 5, 2

அட கடவுளே! கார்த்திகை மாதத்துக் குளிர் நடுக்கும் காலை வேளையிலும் கூட ராய் பகதூருக்கு வியர்த்துக் கொட்டவா வேண்டும்? கைக்குட்டையை எடுத்து நெற்றியில் வழியும் வியர்வையைத் துடைத்துக் கொண்டார். பிறகு ஒரு முறை நன்றாகத் தேதியைக் கவனித்தார். 'இல்லை, சந்தேகம் இல்லை. இன்றுதான்!' - மனம் முணுமுணுத்தது.

மனம் உழல, மேலும் சிறிது தூரம் நடந்தார். அதே போன்ற விளம்பரம் அங்கும் தோற்றம் அளித்தது. அவர் போகப் போக விளம்பரங்களும் வரிசையாக வந்து போய்க் கொண்டிருந்தன. நகரசபை உதவி மேயர் வீட்டு வாசலை அடைவதற்குள் குறைந்தது முப்பத்தாறு மூவர்ண விளம்பரங்களாவது தக தகவென்ற பிரகாசத்துடன் அவர் கண்களில் தட்டுப்பட்டிருக்கும்.

தோட்டத்துக்கு எதிர்த்தாற் போல் இருந்த சிறு வராந்தாவில் ஸ்ரீ கோபால பாபு உட்கார்ந்து எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தார். ராய்பகதூர் வருவதைக் கண்டதும், ''வாருங்கள், வாருங்கள்! இன்று என்ன விடியற்காலையிலேயே புறப்பட்டு விட்டீர்கள்?'' என்று கேட்டு வரவேற்றார்.



ரா.வீ

''விஷயம் என்னவென்றால், ஒரு பெரிய தடங்கல் அல்லவா ஏற்பட்டு விடும்போலிருக்கிறது! யார் இந்த இந்துபாலா! இன்று மாலை வாணி சினிமா தியேட்டருக்கு வருகிறாளாமே!'' என்றார்.

''அதனால் என்ன? இந்துபாலாவின் விசிறிகளாக இருப்பவர்கள் விஞ்ஞான மேதையின் பேச்சைக் கேட்க வரப்போவதில்லை. விஞ்ஞானியின் பேச்சைக் கேட்க ஆவல் உள்ளவர்கள் இந்து பாலாவைப் பார்க்கப் போகப் போவதில்லை!'' என்று ஆறுதல் மொழி கூறினார் உதவி மேயர் கோபால பாபு.

''அது மெய்தான். இன்னும் நான் எத்தனையோ இடங்களுக்குப்போக வேண்டியிருக்கிறது. எத்தனையோ வேலைகளைக் கவனிக்க வேண்டியிருக்கிறது'' என்று கூறி விடைபெற்றுக்கொண்டார் ராய் பகதூர்.

நீராடி விட்டுக் கோபால பாபு உள்ளே வந்தார். அவருடைய மூத்த பெண், ''அப்பா! எங்களுக்கு ஐந்து டிக்கெட்டுகள் வாங்கித் தாருங்கள்!'' என்றாள்.

''என்ன டிக்கெட்?''

''என்ன அப்பா இது? இன்று மாலை வாணி தியேட்டரில் இந்து பாலா வரப் போகிறாள். ஆட்டம் - பாட்டம் எல்லாம் அமர்க்களப் படும். பக்கத்து வீட்டில் எல்லாருமே போகப் போகிறார்கள்!'' என்றாள்.

''போனால் போகட்டுமே! நான் என்ன பண மரம் பயிராக்கியிருக்கிறேனா? ஐந்தும் பத்தும் கொடுத்து டிக்கெட்டுகள் வாங்கித் தருவதற்கு? பணம், பணம் என்று பிய்த்தெடுக்கா தீர்கள், போங்கள்!'' என்று எரிந்து விழுந்தார் கோபால பாபு.

எரிந்து விழுந்தாரே யொழிய, மேஜை டிராயரைத் திறந்து ஒரு பத்து ரூபாய் நோட்டையும் கொஞ்சம் சில்லறையையும் எடுத்துத் தமது மகளின் கையில் கொடுத்தார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் பக்கத்து வீட்டு ராதாசரண் இடை கழியில் வந்து நின்று கொண்டுகூடத்தில் எட்டிப்பார்த்த வண்ணம், ''என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள், கோபால் பாபு?'' என்று குரல் கொடுத்தார்.

''வாருங்கள், வாருங்கள்! டாக்டர் சார்! என்ன விசேஷம்? இன்று மாலை நீங்களும் வரப் போகிறீர்கள் அல்லவா?'' என்று கேட்டார் கோபால பாபு.

''அதைத்தான் நானும் கேட்க வந்தேன். உங்கள் வீட்டிலும் நீங்கள் எல்லாரும் போகப் போகிறீர்களோ, இல்லையோ?''

''கேட்கணுமா! ராஜகோட்டுக்குக் கிட்டக் கூடிய அதிர்ஷ்டமா இது? கிடைத்த தருணத்தை நழுவ விடலாமா ?''

''நானும் இதையேதான் வீட்டில் சொல்லிக்கொண் டிருந்தேன். பணச் செலவு... அது எப்பொழுதும்தான் இருக்கிறது. ஆனால் இதையெல்லாம் பார்க்கிற—கேட்கிற வாய்ப்பு வாழ்க்கையில் எத்தனை தடவை கிட்டப் போகிறது?''

''நூற்றுக்கு நூறு மெய்யான வார்த்தை!''

''இதிலே சந்தேகம் வேறு? இப்பொழுது எங்கு பார்த்தாலும் ஊரில் இந்துபாலாவின் பேச்சாகத்தான் இருக்கிறது!''

ஸ்ரீ கோபால பாபு வாயைப் பிளந்து கொண்டு ராதாசரண் அவர்களையே பார்க்கலானார். சில கணங்களுக்கு அவருக்குப் பேசவே தோன்றவில்லை. வலிசாக இரண்டு நிமிஷங்கள் மௌனம் சாதித்த பிறகு, தெளிவற்ற குரலில், ''ஆனால் நான் அவளைப் பற்றிச் சொல்ல வில்லை. நகரசபை ஹாலில் நடக்கவிருக்கும் விஞ்ஞானியின் சொற்பொழிவைப் பற்றியல்லவா சொன்னேன்!'' என்றார்.

ராதாசரணரின் புருவங்கள் சுருங்கி நிமிர்ந்தன. ''ப்பூ! அந்த ஜெர்மனி விஞ்ஞானியைப் பற்றிச் சொல்கிறீர்களா? ஆமாம், ஆமாம். கேள்விப்பட்டேன். என் மாப்பிள்ளை கூடச் சொல்லிக் கொண்டிருந்தான். ஆனால் எங்கள் வீட்டில் உள்ளவர்கள் சினிமாவுக்குப் போவதாகத்தான் இருக்கிறார்கள்'' என்றார்.

''.....ஆனால் நான் மயில்ஸ்டோனின் பேச்சுக்குத்தான் போயாக வேண்டும். ஏனெனில் ராய்பகதூர் நீலாம்பர் பாபு ரொம்பவும் வற்புறுத்தி விட்டுப் போயிருக்கிறார்.''

''எந்த ராய்பகதூர்?''

''கிருஷ்ண நகர்க் கல்லூரிப் பேராசிரியர் இல்லை, அவர்தான். அவருடைய ஏற்பாடு தான் எல்லாம். அவரே நேரில் வந்து....''

ராதாசரண் பாபு நொடிக்கு ஒருமுறை கண்களைக் கொட்டிக் கொண்டே, ''நான் சொல்வதைக் கேளுங்கள். என்றும் வராதவள் இன்று வருகிறாள். வாருங்கள், போய்ப் பார்த்து விட்டு வருவோம். படத்தில் பார்க்கிற இந்துபாலாவுக்கும் உண்மையான இந்து பாலாவுக்கும் எத்தனையோ வித்தியாசம் உண்டு. வாழ்வெடுத்த பயன், கண் படைத்த பயன் கிட்ட வேண்டுமானால் நான் சொல்வதைக் கேளுங்கள். இந்தமாதிரி எத்தனையோ விஞ்ஞானிகள் கிடைப்பார்கள். இந்துபாலா கிடைக்க மாட்டாள். காலை, மாலை இரண்டு

வேலைகளும் ராணுகாட் ஸ்டேஷனில் போய் நில்லுங்கள். டார்ஜிலிங்–ஹில்லாங் மெயில் வரும்போது எத்தனையோ பேர்கள் இறங்கு வார்கள். நீங்கள் கூறும் விஞ்ஞானியைப் போல. ஆனால் கோபால் பாபு, இத்தருணம் தப்பினால் வேறு தருணம் வாய்ப்பதரிது. சொல்வதைக் கேளுங்கள்!'' என்றார்.

''அது மெய்தான். இருந்தாலும் ராய்பக தூருக்கு வாக்கு அளித்துவிட்டேன். போகா விட்டால் அவர் என்ன எண்ணுவார்?'' - கோபால பாபு வேப்பம் உருண்டையை விழுங்குபவர்போலத்தான் பேசினார்.

ராதாசரண் பாபு உதடுகளைப் பிதுக்கி, ''ஹூம். ராய்பகதூருக்குப் பெரிதாக வாக்கு அளித்து விட்டீர்களாக்கும்! பெரிய ராய் பகதூர்! அப்படி என்ன ஐயா அவருக்கு 'ஆப்ளிகேஷன்' வேண்டியிருக்கிறது. வீட்டில் எல்லோரும் போனார்கள். நானும் போகும் படியாகிவிட்டது என்று சொல்லுங்களேன்! என்ன, அவர் உமது தலையை இறக்கி விடுவாரோ?'' என்றார்.

ராய்பகதூர் உள்ளூர் ஜமீந்தார் நீரேன் சட்டர்ஜி வீட்டில் அமர்ந்து சொற்பொழிவு பற்றிய நிகழ்ச்சி முறைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். நீரேன் ராய் பகதூருக்குச் சித்தப்பா பிள்ளையாக வேண்டும். அதாவது ஒன்றுவிட்ட தம்பி ஆக வேண்டும். அவர் புகழ்பெற்ற ஜமீந்தார் மட்டும் அல்ல; பெரிய வக்கீலும்கூட.

மத்தியானச் சாப்பாட்டுக்குப் பின், ''ஆமாம். இன்றையப் பேச்சுக்கு விஷயம் என்ன?'' என்று கேட்டார் நீரேன் பாபு.

''சரியாகச் சொல்ல முடியாது. அலகிலாச் சக்திகளின் அற்புதச் சேர்க்கை என்பதுதான் பொதுப்படையான பொருள். மற்ற விஷ யங்களை நீயே ஊகித்துக் கொள்'' என்றார் கோபாலபாபு.

இதே சமயம் உள்ளுக்குள்ளிருந்து நீரேன் பாபுவின் மகள் மீனு வந்து, ''பெரியப்பா! அப்பாவிடம் சொல்லி டிக்கெட்டுகளுக்குக் காசு வாங்கித் தாருங்கள்!'' என்றாள்.

''என்ன டிக்கெட் மீனு?'' என்று அன் பொழுகக் கேட்டார் ராய்பகதூர்.

''என்ன பெரியப்பா இது! நீங்கள் இந்த உலகத்திலேயே இல்லாதவர் போல் அல்லவா பேசுகிறீர்கள்?'' என்றாள் மீனு.

நீரேன் பாபு அவளை அதட்டி, ''சுத்த அதிகப் பிரசங்கி! என்ன பேசப் போகிறாய்? அதுதான் சொன்னேனே இல்லையோ, உயிரை வாங்காதே, பணம் கிடையாது என்று! எதற் காகத் தொண தொணக்கிறாய்? அண்ணா, இவள் எந்த டிக்கெட்டுக்குக் காசு கேட்கிறாள், தெரியுமா? இன்றைக்கு வாணி சினிமா தியேட்டரில் இந்துபாலா வருகிறாளோ, இல் லையோ? அவளைப் பார்க்கப் போக வேண்டு மாம் இவர்களுக்கு!'' என்றார்.

''போனால் போகட்டுமே! குழந்தையை எதற்காகக் கண்டிக்கிறாய்? அவள் இஷ்டத் துக்கு விட்டு விடு. மயில்ஸ்டோன் பேச்சைக் கேட்டு அவள் என்ன செய்யப் போகிறாள்? ஆனால் கேட்கவந்தால் வாழ்க்கை முழுவதும் மறக்க மாட்டான். நல்ல பேச்சைக் கேட் டோம் என்றிருக்கும். ஏன் மீனு, நீ எங்கே போகப் போகிறாய்? பேச்சுக்கா, சினிமா வுக்கா?'' என்று கேட்டார் ராய்பகதூர்.

''பெரியப்பா! நாங்கள் சினிமாவுக்குத் தான் போகப்போகிறோம்!'' என்று சொல்லிச் சிரித்தவாறே உள்ளே ஓடி விட்டாள் மீனு.

டார்ஜிலிங் மெயில் வரும் நேரமாகி விட் டது. மாலை மணி ஐந்தரை அடித்து விட்டது. ராய்பகதூர் தமது சில மாணவர்களோடு, நீரேன்பாபு, கோபாலபாபு ஆகிய இருவரை யும் அழைத்துக் கொண்டு பிளாட்பாரத்துக்கு வந்தார்.

அட, இதென்ன? இத்தனை கூட்டம்! பிளாட்பாரத்தில் எத்தனை மாணவர்கள், மாணவிகள்! கூட்டம் நெரித்துத் தள்ளு கிறதே!

இது கனவா, நினைவா? தூங்கும் ராணு காட்டு மக்கள் விழித்துக் கொண்டு விட் டார்களா? பேராசிரியர் மயில்ஸ்டோனின் வருகை மக்களைத் தட்டி எழுப்பி விட்டதா? எல்லோரும் டார்ஜிலிங் மெயிலுக்காக அல் லவா காத்து நிற்கிறார்கள்? மயில்ஸ்டோனை வரவேற்க வந்தால்தானே இந்தப் பிளாட் பாரத்தில் நிற்க வேண்டும்? சந்தேகமில்லை, இத்தனை பெரிய விஞ்ஞானிக்கு ஏற்ற வரவேற் புத்தான் இது!

பிளாட்பாரம் பிதுங்கிக் கொண்டிருந்தது. கசமுச வென்று ஒரே பேரிரைச்சல். ராய்பக தூரின் மகிழ்ச்சிக்கு ஓர் எல்லை இல்லை. இப்படி அவர் தலைகால் புரியாமல் நின்று கொண்டிருக்கும்பொழுதே வண்டி வந்து பிளாட்பாரத்தில் நின்றது.

இரண்டாம் வகுப்புப் பெட்டியிலிருந்து ஒரு சிறிய பெட்டியுடன் நீண்ட கேசங்களும் பெரிய பெரிய விழிகளும் படைத்த மயில் ஸ்டோன் இறங்கினார். அதேநேரத்தில் முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து ஈடு இணையற்ற அழகி ஒருத்தி விலையுயர்ந்த வாயில் பட்டுச் சேலை உடுத்து, ஜரிகை வேலைப்பாட்டுடன் கூடிய காஷ்மீரச் செருப்பும் கையிலே டம்பப் பையுமாக மிக ஒயிலாக, ஒய்யாரமாக இறங்கி னாள். அவ்வழகியுடன் இரண்டு மாதிறப் பெண் களும் இறங்கினார்கள். இரண்டு பணியாட்கள் 'லக்கேஜ்'களை இறக்குவதில் ஈடுபட்டனர்.

''அதோ பார்! அவள்தான் இந்துபாலா!'' என்று ஒரு குரல் எல்லாக் குரல்களுக்கும் மேலாக ஒலித்தது.

கண் மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள் கூட்டம் அனைத்தும் அந்தப் பக்கம் சாய்ந்து விட்டது. கடலெனப் பொங்கிய மக்கள் மத்தியிலிருந்து மயில்ஸ்டோனை அழைத்துச் செல்வது ராய்பகதூருக்குப் பெரும்பாடாகி விட்டது. எப்படியோ 'கேட்'டைத் தாண்டி அவர்கள் வெளியே வந்தார்கள்.

மயில்ஸ்டோனுக்கும் ஒன்றும் புரியவில்லை. 'ஒரு வேளை தம்மைப் பார்க்கத்தான் இத்தனை கூட்டம் கூடியிருக்கிறதோ?' என்று எண்ணி, ''இவர்கள் எல்லோரும் இந்த ஊர்க் கல்லூரி மாணவர்களா? இவர்களை யெல்லாம்எனக்கு அறிமுகப்படுத்தி வைக்க மாட்டீர்களா, சட் டர்ஜி?'' என்று கனிந்த குரலில் கேட்டார்.

ராய்பகதூர், உதார குணமும் குழந்தைக் குணமும் படைத்த விஞ்ஞானத் தத்துவ முனி வரின் பிரமையைப் போக்கி உண்மையை

உடைக்கும் பாவத்தைச் செய்ய அந்த நேரத்தில் விரும்பவில்லை.

ராணுகாட்டில் பல்கலைக் கழகமா? ஐயோ! எந்த நாட்டுக்கு இவர் வந்துள்ளார்? இது ஐரோப்பா இல்லை என்பதை இவர் மறந்து விட்டாரா என்ன?

நீரேன்பாபு மிகப் பிரயாசையின் பேரில் அவ்வூர்த் தொழில் பிரமுகரான கோபால் பாபு என்பவரிடம் கெஞ்சிக் கூத்தாடி 1957-ம் வருஷத்துப் பழைய மாடல் கார் ஒன்றைப் பெற்றிருந்தார். அதில் ஏறி எல்லோரும் நகரசபை ஹாலுக்குப் புறப்பட்டார்கள். ஸ்டேஷனையும் கூட்டத்தையும் பின்னே தள்ளிச் சிறிது தொலைவு வந்ததும், ஒரு திருப்பத்தில் நீரேன் பாபுவும் கோபால பாபுவும் வண்டியை நிறுத்தி இறங்கிக்கொண்டார்கள். ''சீக்கிரம் வந்து விடுங்கள்!'' என்று ராய்பகதூர் அவர்களுக்கு ஞாபகப் படுத்தினார்.

எதிரே நகர சபை ஹால் இருந்தது. ஸ்டேஷனுக்கு அருகில்தான். ஆனால் இது என்ன? மணி ஐந்தரை என்று நிகழ்ச்சிநிரலில் குறிப்பிட்டிருந்தது. ஐந்தே முக்காலும் அடித்துவிட்டது. ஆனால் யாருமே வரவில்லை. ஏன் ஒருவரையுமே காணவில்லை? நகரசபைக் காரியாலயத்துக் குமாஸ்தா ஜீவன்பாதுடி மட்டும் ஒரு சிறிய மேஜையைப் போட்டுக் கொண்டு ஏராளமான டிக்கெட்டுகளைப் பரத்தி வைத்துக் கொண்டு, சொற்பொழிவைக் கேட்க வரும் மக்களை எதிர் நோக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

மயில்ஸ்டோனும் ஆச்சரியத்தோடு மக்கள் இல்லாத ஹாலை ஒருமுறை நோட்டம் பார்த்து விட்டுக் கேட்டார்:

''ஏன் இன்னும் யாருமே வரவில்லை? எல்லோரும் ஸ்டேஷனிலேயே கூட்டம் கூடி நிற்கிறார்களா? மிஸ்டர் சட்டர்ஜி, ஒரு கரும் பலகைக்கும் ஏற்பாடு செய்தால் நலம்.''

ஐயோ, கரும் பலகையா? என்ன இருந்தாலும் ராய்பகதூருக்கு ராணுகாட்டின் நிலை தெரியும். அதன் உயிர்நாடியை உணர்ந்தவராயிற்றே அவர்! வெறிச்சோடிய விழிகளும் நம்பிக்கை இழந்த பார்வையுமாக நாற்புறமும் ஒருமுறை சுற்றிப் பார்த்தார்.

ஜீவன்பாதுடி மெதுவான குரலில், ''மூன்றே ரூபாய்க்குத்தான் டிக்கெட்டுகள் விற்றிருக்கின்றன. அந்த மூன்று ரூபாய்களும் இன்னும் கைக்குக் கிடைக்க வில்லை. என்ன செய்வது சார்? நான் இன்னும் எத்தனை நேரம் இங்கிருக்க வேண்டும்? வீட்டில் உள்ளவர்களை அழைத்துக் கொண்டு நான் வாணி தியேட்டர் வேறு போக வேண்டியிருக்கிறது!'' என்றார்.

அதோடு சிறிது நேரத்துக்கெல்லாம் ஜீவன் பாதுடி பாக்கி டிக்கெட்டுகளை அவரிடம் ஒப்படைத்துவிட்டு மெதுவாக அங்கிருந்து நழுவி விட்டார். ஹாலில் நாற்காலியும் மேஜையும் போடப்பட்டிருந்தன. ஆனால் மனித சஞ்சாரமற்ற காடாக திகழ்ந்தது அது. அதில் இருவர் மட்டுமே இருந்தனர். ஒருவர் ராய்பகதூர்; மற்றொருவர் மயில்ஸ்டோன்.

மயில்ஸ்டோன் தமது கைப் பெட்டியிலிருந்து பொருள்களை யெடுத்து மேஜையின் மீது பரப்ப முனைந்தார். அப்பொருள்கள் எல்லாம் அவரது சொற்பொழிவின் போது உபயோகப்படக் கூடியவை. இதுதான் தருணம் என்று ராய் பகதூர் வாசற்புறம் சென்றார். இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடி வரை பதற்றமுடன் பார்க்கலானார்.

பகட்டான உடை உடுத்தி விதம் விதமாக அலங்கரித்துக் கொண்டு மக்கள் வாணி தியேட்டரை நோக்கிச் சாரி சாரியாகப் போய்க்கொண்டிருந்தனர்.

ராய்பகதூருக்கு அறிமுகமான வக்கீல் ஒருவரும் கையில் பிரம்பை எடுத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக வேகமாகக் கூட்டத்துக்குப் பின்னால் போய்க் கொண்டிருந்தார். ராயபகதூரைப் பார்த்ததும், ''என்ன சமாசாரம்? விஞ்ஞானி மயில்ஸ்டோன் வந்து விட்டாரா? ஹாலுக்குள் மக்கள் வந்திருக்கிறார்களா? இன்று துர்ப்பாக்கியவசமாக இரண்டும் 'க்ளாஷ்' ஆகிவிட்டது. இன்னொரு சமயமாயிருந்தால்... பேசி என்ன பயன்? வேறு வழியில்லை. என்ன செய்வது? வீட்டில் பெண் பிள்ளைகள் எல்லோரும் தியேட்டருக்குப் போயிருக்கிறார்கள். அவர்களுக்குத் துணை யாரும் இல்லை. அதனால் வேறு வழியின்றி நானும்..... வரட்டுமா?'' என்று சொல்லிக் கொண்டே போய் விட்டார்.

அரை மணி நேரம் ஆகிவிட்டது. ஆறரை அடித்து விட்டது. ஆறே முக்கால், ஏழு என்று நேரம் ஓடியும் ஒருவரைக் கூடக் காணோம்.

வாணி சினிமா தியேட்டரில் மக்கள் கூட்டம் கடல் போலப் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. ராய்பகதூர் சட்டர்ஜியும் கூட்டத்தைத் தள்ளிக் கொண்டு ஹாலுக்குள் நுழைந்தார். கோபால பாபு எதிரே உட்கார்ந்திருப்பதைக் கண்டுவியந்தார். அவருக்கு அருகிலேயே சிறிது தொலைவில் நீரேன் பாபுவும் உட்கார்ந்திருந்தார். ''என்ன நீங்களும் இங்கேயா?'' என்று கேட்டார் ராய்பகதூர்.

திடீரென்று தங்கள் ரகசியம் அம்பலமாகி விடவே, கோபால பாபு தலையைச் சொறிந்து கொண்டு, ''இங்கு வரும் உத்தேசம் எனக்கு இல்லை. ஆனால் என்ன செய்வது? இல்லை, இல்லை. நீங்களே சொல்லுங்கள். வேறு வழி? வீட்டுப் பெண்டிர்களை அழைத்து வரவேண்டியிருந்தது. அது போகட்டும். மயில்ஸ்டோனின் சொற்பொழிவு எப்படி இருந்தது? பேச்சைக் கேட்க ஜனங்கள் வந்திருந்தார்களல்லவா?'' என்று விசாரித்தார்.

''எப்படி வருவார்கள்? நீங்கள் எல்லாருமே இங்கே இருக்கும் பொழுது, மற்றவர்கள் எங்கிருந்து வரப் போகிறார்கள்?''

''மிஸ்டர் மயில்ஸ்டோன் எங்கிருக்கிறார்? போய் விட்டாரா?''

''இதோ!''

குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தால் ராய்பகதூருக்குப் பின்னால் மிஸ்டர் மயில்ஸ்டோன் அவர்களே நின்றுகொண்டிருந்தார்.

ஸ்ரீ கோபால் பாபு அவசரம் அவசரமாக எழுந்து நின்றார். தமது ஆசனத்தில் மிகவும் மரியாதையோடு மிஸ்டர் மயில்ஸ்டோனை உட்கார வைத்தார். அதே நேரத்தில் மேடை மீது இந்து மாலா தோன்றினாள்!

ஆதாரம் : **ஸ்ரீ விபூதி பூஷண் வந்த்யோபாத்தியாயரின் வங்காளிக் கதை.**

படித்துப் பாருங்கள்



Tagore—A life

கவி அரசர் ரவீந்திரநாத தாகூரைப் பற்றி மதிப்பீடு செய்யப் புகுவது சுலபமல்ல. அவர் உயர்ந்த சிந்தனையாளர், யோகியார். சமூக சீர்திருத்தவாதி, பாரதப் பண்பாட்டை உலகில் பரப்பிய ஒப்புயர்விலாத் தூதர். கல்வியின் சாரத்தை ஆய்ந்துணர்ந்தவர். உலகப் பிரஜைகள் என்ற சின்னஞ் சிறு வர்க்கத்தைச் சேர்ந்தவர். பொருளியல் முன்னேற்றத்தில் கருத்துள்ளவர். இணையில்லாத இலக்கிய கர்த்தா. இவ்வளவுக்கும் மேலாகப் பாரதத்தின் பண்டைய கால மகரிஷிகளுடைய தன்மையையும், பண்பையும் பூரணமாகப் பெற்றவர். பாரதம் நமக்களித்த உயர் செல்வம்.

இப்படிப் பல துறைகளிலும் தாகூரின் சிறப்புக்கள் பரவியிருந்தாலும், இலக்கிய கர்த்தா கவி சிரேஷ்டர் என்றே அவருடைய பெயர் நிலைத்து விட்டது. இலக்கியத்துக்கு அவர் புரிந்த உயர் பணியை முக்கியமாக வைத்துத் திரு கிருஷ்ண கிருபளானி இருநூறு பக்கங்கள் கொண்ட இந்தச் சிறு நூலில் தாகூரின் வாழ்க்கைச் சரிதத்தை வெகு லாகவமாகவும் விறுவிறுப்புடனும் சித்திரித்துள்ளார். அவர் வெளியிடவிருக்கும் விரிவான நூலின் சுருக்கமே இச்சிறு நூல் என்று தெரிகிறது. குழந்தைப் பிராயத்தில் கல்கத்தாவில் உள்ள ஜோராஸங்கோவில் தமது பழமையான பிதுரார்ஜித மாளிகையில் கழித்த நாள் முதல் தமது 83-வது வயதில் அமைதி என்னும் சாகரத்தில் ஒன்றிப்போன வரையில் தாகூரின் வாழ்க்கைச் சித்திரங்கள் படத்தில் காணும் ஓவியங்கள் போல் இந்நூலின் பக்கங்களில் காட்சி தருகின்றன. அநாவசியமான சிறு சம்பவங்கள் புகுத்தப்படாமல், உணர்ச்சிகளைத் தூண்டி எழுப்பாமல், பாவங்களில் ஏற்றத் தாழ்வை உண்டாக்காமல், மிதமான வார்த்தைகளைச் செட்டாக உபயோகப்படுத்தி, ஆசிரியர் தாகூரின் வாழ்க்கையை விவரிக்கிறார். பிரயாசையுடன், சொல்வன்மைக்காக மட்டும் எழுதப்படும் நடையினால் ஏற்படக் கூடிய உணர்ச்சிகளைவிடச் சொற் செட்டுடன் அமைந்த நடை படிக்க இனிமையாக இருப்பதுடன் விஷயத் தெளிவுக்கும் சாதகமாக உள்ளது. 'தபால் ஆபீஸ்' என்னும் கட்டுரையில் வரும் அமல் என்பவனைப் போலவே சிறுவன் தாகூர் குளத்தடியில் மர நிழலில் உட்கார்ந்து ஆச்சரியத்துடன் உலகக் காட்சிகளைப் பார்த்து அதிசயிப்பதும், பள்ளிப் பாடங்களை முறைப்படி படிக்க முயல்வதும், இடையிடையே நோட்டு முழுதிலும் கவிதைகள் நிரப்புவதையும், தமது தகப்பனார் மஹரிஷியுடன் சாந்திநிகேதன் இமாலயம் முதலிய பிரதேசங்களுக்குச் செல்வதையும், 'இயற்கையின் வேதனை', 'பானுஸிம்ஹனின் பதங்கள்' போன்ற ஆரம்பக் கவிதைகளுக்கு உற்சாகம் ஊட்டிய மூத்தவர் த்விஜேந்திரநாத் தாகூரின் தோழமையையும், இந் நூலில் தெளிவாகக் காணலாம். அவருடைய முதல் இங்கிலாந்து விஜயமும், அதன் பிறகு அவருக்கு ஏற்பட்ட ஆத்மானுபவமும், அவருடைய உள்ள முதிர்ச்சியையும் அதற்குப் பின் அவர் புனைந்த ''மாலைக் கீதங்கள்'' எடுத்துக் காட்டுகின்றன. தாகூரின் இலக்கிய வளர்ச்சியில் இதை ஒரு திருப்பம் என்றே சொல்ல வேண்டும். இதற்குப் பின் அவர் புனைந்த ஒவ்வொரு கவிதையும் ஒன்றைப் போல் மற்றொன்று இல்லாமல் தனித் தனி அழகும் மெருகும் பெற்று விளங்குகின்றன. அவர் செயல்களும், உள்ளத் துடிப்புக்களும் பல்வேறு விதங்களில் வெளிப்பட்டன. சாந்தி நிகேதன் பள்ளியை ஆரம்பித்தது ஒன்று. வங்காளப் பிரிவினையின் போது உணர்ச்சி மிக்க பிரசாரங்கள் செய்தது மற்றொன்று. 'ஸாதனா' போன்ற இலக்கிய சிருஷ்டிகள் மேலும் ஒன்று. இப் படைப்புக்களில் சிந்தனை வேகமும், உள்ளக் கிளர்ச்சிகளும், செயல் முறைகளும் ஒன்றோடு ஒன்று பின்னிக் கிடக்கின்றன.

இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையின் தத்துவங்களை விளக்குவதற்குத் தாகூரின் புறச் சூழ்நிலைகளை மட்டும் விவரித்தால் போதாது. அவருடைய மனவளர்ச்சியையும், உள்ள முதிர்வையும், புற நிகழ்ச்சிகளைக் கொண்டு விளக்கி வைக்க வேண்டும். இவற்றின் நடுவே எல்லாவற்றையும் இணைக்கும் ஆதாரமாக நூலிழை போல் ஊடுருவிச் செல்லும் தாகூரின் தனித் தன்மையை எடுத்துக் காட்ட வேண்டும். இத் தனித்தன்மைதான் தாகூரின் இலக்கியத்திலும், சொல்லிலும், செயலிலும் இயைந்து வெளிப்படுகிறது.

இத்தகைய ஒரு வாழ்க்கைச் சித்திரத்தை ரசமாகவும் உண்மைக்கு மாறாமலும், அனுதாபத்துடனும் எழுத வேண்டுமானால் ஆசிரியருக்கும்கூடக் கவிதை உள்ளமும் காவிய நயமும், இலக்கிய ரசனையும் உள்ளவராக இருந்தால் தான் முடியும். திரு கிருஷ்ண கிருபளானியின் புத்தகத்தில் இந்தச் சிறப்புக்கள் அனைத்தும் ஒன்றாகக் கூடியுள்ளன. பல துறைகளிலும் விரிவான ஒரு வாழ்க்கை வரலாறு எப்படி எழுதப்பட வேண்டும், எந்தெந்தச் சம்பவங்களை எடுத்துக் கொள்ள வேண்டும், எவற்றை விடவேண்டும், எந்த பாவங்களை வெளிக் கொணர வேண்டும் என்பதற்குத் திரு கிருஷ்ண கிருபளானியின் இந்த நூல் ஓர் உதாரணம் என்றே சொல்லலாம். தாகூரைப் பற்றிக் குறை கூறுபவர்களுக்கும் அவர்களின் கூற்றுக்களுக்கும் கூட இந்நூலில் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. இது ஆசிரியரின் ஆராய்ச்சி ஆர்வத்தையும், உள்ளதை உள்ளபடியே சித்திரிக்க வேண்டும் என்ற அவாவையும் காட்டுகின்றன. தாகூரைப் பற்றி ஆசிரியர் கூறும் சில கருத்துக்களும், மதிப்பீடுகளும்கூட இத்தகைய பட்சபாதமற்ற குறிப்புக்களால் வலிமை பெறு

கின்றன. ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கும் தாகூர் – வாழ்க்கைச் சித்திரம் ஓர் அருமையான நூல்; தாகூரின் சிறப்பையும் இலக்கிய உயர்வையும் பற்றி அழகாகச் சொல்லிவிட்டுத் தமது இலக்கிய ரசிகத் தன்மையையும் புலமையையும் கூடவே ஆசிரியர் ஆங்காங்கே புலப்படுத்தியுள்ளார்.

Author: Krishna Kripalani, Malancha, New Delhi. Price Rs. 12.50.

வேங்கடம் முதல் குமரிவரை - பொன்னியின் மடியிலே

உண்மை, நன்மை, அழகு என்பனவற்றை உள்ளவாறு உணர்ந்து அனுபவத்திலே மக்களின் குறிக்கோள் என்பது மேலை நாட்டவர் கொள்கை. இவற்றை நடைமுறையில் திருக்கோயில்களின் மூலம் நடத்திக் காட்டி வருகின்றனர் நமது நாட்டினர். உண்மையை அடிப்படையாகக் கொண்டது தத்துவம். நன்மையை அடிப்படையாகக் கொண்டது அறநெறி. அழகை அடிப்படையாகக் கொண்டது கலை. இம் மூன்றும் இணைந்து விளங்கும் எழில் நிலையங்களே நமது நாட்டுத் திருக்கோயில்கள். இக்கோயில்களுள் உள்ள திருவுருவங்கள், கோபுரங்கள், விமானங்கள், சிற்பங்கள், சித்திரங்கள், கல்வெட்டுக்கள் முதலியன நமக்கு அளவிலா உண்மைகளை விளக்குகின்றன. நன்மைகளை நவில்கின்றன. கலைகளின் பெருமைகளைக் காட்டுகின்றன. இவற்றையெல்லாம் தெளிய உணர்ந்து வழிபடுவோர் சிலரேயாவார். ''நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற திருமூலர் வாய்மொழிக்கிணங்கத் தாம் திருக்கோயில்களில் கண்டறிந்த தத்துவ உண்மைகளையும், அறநெறி நன்மைகளையும், கலை அழகினையும் எல்லோரும் தெரிந்து ஈடுபட வேண்டும் என்ற பேரார்வத்தோடு இந்நூலை எழுதியுள்ளார் ஆசிரியர். கல்கியில், 'வேங்கடம் முதல் குமரி வரை' என்ற தலைப்பில் எழுதி வந்த கட்டுரைகள் இருபத்தேழு கட்டுரைகள், பெரும்பாலும் பாலாற்றின் கரையிலுள்ள திருக் கோயில்களைப் பற்றியன. ஆதலின் ''பாலாற்றின் மருங்கிலே'' என்ற பெயரோடு முதல் பகுதி வெளி வந்தது. அதை அடுத்து வெளி வந்துள்ள இந்நூல் முப்பது கட்டுரைகளைக் கொண்டு இரண்டாம் பகுதியாக மிளிர்கின்றது. இந்நூலில் பெரும் பகுதியாகக் காவிரிக் கரையில் உள்ள திருக் கோயில்கள் இடம் பெற்றுள்ளன. ஆதலின் ''பொன்னியின் மடியிலே'' என்ற பெயரோடு வெளிவந்திருப்பது மிக்க பொருத்தமாகவே உள்ளது.

இதன்கண் உள்ள முப்பது கட்டுரைகளும் முப்பது திருக் கோயில்களைப் பற்றி விளக்கமாக அறிவிப்பதோடு, அவ்வத் திருக்கோயில் கட்கு அண்மையிலுள்ள கோயில்களைப் பற்றியும், எடுத்துக் கொண்ட திருக் கோயில்களோடு புராணம், வரலாறு முதலியவற்றால் தொடர்பு கொண்ட திருக்கோயில்களைப் பற்றியும் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் முருகன் கோயில் பற்றிய கட்டுரை ஒன்றும், திருமால் கோயில் பற்றிய கட்டுரை மூன்றும், சிவன் கோயில் பற்றிய கட்டுரை இருபத்தாறும் உள்ளன. சிவன் கோயில்களுள் கங்கைகொண்ட சோளேச்சுரமும், திரிபுவனமும் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. மற்ற இருபத்திநான்கு கோயில்களும் வரலாற்றுச் சிறப்போடு சைவ சமயாச்சாரியார்களால் பாடல் பெற்ற சிறப்பும் உடையவை. இக் கருத்துக்களையெல்லாம் ஆசிரியர் ஆங்காங்கு தெளிவுபடுத்துவதுடன் ஒன்றிரண்டு பாடல்களையும் விளக்கி அறிமுகம் செய்து வைக்கிறார். எல்லோரும் இக்கட்டுரைகளைப் படிப்பதற்கும், இறை வழிபாட்டில் ஈடுபடுவதற்கும் ஒவ்வொரு கட்டுரையின் தொடக்கத்திலும் உலகியல் பற்றிய சிறுகதை ஒன்றை அறிமுகம் செய்து வைக்கிறார். பிறகு அதனோடு அக் கோயில் வரலாற்றைத் தொடர்புபடுத்திக் காட்டுகிறார். இந்த வகையில் ஆசிரியர் படிப்போர் உள்ளத்தைக் கவர்ந்து வெற்றி கண்டுள்ளார் என்றே சொல்ல வேண்டும்.

பாகப் பிரிவினையைப் பற்றிக் கதை சொல்லிக் கொண்டே திருவாமாத்தூருக்கு அழைத்துச் சென்று விடுகிறார். சித்த மருத்துவத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டே நம்மையெல்லாம் சித்தாமிர்த தீர்த்தம் உள்ள வைத்தீசுவரன் கோயிலுக்கே கொண்டுபோய் விடுகிறார். இந்நூல் திருக் கோயிலுக்குச் சென்று வழிபடாதிருப்பவர்களை வழிபடத் தூண்டுகிறது. கோயிலுக்குச் செல்லுவோர் உண்மை உணர்ந்து வழிபடவும், நன்மை கடைப்பிடிக்கவும், கலை இன்பம் நுகரவும் துணை புரிகிறது. ஆசிரியரின் கலை பயில் தெளிவும், கட்டுரை வன்மையும் இந்நூலில் நன்கு புலனாகின்றன. சிவன் கோயிலுக்கு அழைத்துப் போகும் போது ஆசிரியர், தாம் ஒரு சிவ பக்தராகவும் வைணவக் கோயில்களுக்கு அழைத்துப் போகும்போது ஒரு பரம பாகவதராகவும் வந்து விளக்கம் செய்கிறார்.

இதற்கு முந்திய முதற் பகுதி நூலைத்தான் பெரிதும் போற்றி மதிக்கப் பெறும் நூலாசிரியர் இரசிகமணி திரு டி. கே. சி. அவர்கட்குச் சமர்ப்பித்த ஆசிரியர், இவ் விரண்டாம்பகுதி நூலைத் தம்மால் பெரிதுவந்து போற்றப் பெறும் ஞானாசிரியர், தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமஹா சந்நிதானமவர்கள் அடிமலர்களுக்குச் சமர்ப்பித்திருப்பது மிக்க பொருத்தமாக இருப்பதோடு ஆசிரியரின் குருபக்தியையும், தெய்வ பக்தியையும் நன்கு புலப்படுத்துவதாகவும் உள்ளது. ஆசிரியர் மேலும் இத்தகைய அருள்நெறி வளர்க்கும் நூல்களை உலகுக்கு உதவி நலமுடன் வாழவும், சமய அறிவை வளர்க்கும் இத்தகைய நூல்களை அவ்வப்போது ''கல்கி'' வாயிலாக வளர்த்து வரும் கல்கி ஆசிரியர் சிறப்புற்றுத் திகழவும், இக் கட்டுரைகளைத் தொகுத்து நல்ல முறையில் வெளியிட்டு வரும் திரு எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை இனிது வாழவும் இறைவனைப் பிரார்த்திப்போமாக. சில எழுத்துப் பிழைகளும், சொற் பிழைகளும் இல்லாமல் இருந்தால் பொன் மலர் மணமும் பெற்றுத் திகழ்வது போலாம். **–சோமசுந்தரத் தம்பிரான்**

பிரசுரம்: எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை, சென்னை-1, திருநெல்வேலி ஜங்ஷன் விலை: ரூ. 3-50.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited. at the Kalki Press. Kilpauk. Madras-10.
Managing Editor. T. Sadasivam.

அருமையான பொருள்களுக்கு உரிமையான இடமெதுவோ அங்கே...

ஆதரவுக்கு ஆதரவான அன்னைக்கு ஆதரவு: டால்டா



ஆடி வரும் தேனே' என அள்ளி யணைத்து ஆரமுதூட்டத் தேடி
ரும் உறவு...அன்னை! அவள் தருவதெல்லாம் உயர்வு...அறுசுவை
ணவு ... எல்லாம் ஆசைக்கினியவை ... டால்டா வனஸ்பதியினல்
மைத்தவை! தரத்திலுயர்ந்த தாவர எண்ணெய்களாலான
ால்டா ... சுகாதார முறைப்படி ஸீலிட்ட டப்பாக்களிலே புதுமை
யாடு வரும் தூய்மையான டால்டா ... வளரும் கண்மணிகளுக்கு
வண்டிய வைட்டமின்கள் அடங்கிய வனஸ்பதி ... எந்த நாளும்
ம்மவர்க்கே சொந்தமன்றோ...



ால்டா வனஸ்பதி: அறுசுவைச் சமையலுக்கு உறுதுணை

நுஸ்தான் லீவர் தயாரிப்பு.

DL. 79-X52 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



அழகென்னும் குலதனமாம்
அதனை வசங்கொள்ளும் சாதனமாம்...
தங்கநிறக் கனியென சிறப்படைந்த சோப்...
மகாராணி! தென்னாடும் சந்தனச் சத்தும்,
வளமார்ந்த வாதுமை எண்ணெயும்
இணைந்த சோப்...காலத்தை வென்ற எழிலுக்குக்
கட்டியங்கூறி வரவேற்கும் 'தங்கக்கட்டி'!

மகாராணி சந்தன சோப்

அழகுசாதன சோப்புக்களில் அரசியர்க்கரசி; வாதுமை எண்ணெய் கலந்துள்ள சோப்

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு MHR. 7-50 TM.